புகழ் பூத்த தமிழர்

(முதல் பாகம்)

வே. ரா. சுந்தரராமன்

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை

பதிவு] [விலை ரூ. 1/-

முதற் பதிப்பு: பெப்ருவரி, 1950.

சமர்ப்பணம்

என்னை ஈன்றபொழுது பெரிதுவந்த என் அருமைத் தாய் தந்தையர் காலஞ் சென்ற அம்பாள் அம்மாளுக்கும் ராம கிருஷ்ண ஐயருக்கும் இது அர்ப்பணம்.

PRINTED AT
THE MADRAS LAW JOURNAL PRESS,
MYLAPORE, MADRAS

முகவுரை

செயற்கரிய செய்த பெரியார் பதின்மரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களை இச் சிறு புத்தகத்தில் கொடுக்கிறேன்.

“பெரியவர் சரிதை நம்மைப்
பெரியவ ராக்கி நாமே
அரியவாழ் நாளாம் பாலை
வனத்திடை யலைவோ ருக்குத்
துரிசற வழியைக் காட்டுஞ்
சுவடுறச் செய்யும் வன்மை
மருவலா மென்று மெண்ணை
மனங் கொளச் செய்யு மன்றே”

என்னும் மொழிபெயர்ப்புச் செய்யுளில் சொல்லியிருப்பதுபோல் பெரியாரின் வாழ்க்கை பிறருக்குச் சுவடுபோல் அமைந்து உதவுகிறது. இவர்கள் கொண்ட முறைகளைப் பின்பற்றினால் நாமும் நம் வாழ்க்கையை, “தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று” என்னும் பொய்யாமொழிக் கேற்ப அமைக்கலாம்.

இப் பத்து வரலாறுகளுள் மூன்று (அதாவது 1, 2, 6) ‘கலைமகளிலும்’ ஐந்து (அதாவது 3, 4, 5, 7, 9), ‘பாரத மணி’ யிலும், ஒன்று (அதாவது 10) ‘அமுத சுரபி’ யிலும் ஏற்கனவே வெளிவந்தவை. அவைகளைத் தத்தம் பத்திரிகைகளில் வெளியிட்டதற்கும், இப்போது புத்தக வடிவில் வெளிவரச் சம்மதித்ததற்கும் அவ்வப்பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு என் நன்றி. எஞ்சியிருப்பது (அதாவது-8) முதல் முதலாக இப்புத்தகத்தில்தான் வெளிவருகிறது.

இவைகளை நான் எழுதுவதற்குத் தக்க ஊக்கம் அளித்தவர்கள் ‘கலைமகள்’ ஆசிரியரான ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்களும், ‘பாரதமணி’ ஆசிரியரான ஸ்ரீ கா. சி. வேங்கடரமணி அவர்களும், பிரபலத் தமிழ்நாட்டு எழுத்தாளர் ஸ்ரீ வ. ரா. அவர்களுமே. இம்மூவருக்கும் நான் கைம்மாறு செய்வது எவ்வாறு என்று தெரியாது மனம் ஏங்குகிறேன்.

சென்னை,
26-1-1950.

வே. ரா. சுந்தரராமன்

பொருளடக்கம்

பக்கம்

ஆசிரியருக்கு ஏற்ற மாணவன் 1

எண்களின் தோழர் 14

குடியேற்ற நாட்டுக்குச் சென்ற கணக்காயர் 30

இருந்தமிழினால் இருந்தவர் 38

உவமையினால் அரசு புரிந்தவர் . . . 53

அந்நிய மொழிக்கு அழகு கொடுத்தவர் . 65

நிதிமந்திரியின் செவிலித்தாய் . . . 72

தென்னாட்டு டாகுர் 81

கூட்டங்களின் மனத்தைக் கொள்ளை கொண்டவர் 90

தவக்கோலத்தில் ஒரு தமிழ்க்கடல் . 101

புகழ் பூத்த தமிழர்

1

ஆசிரியருக்கு ஏற்ற மாணவன்

ஆவலைகளைப்பற்றிப் பேச்சு எழுந்தது. பலர் பல அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர். பெரும்பாலோரின் கருத்து எளியோர்களே கவலைக்கு இருப்பிடமாகின்றனர் என்பது. அவர்களில் ஒருவர், "அப்படிச் சொல்லுவதற்கில்லை. செல்வர்களும் கவலையில் ஆழ்ந்திருக்கின்றனர். ஆனால் அவர்களுடைய கவலையின் மாதிரியே வேறு. பிறரைப்போல் இயற்கையாகக் கவலை யென்பது இவர்களுக்கு உண்டாகாத போதெல்லாம் செயற்கையில் கவலைகள் பலவற்றை ஏற்படுத்திக்கொண்டு அவற்றைக் குறித்து வருந்துவார்கள். உதாரணமாக: என் நண்பர் ஒருவர் பெருத்த தனவந்தர். அவருக்குக் கவலையே இருக்கக் காரணமில்லை, ஆனால் தம்முடைய மாளிகையின் தோட்டத்தில் ஒரு ரோஜாச் செடியை வைத்துவிட்டு அது சரிவரப் புஷ்பிக்க வேண்டுமே என்று சதா கவலைப் படுவார்" என்று முடித்தார். எல்லோரும் சிரித்தனர்.

மேற்கூறிய சம்பாஷணையைக் கூறிவிட்டு அப்படிப் பேசியவரைச் சிலாகித்தார் என் நண்பர் ஒருவர்; சுமார் பத்து வருஷங்களுக்கு முன்.

"அவர் யார்?" என்றேன்.

"அவர் டாக்காவிலிருந்து வந்திருந்தார். அங்குள்ள கலாசாலையில் பௌதிக சாஸ்திரம் போதிப்பவராம். அவர் பேச்சிலேயே ஒரு வசீகரமும் சாதுரியமும் இருக்கின்றன. நீங்கள் அவசியம் அவரைக் காண வேண்டும்" என்றார் என் நண்பர்.

இதுதான் நான் முதல் முதல் டாக்டர் கிருஷ்ணையங்காரைப்பற்றிக் கேள்விப்பட்டது. பிறகு சில மாதங்களுக்கெல்லாம் தெய்வச் செயலாக நானே டாக்காவுக்குப் போக நேர்ந்தது. அங்கே ஒரு பொது நண்பர் மூலம் இவருடைய பரிசயம் எனக்கு ஏற்பட்டது.

இவர்தான் பௌதிக சாஸ்திரத்தில் அரிய பரிசோதனைகளைச் செய்ததன் பயனாக எப். ஆர். எஸ். (F.R.S.) என்று சொல்லப்படும் உலகப் பிரசித்தியடைந்த பட்டத்தைப் பெற்றிருக்கும் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் என்பவர். இப்பட்டம், 'மன்னர்பிரான் சங்கம்' என்னும் சங்கத்தின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்திருப்பதைக் குறிக்கும். பல வருஷங்கள் டாக்கா ஸர்வகலாசாலையில் வேலைபார்த்துவந்த பின்பு இவர் சில வருஷங்கள் கல்கத்தாவிலேயே இருந்து அங்குள்ள இந்திய விஞ்ஞான வளர்ச்சிச் சங்கத்தில் (Indian Association for the cultivation of Science) தம்முடைய ஆராய்ச்சி வேலையை நடத்திவந்தார்.

இவருடைய முழுப் பெயர் கரியமாணிக்கம் ஸ்ரீநிவாச கிருஷ்ணன் என்பது. இப் பெயரிலுள்ள கரியமாணிக்கம் என்பது இவருடைய குடிப் பெயர். 'சக்கரவர்த்தி', 'பிரதிவாதி பயங்கரம்', 'கந்தாடை' என்று வழங்கப்படும் ஏனைய வைஷ்ணவ சமூகக் குடிப் பெயர்களை ஒத்தது. ஸ்ரீநிவாச என்பது இவருடைய தந்தையாரின் பெயரைக் குறிப்பது. இவர் தென்கலை வைஷ்ணவப் பிராமணர். இவர் ராமநாதபுரம் ஜில்லா, ஸ்ரீவில்லிபுத்தூர்த் தாலுகா, வத்திராயிருப்பு என்னும் ஊரைச் சேர்ந்தவர். அவ்வூரில் இவர் 1898-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 4-ஆம் தேதி பிறந்தார். தம்முடைய ஆரம்பப் படிப்பை இவர் ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஹிந்து மாணவர்கள் பாடசாலையில் முடித்துக்கொண்டார். அதற்குப் பின் இவருடைய உயர்தரப் படிப்பு மதுரையிலுள்ள அமெரிக்கன் கலாசாலையிலும் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையிலும் நடந்தது.

படிப்பு முடிந்ததும் முதல் முதலில் இவர் தம்முடைய தாய்க் கலாசாலையாகிய சென்னைக் கிறிஸ்தவ கலாசாலை

லேயே ரஸாயன சாஸ்திரப் பகுதியில் ஒரு குட்டி உபாத்தியாயராக (Demonstrator) அமர்ந்தார். ஆனால் அந்தப் பதவியில் இவர் நீடித்திருக்கவில்லை. இவருடைய அறிவு விடாயைத் தணித்துக்கொள்ள அந்தப் பதவி இடங்கொடுக்கவில்லை. ஆகையால் தம்முடைய ஆராய்ச்சித் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளக்கூடிய ஓர் இடத்தைத் தேட ஆரம்பித்தார். கடைசியில் இவர் 1923-ஆம் வருஷம் நவம்பர் மாதத்தில் கல்கத்தாவில் இருந்து வந்த பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிக்காரரான சந்திரசேகர வேங்கடராமன் (தற்போது ஸர் ஸி. வி. ராமன் என்று அழைக்கப்படுபவர். நோபெல் பரிசு பெற்றவர்.) என்பவரை வந்தடைந்தார். அது முதல் அவருடைய பல ஆராய்ச்சிகளிலும் இவரும் கலந்து உதவி செய்திருக்கிறார். கல்கத்தாவிலுள்ள இந்திய விஞ்ஞான வளர்ச்சிச் சங்கத்தின் ஆராய்ச்சிசாலையில் ஸ்ரீ ராமனுடன் ஒத்துழைத்து வந்த ஒரு சிறு கூட்டத்தில் இவரும் ஒருவரானார்.

ஸர் ஸி. வி. ராமனுடைய முக்கியமான பல பரிசோதனைகளில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டு உழைத்தவர் இவரே. அப்போது பௌதிக சாஸ்திரத்தின் பல பிரிவுகளிலும் இவர்கள் இருவரும் சேர்ந்து ஆராய்ச்சி நடத்தியபோதிலும் பெரும்பாலும் ஒளி என்னும் பிரிவைச் சேர்ந்த விஷயங்களையே ஆராய்ந்தனர். 'ராமன் விளைவு' அல்லது 'ராமன் எஃபெக்ட்' என்னும் உண்மையை ஸர் ஸி. வி. ராமன் கண்டுபிடித்தபோது இவர் அவருக்கு மிகவும் உதவியிருக்கிறார். அவ்வாராய்ச்சியைக் குறித்து எழுதப்பட்ட முக்கிய கட்டுரைகள் இவர்கள் இருவரும் சேர்ந்தே எழுதியவையாகும்.

1928-ஆம் வருஷத்தில் இவர் டாக்கா சர்வ கலா சாலையில் பௌதிக சாஸ்திர உதவிபோதகராக அமர்ந்தார். அங்கும் தம்முடைய ஆராய்ச்சிகளை விடாமல் தனியே நடத்தினார். அங்கே ஆரம்பித்த ஓர் ஆராய்ச்சிதான் பின்பு இவருக்குப் புகழை உண்டாக்கிற்று. இதற்கு 'மாக்னி கிரிஸ்டாலிக் ஆக்ஷன்' (Magne - Crystallic Action) என்று பெயர். இது பௌதிக சாஸ்திரத்தில் 'காந்தம்' என்னும் பகுதியைச் சேர்ந்தது.

இயற்கையில் திடப் பொருள்கள் இருவிதங்களாகக் காணப்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இவைகளுக்கு 'ஒழுங்கான வடிவம்' (Crystalline) என்றும், 'ஒழுங்கற்ற வடிவம்' (Amorphous) என்றும் பெயர் கொடுக்கலாம். இவைகளுள் முதல் இனத்தைச் சேர்ந்த பொருள்களை, 'ஒழுங்கான வடிவமுள்ள பொருள்கள்' (Crystals) எனலாம் இப்பொருள்களின் தன்மைகளை ஸர் வில்லியம் பிராக் (Sir William) Bragg) என்பவர் எக்ஸ்ரே (X-Ray) என்னும் ஒருவித ஒளிக்கிரணத்தைக் கொண்டு நிர்ணயிக்கலாம் என்பதைக் கண்டுபிடித்தார். இவர் பின் சீமையில் ராயல் சங்கத்தின் (Royal Society) தலைவராக இருந்தார். ஆனல் அவர் சொன்ன முறையில் இப் பொருள்களின் பல தன்மைகள் கண்டு பிடிக்கப்படாமல் விடுபட்டுப் போகின்றன. இவைகளை எவ்வாறு நிர்ணயிப்பது என்பது பௌதிக சாஸ்திரிகளால் விடுவிக்கமுடியாத புதிராக இருந்தது. அத்தன்மைகளைக் காந்தம் என்னும் சக்தியின் உதவியினல் நிர்ணயிக்கலாம் என்று டாக்டர் கிருஷ்ணன் கண்டுபிடித்தார். காந்தத்தின் உதவியால் ஒழுங்கான வடிவமுள்ள இந்தப் பொருள்களின் தன்மைகளை ஆராய்ச்சி செய்யும் முறைக்குத்தான், 'மாக்னி கிரிஸ்டாலிக் ஆக்ஷன்' என்று பெயர்.

ஸர் ஸி. வி. ராமன் கல்கத்தாவில் இந்திய விஞ்ஞான வளர்ச்சிச் சங்கத்தின் காரியதரிசியாக இருந்து ஆராய்ச்சி நடத்திவந்தபோது இவர் அச்சங்கத்தில் வகித்து வந்தது கௌரவப்பதவியே. அதற்காகத் தனிச் சம்பளம் அவர் பெறவில்லை. அச்சமயம் அவர் கல்கத்தா சர்வ கலாசாலையைச் சேர்ந்த விஞ்ஞானக் கல்லூரியில் ஸ்தாபித்திருக்கும் ஒரு பெரிய பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிசாலைக்கு மேலதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். பாலித் போதகாசிரியர் என்னும் ஒரு பதவியை வகித்துச் சம்பளம் பெற்று வந்தார். ஆனல் 1933-ஆம் வருஷத்தில் டாக்டர் கிருஷ்ணன் டாக்காவில் தம்முடைய பழைய உத்தியோகத்திலிருந்து விலகி இச்சங்கத்தைச் சேருகையில் இதன் சார்பாக, 'டாக்டர் மகேந்திரலால் சர்க்கார் போதகாசிரியர்' என்னும் ஒரு பதவியைப் புதிதாக உண்டாக்கி

அதில் முதல் முதலாக இவரை அமர்த்தினர். பல வருஷங்கள் அதை இவர் வெகு திறமையுடன் வகித்து வந்ததோடு பல இளைஞர்களுக்கு விஞ்ஞான ஆராய்ச்சியில் அநுபவத்தை உண்டாக்கியும் ஊக்கத்தைப் புகட்டி வந்தார். பின்பு அலகாபாத் சர்வகலாசாலையில் பௌதிக சாஸ்திர ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

இப்பதவியில் இவருக்குப் பேரும் புகழும் வந்து குவிந்தவண்ணமாயிருந்தன. தற்சமயம் இவர் டெல்லியில் தேசீய சர்க்கார் ஸ்தாபித்திருக்கும் ஒரு பெரிய பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிசாலைக்கு மேலதிகாரியாக இருந்து வருகிறார்.

இத்துடன் சுதந்திரம் பெற்றிருக்கும் இந்தியாவின் பிரதம மந்திரியான பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்களுக்கு விஞ்ஞானத்தைப்பற்றிய விஷயங்களில் இவர் வலக்கரமாக அமைந்து உதவிபுரிகிறார். இதனால் பல முறை அயல் நாடுகளுக்குப் போய்வரவேண்டியிருந்திருக்கிறது.

இவருடைய ஆராய்ச்சிகளை மெச்சி இவரைச் சில முறை அயல் நாட்டார் தங்களுடைய தேசங்களுக்கு வரவழைத்து அவற்றைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்வித்திருக்கின்றனர். இவர் 1936-ஆம் வருஷத்தில் ஐரோப்பாவில் போலந்து தேசத்தின் தலைநகராகிய வார்ஸாவில் ஒளி விஷயமாக நடந்த சர்வதேச விஞ்ஞானக் கூட்டத்துக்கு (International Conference on Photoluminescence) வரவழைக்கப்பட்டார். ஆனால் அவகாச மின்மையால் அங்கே செல்ல முடியவில்லை. 1937-ஆம் வருஷத்தில் இங்கிலாந்தில் காவெண்டிஷ் ஆராய்ச்சிசாலை (Cavendish Laboratory), லண்டனிலுள்ள ராயல் சங்கம் (Royal Institution) முதலிய பல இடங்களில் தம்முடைய ஆராய்ச்சிகளைப்பற்றிப் பிரசங்கம் செய்தார். அவ்வருஷம் பெல்ஜியத்திலுள்ள லியேஜ் (Liege) என்னும் கலாசாலையாரால் ஒரு பதக்கமும் அளிக்கப்பெற்றார். சென்ற வருஷம் ஐரோப்பாவுக்கு இவர் மறுமுறை சென்று பிரான்ஸ் தேசத்தின் ஒரு பகுதியாகிய ஆல்ஸேஸ்லொரேய்ன் என்

னும் இடத்திலுள்ள ஸ்ட்ராஸ்பர்க் என்னும் நகரத்தில் காந்த சக்தியின் ஆராய்ச்சியைப்பற்றி நடந்த ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டார். இக்கூட்டம் சர்வதேச சங்கத்தாரால் நடத்தப்பட்டது. இக்கூட்டம் முடிந்ததும் இங்கிலாந்தில் பல கலாசாலைகளில் பிரசங்கங்கள் செய்து புகழுடன் ஊர் திரும்பினார்.

சென்னையில் நடந்த இந்திய விஞ்ஞான சங்கத்தின் இருபத்தேழாவது வருஷாந்தக் கூட்டத்தில் இவர் பௌதிக சாஸ்திரப் பகுதிக்குத் தலைவராயிருந்து கூட்டத்தை நடத்திவைத்தார்.

சாதாரணமாக விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு உழைப்பவர்கள் கிணற்றுத் தவளைபோல் உலகப்போக்கே ஒன்றும் தெரியாதவர்கள் என்பது பொதுஜனக் கொள்கை. ஆனால் இவ்விதிக்கு டாக்டர் கிருஷ்ணன் ஒரு விலக்கு. எந்த விஷயத்தைக் குறித்தும் பேசுவதில் சமர்த்தர். சாதாரண சம்பாஷணையிலும் நகைச்சுவை ததும்பும் படியும், தக்க இடங்களில் பொடி வைத்தும் பேசுவதில் இவர் மிக்க திறமை உடையவர். இவருடன் சற்று நேரம் அளவளாவியபின் இவரை விட்டுப் பிரிய எளிதில் மனம் வராது.

விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக இவர் மத விஷயங்களில் உள்ள பற்றை விட்டுவிடவில்லை. தீவிர தெய்வ பக்தி யுள்ளவர். தம் சமயமான வைஷ்ணவ சமயத்தின் நூல்களாகிய பகவத் விஷயத்தில் பயிற்சியுள்ளவர். அவற்றிலிருந்து பல விஷயங்களை இவர் சொல்லக்கேட்டு நான் மகிழ்ந்திருக்கிறேன்.

இவருடைய தெய்வ பக்தியின் சம்பந்தமாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்களுக்குள் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தைக் குறித்துப் பல முறை விவாதங்கள் நடந்ததுண்டு. அப்போதெல்லாம், பரிசுத்தமான விக்கிரக ஆராதனையைப்பற்றியும் அதனால் ஆசாரியர்கள் அடைந்திருக்கும் ஆனந்தத்தைப்பற்றியும் எடுத்து உருக்கமாகச் சொல்லுவார். ஸ்ரீரங்கத்திலுள்ள கோயிலில் ஒரு பக்தர்முன் எம்பெருமான் தோன்றி அவருக்குப் பரமபதம் அளிப்பதாகச் சொல்லுகையில்

அவர் பரமபதம் சென்று பார்க்கையில் அங்கே வைகுண்ட நாதரின் சேவையைக்காட்டிலும் ஸ்ரீரங்கநாதரின் சேவையே பெரிதாகத் தோன்றினால் மீண்டும் ஸ்ரீரங்கத்துக்கே திரும்ப முடியுமானால் பரமபதம் செல்ல உடன்படுவாரெனச் சொன்னதாக வைஷ்ணவர்கள் ஒரு கதை சொல்லுவதுண்டு. விக்கிரக ஆராதனையில் அந்தப் பக்தருக்கு இருந்த தீவிர பக்தியையும் அதில் அவர் அடைந்த அளவில்லாத ஆனந்தத்தையும் குறிப்பது அக்கதையின் கருத்து. வைஷ்ணவ பகவத் விஷயத்தில் மற்றொரு கதையும் உண்டு. சுடச்சுடப் பால் நைவேத்தியம் செய்த பின்பு நாவல் பழத்தையும் நைவேத்தியம் செய்ததன் நிமித்தமாகப் பெருமாளுக்கு எங்கே ஜலதோஷம் பிடித்துவிட்டதோ என்று அஞ்சி அதற்குத் தகுந்த வைத்தியம் செய்ய ஒரு பக்தர் முயன்றாராம். உண்மையான உபாசகனின் மன நிலையை இக்கதை விளக்குகிறது. விக்கிரக ஆராதனை கீழ்த்தரமான முறை; ஞான மார்க்கமே இதைவிடச் சிறந்த சாதனம் என்று யாராவது வாதித்தால் டாக்டர் கிருஷ்ணன் இவ்விரு கதைகளையும் எடுத்துக் கூறித் தூய்மையான விக்கிரக ஆராதனையின் தன்மையைக் கேட்போர் மனம் உருகும்படி விளக்கிக் காட்டுவார்.

இவருடைய அடக்கமான குணமும் நடத்தையும் மிகவும் பாராட்டத்தக்கவை. தம்முடைய விஞ்ஞானப் பயிற்சியைக் குறித்து இவருக்குக் கொஞ்சங்கூடச் செருக்கென்பதே இல்லை. இத் தன்மையை ஆசார்யர் ஸர் ஸர்வபள்ளி ராதாகிருஷ்ணன் ஒரு முறை கல்கத்தாவில் நடந்த தென்னிந்தியர் கூட்டம் ஒன்றில் வெகு அழகாக எடுத்துரைத்தார். இன்னமும் இவரைக் குறித்து அவர் கூறியதாவது: “உலகத்தில் பெரியோர் எனப்படுவோரை இரு பிரிவினராகப் பிரிக்கலாம். ஒரு பகுதியார் மற்றெல்லோரையும் தாழ்வுபடுத்தி அதனால் தாம் புகழடையக் கருதுபவர்கள். மற்றொரு பகுதியார் தம்மைச் சுற்றிலுமுள்ள எல்லோரையும் புகழடையச் செய்து அதனால் தாமும் புகழை அடைபவர்கள். இவ்விரு பிரிவுகளுக்குள் இரண்டாவதாகச் சொன்னவர்களே உண்மையில் பெரியவர்கள் என்று பாராட்டத்தக்கவர்

கள். இப்பகுதியைச் சேர்ந்தவர் டாக்டர் கிருஷ்ணன்" என்று அவர் சொன்னார்.

டாக்டர் கிருஷ்ணனுக்குச் சங்கீதத்தில் அதிகப் பிரியம் உண்டு. காலஞ் சென்ற புஷ்பவனமையரின் சங்கீதத்தை நெருங்கிப் பழகிக் கேட்டிருக்கிறார். அச் சங்கீதத்தின் மேன்மையை இவர் புகழ்ந்து கூறுவதை நான் பன்முறை கேட்டிருக்கிறேன். சங்கீதத்தைத் தொழிலாக உடையவர்களையும் இவர் தம்மால் இயன்ற வரையில் ஆதரிக்கிறார்.

இவருக்கே இசையில் எவ்வளவு பரிசயம் உண்டு என்பதற்கு ஒரு திருஷ்டாந்தத்தைக் குறிப்பிடலாம். கல்கத்தாவில் பாரதி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ஒரு முறை கம்பர் விழாக் கொண்டாட ஏற்பாடு செய்தோம். அச் சங்கத்துக்குத் தலைவரான இவரே அன்று அக்கிராசனம் வகித்தார். கூட்டம் காலையில் ஏற்பாடாகி யிருந்தது. அன்று முதல் முதலாகப் பேச இருந்தவர் வரத் தாமதமாகிவிட்டது. கூட்டத்தில் உள்ளோர் எல்லோருக்கும் அவர் பேரில் அருவருப்பு ஏற்பட்டது. இவர், 'அவர் வருவதற்காக நாம் இனிமேல் காத்திருக்க வேண்டாம். நாம் கொண்டாட்டத்தைத் தொடங்குவோம். அவர் பின்பு வந்து கலந்துகொள்ளட்டும்' என்று சொன்னார். வழக்கம்போல் இசையில் தேர்ந்த அங்கத்தினர் ஒருவர் பாரதி பாட்டு ஒன்றைக் கடவுள் வாழ்த்தாகப் பாட ஆரம்பித்தார். நான், 'இன்று கம்பர் தினமாகையால் அவர் இயற்றியுள்ள காப்புச் செய்யுள் ஒன்றையே வாழ்த்தாகப் பாடுவது பொருத்தமாயிருக்கும்' என்றேன். அப்படியே அவர் 'உலகம் யாவையும்' என்னும் பாலகாண்ட முதல் காப்புச் செய்யுளை பிலகரி ராகத்தில் பாடினார். பாட்டு முடிந்ததும் தலைவர் தம்முடைய ஆரம்பச் சொற்பொழி வில், 'குறித்த காலத்தில் இன்றைய நிகழ்ச்சிகள் தொடங்கவில்லை என்று நாம் எங்கே எண்ணி விடுவோமோ என்னவோ என்று நினைத்து அச் சங்கேதத்தை நீக்கிச் சரியான காலத்தில்தான் ஆரம்பிக்கிறோம் என்பதற்கு அறிகுறியாகப் பிலகரியில் பாடினார்' என்று

சொன்னார். சபையில் எல்லோருக்கும் இது உத்ஸாக மளித்தது. இதன் மூலம் இவருக்கு இருந்த ராக ஞானமும் இன்ன ராகம் இன்ன காலத்தில் பாடப்பட வேண்டும் என்பதைப்பற்றிய நுண்ணறிவும் தெரிய வந்தன.

இவர் இயற்கையாகவே தர்மசிந்தனை உள்ளவர். யாசகர்கள் இவரைக் கண்டு அவர்களுடைய வேண்டுகோள்களைச் சொல்லு முன்னரே இவர் தம்முடைய பணப் பையை அவிழ்த்துவிடுவார்.

தமிழ்ப் பாஷையில் இவருக்குப் பிரியம் அதிகம். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் இவ்வூருக்கு ஒரு தமிழ்ப் பண்டிதர் வந்திருந்தார். தமிழர்கள் ஆயிரக்கணக்கில் இங்கிருந்தும், தமக்கு அவர்களால் அதிக ஆதரவு கிடைக்காதிருப்பதைக் கண்டு அவர் மிகவும் மனம் நொந்திருந்தார். கம்பராமாயணத்துக்கு அவர் பிரசுரித்து வந்த அரிய ஆராய்ச்சியுடன் கூடிய ஓர் பதிப்புக்கு முன்பணம் சேர்க்கையில் தமிழர்கள் ஆயிரக்கணக்கிலிருந்த அவ்வூரில் அவருக்கு நான்கு அல்லது ஐந்து சந்தாதார்களே கிடைத்தனர். அவர்களுள் டாக்டர் கிருஷ்ணன் ஒருவர் என்பதை நான் பின்பு தெரிந்துகொண்டேன்.

சமீபத்தில் இவர் பௌதிக சாஸ்திர உண்மைகளைத் தமிழில் எடுத்து விளக்குவதில் ஈடுபட்டிருக்கிறார். 'பூமியின் வயதென்ன?', 'சூரிய சக்தி' என்னும் விஷயங்களைப்பற்றி இவர் தமிழில் எழுதிய கட்டுரைகள் பலரால் போற்றப்பட்டன. சென்னையில் பல இடங்களில் இத்தகைய விஷயங்களைப்பற்றி இவர் தமிழில் எல்லோருக்கும் புரியும்படியான எளிய நடையில் பிரசங்கம் செய்ததை எல்லோரும் மெச்சினர்.

விஞ்ஞான சாஸ்திரத்தில் வரும் மொழிகளைத் தமிழில் பெயர்ப்பது எவ்வளவு கடினமானது, எவ்வளவு ஜாக்கிரதையுடன் செய்ய வேண்டியது என்பதை இவர் சமீபத்தில் எடுத்து விளக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இத் தொண்டில் ஈடுபட்ட பலர் கூடிய கூட்டத்தில் ஒருவர், ரேடியோ என்பதற்கு வானொலி என்னும்

சிறிய, அழகான, தனித் தமிழ்ப் பதத்தை உண்டாக்கி யதைப்பற்றிப் புகழ்ந்தார். இவர் உடனே அவரை நோக்கி, "மேலுக்கு அச்சொல் அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் அது அவ்வளவு பொருத்தமான மொழி பெயர்ப்பல்ல" என்றார், புன்சிரிப்புடன். அங்குள்ளோர் பலருக்கு விஷயம் விளங்கவில்லை.

"ஏன்?" என்றார் ஒருவர்.

இவர்: வானொலியென்பதில் ஏன் ஒலி என்பதைச் சேர்த்தீர்கள்?

அவர்: நாம் கேட்பது ஒலியே அல்லவா?

இவர்: சரி, ரேடியோவில் வரும் சக்தி என்ன?

அவர்: மின்சாரம்.

இவர்: அதன் அலை நீளமும் ஒலியின் அலை நீளமும் ஒன்று?

அவர்: இல்லை. மின்சாரத்தின் அலை நீளம் ஒளியின் அலை நீளத்துக்குச் சமம். இதைவிட ஒலியின் அலை நீளம் மிகக் குறைந்தது.

இவர்: எனவே, வானொலி யென்பது அபத்தமே அல்லவா?

இதைக் கேட்டு எல்லோரும் பிரமித்தனர்.

மொழிபெயர்ப்பில் வட மொழி வாசனையே இல்லாமல் தனித் தமிழ் மொழிகளையே கையாள வேண்டும் என்னும் கட்சியை இவர் வெறுப்பார். மேற் கூறிய கூட்டத்தில் இம்மாதிரியான சொற்களின் ஜாபிதா ஒன்றை இவரிடம் கொடுத்தனர். அதில் பல தனித் தமிழ்ச் சொற்கள் இவருக்குப் பிடிக்கவில்லை. இக் கூட்டத்தாருக்கு ஒரு தகுந்த நீதி கற்பிக்க எண்ணிய இவர் விலங்குகளைப் பொதுவாகக் குறிப்பிட வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில் அவைகளைக் 'காக்கையினம்' என்று குறித்தார். அவர்களுக்கு இவர் என்ன சொல்லுகிறார் என்பது விளங்கவில்லை. இவர் உடனே, 'ஏன்? ஆங்கிலத்தில் மெட்டல் (Metal) என்பதை நாம் வழக்கமாக

உலோகம் என்று சொல்லி வருகிறோம். நீங்கள் அதை விட்டுவிட்டு அச் சொல்லைப் 'பொன்னினம்' என்று உங்கள் ஜாபிதாவில் குறித்திருக்கிறீர்கள். 'பொன்னினத்துக்கு'க் 'காக்கையினம்' அதாவது விலங்குகள் ஏதாவது குறைந்துவிட்டதா?" என்றார். அவர்கள் முகம் வெட்கத்தினால் வாடியது.

ஆனால் பொருத்தமான, எளிய தமிழ்ப் பதங்கள் கிடைத்தால் அவை இவருக்கு மகிழ்ச்சியளிக்கின்றன. அத்தகைய சொற்கள் பல அதே ஜாபிதாவில் இவர் மனத்தைக் கவர்ந்ததால் இவர் அவைகளைப் பாராட்டியிருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

பந்து விளையாட்டை இவர் மிகுதியாக ரஸிப்பார். கிரிக்கெட்டு என்னும் ஆட்டத்தை ஆர்வத்துடன் அநுபவிப்பார். டென்னிஸ் ஆட்டத்தில் இவருக்குப் பயிற்சி உண்டு. அவ் விளையாட்டில் டாக்காவில் இருக்கையிலும் கல்கத்தாவிலும் இவர் சில பரிசுகளும் பெற்றிருக்கிறார்.

இவருடைய ஆராய்ச்சிகளைக் கண்டு மெச்சி இவரை ராயல் சங்கத்தின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். இவ்வாறு அங்கத்தினரானவர்களை எப். ஆர். எஸ். (F. R. S.) என்று சுருக்கமாக அழைப்பது வழக்கம். விஞ்ஞான உலகில் ஓர் இந்திய பௌதிக சாஸ்திரிக்கு நோபெல் பரிசுக்கு அடுத்தபடியாக மதிப்புள்ளது இந்த எப். ஆர். எஸ். என்பதுதான். நம் இந்தியா தேசத்தில் டாக்டர் கிருஷ்ணனுக்கு முன் ஆறு பேர்களுக்குத்தான் இந்த எப். ஆர். எஸ். பட்டம் கிடைத்திருந்தது. அவர்கள் பின் வருபவர்கள் :

1. ஆர்டேஷர் கர்ஸெட்ஜீ என்னும் பார்ஸீகாரர்; 1841.

2. ஸ்ரீநிவாச ராமாநுஜன் - கணித சாஸ்திரத்தில் அபாரமான ஆராய்ச்சிகளைச் செய்தவர். சென்னை மாகாணத்தவர்; 1918.

3. ஸர் ஜகதீச சந்திர போஸ்-ஒரு வங்க ஆராய்ச்சிக்காரர். முதலில் பௌதிக சாஸ்திரத்திலும் பின்பு தாவர சாஸ்திரத்திலும் ஆராய்ச்சி செய்தவர்; 1920.

4. ஸர் சந்திரசேகர வேங்கடராமன் - சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பௌதிக சாஸ்திரி. நோபெல் பரிசு பெற்றவர். விஞ்ஞானப் பயிற்சியில் டாக்டர் கிருஷ்ணனுக்குக் குருவாய் அமைந்தவர்; 1924.

5. டாக்டர் மேகநாத ஸாஹா - வங்க மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்; 1927.

6. டாக்டர் வீரபல ஸாஹனி - பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தவரும் ஐக்கிய மாகாணத்திலுள்ள ஓர் சர்வகலாசாலையில் தம்முடைய ஆராய்ச்சிகளை நடத்தி வந்தவருமான ஒரு தாவர சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்; 1936.

இந்தக் கோஷ்டியில் டாக்டர் கிருஷ்ணனும் சேர்ந்து தமக்கும் தம்மை ஈன்ற தமிழ் நாட்டுக்கும் பெரும் புகழை உண்டாக்கிவிட்டார்.

கிருஷ்ணனுக்கு அப்புறம் பின் வருபவர் எப். ஆர். எஸ். ஆகியிருக்கின்றனர்:

1. டாக்டர் எச். ஜே. பாபா என்னும் பெயருடைய பார்ஸி மதத்திய பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியாளர்; 1941.

2. ஸர் எஸ். எஸ். பட்நகர்-ரஸாயனம், 1943.

3. சுப்பிரமணிய சந்திரசேகர் - வான சாஸ்திரத்தை ஒட்டிய பௌதிக சாஸ்திரம் - ஸர் ஸி. வி. ராமனுக்குத் தமையனார் மகன்; 1944.

4. பி. ஸி. மஹாலநோபிஸ் - கணிதத்தில் ஒரு பகுதியான புள்ளி விவர ஆராய்ச்சி; 1945.

இந்த ஜாபிதாவிலுள்ள ஒரு விசேஷம் என்னவென்றால் முதல் எப். ஆர். எஸ். ஸான கர்ஸெட்ஜீ என்னும் பார்ஸிகாரருக்கப்புறம் சரியாக ஒரு நூற்றாண்டு கழிந்த பின்பு (அதாவது, 1841 - 1941) இப்பட்டத்தை இரண்டாம் முறையாக ஒரு பார்ஸிக்காரரே பெற்றார்!

'ஒரு சிஷ்யனுக்கு ஆயிரம் ஆசிரியர் கிடைக்கலாம்; ஆனால் ஓர் ஆசிரியனுக்குத் தகுந்த சிஷ்யன் ஒருவன்

அகப்படுவது அரிது' என்று ஹிந்தியில் ஒரு பழமொழி உண்டென்று நான் கேட்டிருக்கிறேன். தம்முடைய குருவின் பெயரைக் காப்பாற்றுவது சிஷ்யனின் பெரும் பொறுப்பு என்பதை இது வலியுறுத்துகிறது. இதற் கேற்ப இவர் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியில் தமக்கு ஆசிரியராயமைந்த ஸர் ஸி. வி. ராமனின் பெயரை நன்கு காப்பாற்றிக்கொண்டிருக்கிறார். எனவே இவரை 'ஆசிரியருக்கு ஏற்ற மாணவர்' என்று குறிப்பது முற்றும் பொருந்தும்.

2

எண்களின் தோழர்

ஒரு விசித்திர எண்

சுமார் இருபத்திரண்டு வருஷங்களுக்குமுன் இங்கிலாந்து தேசத்தில் பட்னி என்னும் இடத்திலுள்ள வைத்தியசாலையில் நோயுற்ற இந்தியர் ஒருவர் படுத்திருந்தார். அவரைப் பார்க்க ஓர் ஆங்கிலேயர் அங்கே வாடகை மோட்டார் வண்டி ஒன்றில் வந்து இறங்கினார். வந்தவர் நோயாளியை நோக்கி, "நான் இன்று வந்த வண்டியின் எண் சோபிதமற்றது. அது 1729 என்பது. ஆனால் 7, 13, 19 இந்த மூன்று எண்களைப் பெருக்கினால் இது வருமாகையால், இவ்வெண் ஓர் அபசகுனமாக அமையாதிருக்க வேண்டுமே என்று அஞ்சுகிறேன்" என்றார்.

இந்திய நோயாளி உடனே, "அப்படி ஒன்றும் இல்லை. இது வெகு விசித்திரமான எண். இருவகைகளில் இரு 'கன எண்களி'ன் சேர்க்கையாக அமைக்கக்கூடிய எண்களை ஒரு தொடராகச் சேர்த்துத் தொகுத்தால், அத் தொகுதியில் முதல் முதலில் எல்லாவற்றைக் காட்டிலும் சிறியதாகத் தோன்றுவது இவ்வெண்' என்றார்.

கண்ணிமைப் பொழுதுக்குள் இவ்வெண்ணை அந்த நோயாளி இவ்வளவு சரளமாக அலசி ஆராய்ந்து அதன் உண்மையான தன்மையை அறிந்துவிட்டாரே என்று ஆங்கில நண்பருக்கு ஒரே ஆச்சரியம்!

"இவ்வெண்ணுக்குச் சரியான நான்காவது 'விருத்தி'க்குரிய எண் என்னவென்று உங்களால் குறிக்க முடியுமா?" என்று அந்த ஆங்கிலேயர் இந்தியரை நோக்கித் திரும்பவும் கேட்டார். இதற்குப் பதிலளிக்க இந்தியர் ஒரு க்ஷணமே யோசித்தார். பின்பு, "இப்

போது தெளிவாகத் தோன்றவில்லை. ஆனால் அத் தகைய எண் மிகப் பெரியதாக இருக்க வேண்டும்'' என்ற பதில் வந்தது.

சாதாரண வாசகர்களுக்கு, அதாவது கணித சாஸ்திரத்தில் பயிற்சியில்லாதவர்களுக்கு, இச் சம்பா ஷணை சரிவரப் பொருள்படாது. ஒரு புதிர் போட்டது போல் இருக்கும். அதை விடுவிப்பதற்குமுன் கணித சாஸ்திர சம்பந்தமான எண்களைப்பற்றிச் சிறிது தெரிந்துகொள்ள வேண்டும்.

ஓர் எண்ணை அதனாலேயே பெருக்கி வரும் விடையை அவ் வெண்ணின் 'வர்க்கம்' என்பர். தன்னையே மும்முறை பெருக்கிக்கொண்டால் அதன் 'கனம்' கிடைக் கும் அம்மாதிரியே 4, 5, 6... முதலிய முறைகள் பெருக் கினால் அதன் 4-வது, 5-வது, 6-வது... முதலிய 'விருத்திகள்' கிடைக்கும்.

உ-ம்: $2 \times 2 = 4$ என்பதில் 4 என்பது 2 என்னும் 'மூல'த்தின் 'வர்க்கம்'. $2 \times 2 \times 2 = 8$; இதில் 8 என்பது 2 இன் 'கனம்'. இதுமாதிரியே, $16 = 2 \times 2 \times 2 \times 2$, $32 = 2 \times 2 \times 2 \times 2 \times 2$, $64 = 2 \times 2 \times 2 \times 2 \times 2 \times 2$ என்பவை முறையே 2 - இன் நான்காவது ஐந்தாவது ஆறுவது 'விருத்தி'யாகும். இவைகளை முறையே $2^2, 2^3, 2^4, 2^5, 2^6$, என்று எழுதுவார்கள்.

சில எண்களை இரண்டு 'வர்க்கங்'களின் சேர்க்கை யாகக் கருதலாம்.

உ-ம்: $13 = 4 + 9 = (2 \times 2) + (3 \times 3) = 2^2 + 3^2$.

இம்மாதிரி இரண்டு 'வர்க்கங்'களின் சேர்க்கையால் ஆக்கப்பட்ட எண்களின் தொகுதி அடியில் கண்டபடி ஆரம்பமாகும்.

$2 = 1^2 + 1^2$, $5 = 2^2 + 1^2$, $8 = 2^2 + 2^2$, $10 = 3^2 + 1^2$, $13 = 3^2 + 2^2$, $17 = 4^2 + 1^2$, $18 = 3^2 + 3^2$..........

இரண்டு 'கனங்'களின் சேர்க்கையால் ஆக்கப்பட்ட எண்களின் தொகுதி அடியில் கண்டவாறு அமையும்:

$2 = 1^3 + 1^3 = 1 + 1$, $9 = 1^3 + 2^3 = 1 + 8$,

$16=2^3+2^3=8+8$. $28=1^3+3^3=1+27$.
$35=2^3+3^3=8+27$. $54=3^3+3^3=27+27$.
$65=1^3+4^3=1+64$. 72 $2^3+4^3=8+64$.
$91=3^3+4^3=27+64$. $126=1^3+5^3=1+125$.

இதேமாதிரி இரண்டு வகைகளில் இரண்டு வர்க்கங்களின் சேர்க்கையாக அமையும் எண்களும் உண்டு. இதேபோல் இரண்டு 'கன'ங்களின் சேர்க்கையாக இருக்கும் எண்களின் தொகுதியில் ஆரம்ப எண் (அதாவது எல்லாவற்றையும்விடச் சிறியது) மேற்கூறிய சம்பாஷணையில் குறிக்கப்பட்ட 1729 என்பது. அதை,

12^3+1^3 என்றும்,
10^3+9^3 என்றும்,

இரு வழிகளில் இரு 'கன' எண்களின் சேர்க்கையாக அமைக்கலாம். இதைத்தான் இந்திய நோயாளி ஒரு நொடியில் மனத்தில் உருப்படுத்திக் கூறிவிட்டார்.

இதற்குச் சரியான நான்காவது 'விருத்தி'க்குரிய எண் 635318657 என்னும் ஒன்பது ஸ்தானங்கள் அடங்கிய மிகப் பெரிய எண் என்பதை ஆயிலர் (Euler) என்னும் கணித சாஸ்திரி சுமார் ஒரு நூற்றுண்டுக்கு முன்னமேயே நிர்ணயித்திருந்தார். இதை அடியில் கண்டபடி இருவிதங்களில் இரண்டு நான்காவது விருத்திகளின் சேர்க்கையாகப் பிரிக்கலாம்.

$$635318657=\begin{cases}158^4+59^4 \ldots\ldots(1)\\ 134^4+133^4 \ldots(2)\end{cases}$$

இவ்வெண் வெகு பெரியதாக இருக்க வேண்டுமென்பதும் இவ் விந்தியரின் மனத்தில் ஒரு க்ஷணத்தில் உதித்து விட்டது!

இவ்வளவு வேகமாகவும் சுலபமாகவும் எண்களின் தன்மைகளை அறியக்கூடிய மூளையின் சக்தியே சக்தி! அதுவும் உடல் மெலிந்த நிலையில் இருக்கையில்!

இந்த இந்திய நோயாளிதான் பிரபல கணித ஆராய்ச்சிக்காரரும் இந்தியாவில் முதல்முதலாக எப். ஆர். எஸ்., (F. R. S.) என்னும் பட்டம் பெற்றவருமான

காலஞ்சென்ற ராமாநுஜன் என்னும் அறிவாளி. இவருடன் மேற்குறித்த சம்பாஷணையை நடத்தியவர் இங்கிலாந்தில் 'கேம்பிரிஜ்' சர்வகலாசாலையில் போதகாசிரியரும், பேர்போன கணித ஆசிரியரும், ராமாநுஜனுக்குப் பல சாதனங்களை ஏற்படுத்திக் கொடுத்தவருமான ஜி. எச். ஹார்டி என்பவர். எண்களின் நுட்பங்களை இவ்வளவு தெளிவாகத் தம் மனக் கண்முன் கண்டறிந்த இவருடைய சக்தியைக் குறித்துத் தான் லிட்டில்வுட் என்பவர், "ஒவ்வோர் எண்ணும் இவருடைய நெருங்கிய தோழன்" என்று இவரைப் புகழ்ந்திருக்கிறார்.

கணித சாஸ்திர நிபுணரான ராமாநுஜன் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு வைஷ்ணவப் பிராம்மண குடும்பத்தில் பிறந்தார். இவருடைய முழுப்பெயர் ஸ்ரீநிவாச ராமாநுஜன் என்பது. இவர் அவதரித்த குடும்பம் பரம்பரையாக எளிய குடும்பமாக இருந்தது. இவருடைய தகப்பனாரும் பாட்டனாரும் கும்பகோணத்திலுள்ள ஒரு ஜவுளிக்கடையில் குமாஸ்தாக்களாக இருந்தவர்கள். இவருடைய தந்தையாரின் பெயர் ராமஸ்வாமி ஐயங்கார். இவருடைய அன்னையார் கோமளத்தம்மாள். இவருடைய தாய்வழிப் பாட்டனார் கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த ஈரோடு என்னும் ஊரிலுள்ள ஜில்லா முனிசிப் கோர்ட்டில் அமீனாவாக இருந்தார். ராமாநுஜனுடைய தாய் தந்தையருக்குக் கொஞ்சகாலம் பிள்ளைகள் இல்லாமலிருந்து, சேலம் ஜில்லாவைச் சேர்ந்த நாமக்கல் என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் நாமகிரியம்மன் உபாசனையின் பயனாக மக்கட்பேறு உண்டாயிற்று என்று சொல்வார்கள். இம்மக்களுள் மூத்தவர்தாம் கணித நிபுணரான ஸ்ரீநிவாச ராமாநுஜன். இவருக்குத் தம்பிமார் இருவர். ராமாநுஜன் ஈரோட்டில் 22-12-1887-க்குச் சரியான ஸர்வஜித் வருஷம் மார்கழி மாதம் 9-ஆம் தேதியன்று உதித்தார்.

1892-ஆம் வருஷத்தில் தம்முடைய ஐந்தாம் பிராயத்தில் ஹிந்து சமூக வழக்கப்படி இவருக்குத் திண்ணைப்

பள்ளிக்கூடம் ஒன்றில் அக்ஷராப்பியாசம் நடந்தேறியது. அதற்கு இரண்டு வருஷங்களுக்கப்பால் இவர் கும்பகோணம் நகர உயர்தரப் பாடசாலையில் சேர்ந்து படித்தார்.

1897-ஆம் வருஷத்தில் நடந்த ஆரம்பப் பரீக்ஷையில் (Primary Examination) இவர் தஞ்சை ஜில்லாவிலிருந்து பரீக்ஷை கொடுத்தவர்களுள் முதல்வராகத் தேறினார். இதுதான் பின்னர் இவர் அடைய இருந்த நிபுணத்துவத்துக்கு முதல் அறிகுறி. இதன் பயனாக இவருடைய சம்பளத்தில் பாதியைத் தள்ளிக் கொடுத்தனர்.

கும்பகோணம் கலாசாலையிலிருந்து 1904-ஆம் வருஷம் இவர் 'மெட்ரிகுலேஷன்' எனப்படும் கல்லூரிப் பிரவேச பரீக்ஷையில் தேறினார். 'ஜூனியர் சுப்பிரமணியம் ஸ்காலர்ஷிப்' என்னும் உபகாரச் சம்பளமும் பெற்றார். ஆனால் அடுத்த பரீக்ஷையில் தவறியதனால் இவ்வுபகாரச் சம்பளத்தை இழந்தார். இப் பரீக்ஷையில் இவர் தவறியதற்குக் காரணம் ஆங்கில பாஷையில் இவர் தக்க பயிற்சியை அடையாததுதான் என்று சொல்வார்கள். இவருக்குக் கணித சாஸ்திரத்திலுள்ள ஆர்வம் இதர விஷயங்களில் கவனத்தைச் செல்லவொட்டாமல் செய்ததுதான் இதற்குக் காரணம்.

இதனால் இவர் கும்பகோணத்தையே விட்டு அகல வேண்டி வந்தது. முதலில் ஒரு நண்பரின் உதவியினால் ஆந்திரப் பிரதேசங்களில் கொஞ்ச காலம் இருந்துவிட்டுப் பின்பு சென்னையில் கொஞ்ச காலம் அலைந்தார். மீண்டும் கும்பகோணம் வந்து பழையபடி காலேஜில் சேர்ந்தார். ஆனால் வெகு நாட்கள் கலாசாலைக்கு வராதிருந்ததால் அவ் வருஷம் வீணாகப் போயிற்று. ஆகையால் மீண்டும் சென்னைக்குச் சென்று பச்சையப்பன் கலாசாலையில் சேர்ந்து 1906-ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் எப். ஏ. (F. A.) என்னும் முதல் கல்லூரிப் பரீக்ஷை கொடுத்தார். அங்கும் தவறியவுடன் பரீக்ஷைகளில் தேற வேண்டும் என்னும் எண்ணத்தையே அடியோடு துறந்தார்.

ஆனால் சதா கணக்குகளைப் போட்டுக்கொண்டும் தாம் கண்டுபிடித்த விடைகளைச் சில நோட்டுகளில் குறித்துக்கொண்டும் மட்டும் இருந்தார்.

1909-ஆம் வருஷம் இவருக்கு மணம் செய்வித்தனர். உடனே இவர் குடும்ப ஸம்ரக்ஷணைக்காக ஓர் உத்தியோகம் தேடுவது அவசியமாயிற்று.

கணக்கே தம்முடைய பிரதான லக்ஷ்யமானதாலும், கணக்கிலேயே தம் ஓய்வு நேரங்களைக் கழித்து அதன் பயனாகத் தமக்கு உதித்த உண்மைகளைத் தம்முடைய இரு நோட்டுப் புத்தகங்களில் குறித்து வந்தமையாலும், இவைகளைப் பயன்படுத்தித் தமக்கு ஓர் உத்தியோகம் தேடிக்கொள்ளலாமென்று எண்ணினார். ஆகையால் கணக்கில் ஆர்வமுள்ளவர்களைத் தேடலானார். அக்காலத்தில் தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள திருக்கோயிலூர் என்னும் ஊரில் வி. ராமஸ்வாமி ஐயர் என்ற ஒருவர் டெபுடி கலெக்டராக இருந்தார். அவர் கணித சாஸ்திரப் பயிற்சியில் பிரியமுள்ளவர்; இந்தியக் கணித சாஸ்திர சங்கம் என்பதை ஸ்தாபித்தவர். ராமாநுஜன் அவரைச் சென்றடைந்தார். ராமஸ்வாமி ஐயர் ராமாநுஜனுடைய அபூர்வமான கணிதசாஸ்திர ஆராய்ச்சிகளைக் கண்டு மெச்சி அவரைச் சென்னையில் ராஜதானிக் கலாசாலையில் கணித ஆசிரியராயிருந்த பி. வி. சேஷுவையர் என்பவரிடம் அனுப்பினார். சேஷுவையர், நெல்லூரில் ஜில்லா கலெக்டர் பதவியிலிருந்தவரும் கணிதசாஸ்திரத்தில் ஆவலுடையவருமான திவான்பகதூர் ஆர். ராமசந்திரராவிடம் இவரை அனுப்பினார். அவர் இவருடைய மேதையைக் கண்டு மெச்சி இவர் இருக்கத் தக்க இடம் சென்னையே என்று கருதி, திரும்பவும் இவரைச் சென்னைக்கே அனுப்பிவிட்டார். இது நடந்தது 1910 டிசம்பரில். அச்சமயத்தில் இவருடைய செலவுக்குக் கொடுத்து உதவச் சிலர் முன்வந்ததாகச் சொல்வார்கள். ஆனால் பிறர் ஆதரவில் இருக்க இஷ்டமின்றி இவர் 1912-இல் சென்னையில் துறைமுக ஸ்தாபனக் காரியாலயத்தில் குமாஸ்தா வேலையில் அமர்ந்தார். தம்முடைய கணிதசாஸ்திர ஆராய்ச்சிக்குப் போதுமான ஓய்வுநேரம் கிடைக்காமல் இத்தகைய சிறு வேலையில் இவர் அமர்ந்ததை இவருக்கும், உலகத்துக்கும், கணிதசாஸ்திரத்துக்கும் நேர்ந்த பெரும் துரதிருஷ்டமென்றே சொல்ல வேண்டும்.

உத்தியோகத்தில் அமர்ந்ததும் கணித ஆராய்ச்சியிலுள்ள ஆர்வத்தைச் சிறிதும் இழக்காமல் தம் வேலைகளைத் தொடர்ந்து நடத்திவந்தார். இந்த உத்தியோகத்தில் இவருக்குக் கிடைத்த மாதச் சம்பளம் ரூபாய் 25. பதினெட்டு வயதிலிருந்து இருபத்தைந்து வயதுவரையில் உள்ள வருஷங்கள் ஒரு கணிதசாஸ்திரிக்கு மிகவும் முக்கியமானவையென்று சொல்வர். ஆனால் இந்த வயதில் இவருக்கு மனநிம்மதியும் ஓய்வும் இல்லாததனால் இவருடைய மேதைக்கும் ஆர்வத்துக்கும் ஏற்ற உழைப்பு இல்லாமல் போய்விட்டது. இதைவிடப் பெரிய துர்ப்பாக்கியம், இவருடைய அசாதாரண நுட்ப புத்தி அதற்குத் தகுந்த உயர்ந்த கணித ஆராய்ச்சித்துறைகளில் செலுத்தப்படவில்லை.

கணிதசாஸ்திர ஆராய்ச்சியைக் குறித்த இவருடைய முக்கியமான முதல் வியாசம் 1911-இல் வெளியாயிற்று. 1912-இல் இவருடைய அபாரமான திறமை எல்லோருக்கும் புலப்பட ஆரம்பித்துவிட்டது. பல இந்தியர்களின் பழக்கம் வெறும் சிநேகத்துடன் நின்றுவிட்டது; இவருக்குத் தேவையான சில முக்கிய சாதனங்களைத் தேடிக் கொடுக்க ஐரோப்பியரே முன்வர வேண்டியிருந்தது. இவர் வேலை பார்த்துவந்த சென்னைத் துறைமுக ஸ்தாபனத்தின் தலைவரான ஸர் பிரான்ஸிஸ் ஸ்பிரிங், கே. ஸி. ஐ. ஈ. என்பவரும் இவருடைய ஆற்றல்களை அறிந்திருந்தமையால் சமயம் பார்த்து இந்திய அரசாங்கம் வானசாஸ்திர இலாகாவின் தலைவரும் மாஜி கேம்பிரிஜ் ட்ரினிடி கலாசாலைக் கணித ஆசிரியருமான டாக்டர் ஸர் கில்பர்ட் வாக்கர் எப். ஆர். எஸ். என்பவரிடம் இவருடைய அருமையான கணிதசாஸ்திர ஆராய்ச்சிகளைக் குறித்துப் பிரஸ்தாபித்தார்.

இதன் நடுவில் கேம்பிரிஜ் கலாசாலையில் இருந்த கணித ஆசிரியரும் பிரபல கணிதசாஸ்திரியுமான ஜி. எச். ஹார்டி என்பவருக்குச் சில நண்பர்களின் யோசனையின் பேரில் ராமாநுஜன் 16-1-1913-இல் தம்முடைய ஆராய்ச்சிகளைக் குறித்து ஒரு கடிதம் எழுதினார். அப்புறம் 1914-

இல் இவர் சீமைக்குப் புறப்படும்வரையில் இவர்கள் இருவருக்கும் இடையில் கடிதப் போக்குவரத்து, தொடர்ந்து நடந்துவந்தது. ராமாநுஜனின் முதல் கடிதத்தின் சாராம்சம்:

> "நீங்கள், உங்கள் புத்தகம் ஒன்றில் ஒரு குறிப்பிட்ட விடை கிடைக்காதென்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் நான் அதை ஏறக்குறையச் சரியாகவே கண்டுபிடித்திருக்கிறேன். என்னுடைய விடையை இதனுடன் அனுப்பியிருக்கிறேன். இதில் ஏதாவது உண்மை இருக்கிறதென்று உங்களுக்குத் தோன்றினால் தயை செய்து என்னுடைய ஆராய்ச்சிகளைப் பிரசுரிக்க ஏற்பாடு செய்யும்படி வேண்டுகிறேன். நான் மிகவும் எளிய நிலையில் இருப்பதால் என்னால் இதைச் செய்ய முடியவில்லை. இவ்விஷயத்தில் தங்களுடைய ஆலோசனையையும் புத்திமதியையும் பெரிதும் பாராட்டுவேன்."

இக்கடிதத்தின் மூலம் இவருடைய திறமை ஹார்டிக்கு நன்கு புலப்பட்டுவிட்டது. இவரை எப்படியாவது சீமைக்கு வரவழைத்து இவருடைய பயிற்சியை ஒழுங்கு படுத்தி இவரை மேன்மேலும் ஆராய்ச்சி செய்யச் சொல்லவேண்டும் என்று தீர்மானித்தார். 27-2-1913-இல் தாம் ஹார்டிக்கு எழுதிய அடுத்த கடிதத்தில் இவர் தம்பால் அன்பு கூர்ந்ததற்கு அவருக்கு நன்றி செலுத்திவிட்டு அடியில் கண்டபடி எழுதினார்:

> "என்னுடைய மூளையைக் காப்பாற்ற எனக்கு உண்ண உணவு வேண்டும். இதுதான் நான் இப்போது முக்கியமாக வேண்டுவது. தாங்கள் ஒரு சிபார்சுக் கடிதம் எழுதி இந்தக் கவர்ன்மெண்டிலிருந்தாவது, சர்வகலாசாலையிலிருந்தாவது எனக்கு ஏதாவது உபகாரச் சம்பளம் கிடைக்கச் செய்தால் எனக்குப் பேருதவியாக இருக்கும்."

கடைசியில் மேலே குறிக்கப்பட்ட டாக்டர் வாக்கர் என்பவரின் முயற்சியினால் சென்னைச் சர்வகலாசாலையிலிருந்து இவருக்கு 1-5-1913-லிருந்து இரண்டு வருஷங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 75 வீதம் உபகாரச் சம்பளம்

கொடுக்கப்பட்டது. பின் தம் குமாஸ்தா வேலையை விட்டு விலகினார். அதுமுதல் இவர் கணித சாஸ்திர ஆராய்ச்சியையே தம்முடைய வாழ்க்கையின் முக்கிய லக்ஷ்யமாகவும் அலுவலாகவும் வைத்துக்கொண்டார். சர்வகலாசாலையின் நியமங்களுக்கு இணங்கத் தம் ஆராய்ச்சிகளைக் கட்டுரைகள் மூலம் 5-8-13, 7-11-13, 9-3-14, இந்தத் தேதிகளில் அதிகாரிகளுக்குத் தெரிவித்துக்கொண்டார்.

லண்டன் நகரத்திலுள்ள இந்திய மாணவர்களின் காரியதரிசிக்கு ஹார்டி ஒரு கடிதம் எழுதினார். ராமாநுஜன் இங்கிலாந்தில் கேம்பிரிஜ் கலாசாலைக்கு வந்து சிலகாலம் இருந்தால் அவருடைய திறமை பதின்மடங்கு சோபிக்குமாகையால் அப்படி வரச்செய்ய முடியுமா என்று அதில் கேட்டிருந்தார். இது ராமாநுஜனிடம் பிரஸ்தாபிக்கப்பட்டபோது இவர் அதற்கு இணங்கவில்லை. இவருடைய குலாசாரங்கள் இதற்கு இடம் கொடுக்கவில்லைபோலும். இதைக் கேட்டு ஹார்டி மனம் நொந்தார். எனினும் ராமாநுஜனை அங்கே வரவழைப்பதில் அவர் தம்முடைய ஊக்கத்தைச் சிறிதும் குன்றவிடவில்லை. இடையிடையே தம்முடைய கடிதங்களில், கேம்பிரிஜுக்கு வந்து தம்முடன் ஆராய்ச்சிகளை நடத்தினால் அதனால் கிடைக்கக்கூடிய பலனை எடுத்துக் கூறி இவரை அங்கே வரத் தூண்டிக்கொண்டே இருந்தார்.

1914-இல் கேம்பிரிஜ் சர்வகலாசாலையைச் சார்ந்த ட்ரினிடி கல்லூரியின் அங்கத்தினரான இ. எச். நெவில் என்னும் கணித ஆசிரியர் சென்னைச் சர்வகலாசாலையாரால் வரவழைக்கப்பட்டுச் சென்னைக்குப் புறப்படுகையில் மீண்டும் ஒரு முறை அவரைக்கொண்டு ராமாநுஜனைக் கடல் கடக்க இணங்கும்படி செய்ய ஹார்டி முயன்றார். இம்முறை அவருடைய முயற்சி பயனளித்தது. ராமாநுஜம் சீமைக்குச் செல்லச் சம்மதித்தார். உடனே நெவில் என்பவரின் சிபார்சின் பேரில் சீமையில் தங்கியிருக்கையில் சென்னைச் சர்வகலாசாலையார் இவருக்கு வருஷம் ஒன்றுக்கு 250 பவுன்கள் கொடுப்பதாக ஏற்பாடாயிற்று. இத்தொகையில் மாதந்

தோறும் ரூபாய் 60 தம் தாயாருக்குக் குடும்பச் செலவுக்காக அனுப்பப்பட வேண்டுமென்று திட்டம் செய்தார். இதோடு கேம்பிரிஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த ட்ரினிடி கலாசாலையாரும் இவருக்கு வருஷந் தோறும் 60 பவுன் கொடுக்க முன்வந்தனர். கடைசியில் 17-3-1914-இல் இவர் சீமைக்குக் கப்பலேறினார்.

இங்கிலாந்தை அடைந்தவுடன் ஹார்டி என்பவர் ஆசிரியராயிருந்த கேம்பிரிஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த ட்ரினிடி கலாசாலையில் இவர் ஒரு மாணவராகச் சேர்ந்தார். அங்கே இவர் செய்த ஆராய்ச்சிகளைப் பிரசுரிக்க ஹார்டி என்பவர் மிகவும் உதவியாக இருந்தார். அங்கே தக்க சகாவுடன் தம்முடைய ஆராய்ச்சிகளை நடத்தியதால் இவருடைய திறன் பரிமளித்தது. 11-11-1915-இல் ஹார்டி இவரைக் குறித்துச் சென்னைச் சர்வகலாசாலைக்கு எழுதிய ஒரு கடிதத்தில், 'நான் இது வரையில் கண்டிருக்கும் கணித ஆராய்ச்சிக்காரர்கள் எல்லோருள்ளும் இவர் மிகச் சிறந்தவர்' என்று சிலாகித்தார். இவருடைய ஆராய்ச்சிகளைப்பற்றிச் சுமார் 12 கட்டுரைகள் வெளிவந்த பிறகு 16-6-1916-இல் ஹார்டி இவருடைய அரிய வேலையைப்பற்றிச் சென்னைச் சர்வ கலாசாலையாருக்குத் தாம் அனுப்பிய அதிகார பூர்வமான கடிதத்திலும் இப்படியே புகழ்ந்தார்.

1917-ஆம் வருஷம் வரையில் எல்லாம் சரிவர நடந்தது. ஆனால் 1917-மே மாதத்தில் ஹார்டி எழுதிய ஒரு கடிதத்தில் முதல் முதலாக ராமாநுஜன் ஒரு தீரா நோயினால் பீடிக்கப்பட்டுவிட்டார் என்னும் கொடிய சமாசாரம் தெரியவந்தது. சென்ற ஐரோப்பிய மகா யுத்தம் கடுமையாக நடந்துவந்ததாலும், நீர் மூழ்கிக் கப்பல்களின் தொந்தரவு பலத்திருந்ததாலும் உடனே இவரை இந்தியாவுக்கு அனுப்பமுடியாமல் போயிற்று. இங்கிலாந்திலேயே வேல்ஸ், மாட்லாக், லண்டன் முதலிய இடங்களிலுள்ள ஆரோக்கிய ஸ்தலங்களில் இவருக்குச் சிகித்ஸை நடந்தது. 1918-ஆம் வருஷத்தில் வியாதியும் கொஞ்சம் குணமடைந்து வருவதாகத் தெரிந்தது.

28-2-1918-இல் ராமாநுஜன் ராயல் சங்கத்தின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அதாவது எப். ஆர். எஸ். ஆனார். ஓர் இந்தியர் அச்சங்கத்தின் அங்கத்தினராக்கப்பட்டது அதுதான் முதல் தடவை. அப்போது இவருக்கு வயது முப்பதே. இவர் பெயர் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்ட முதல் தடவையி லேயே இவருடைய தேர்தல் எல்லோராலும் ஒருமுகமாக அங்கீகரிக்கப்பட்டது. இந்தச் சிறுவயதிலேயே அதிக ஆலோசனைகளின்றி இவருக்கு எப். ஆர். எஸ். கிடைத் தது இவருடைய விசேஷத் திறமையையும் பிறருக்கு இவ ரிடமிருந்த அபார மதிப்பையுமே காட்டுகிறது. மெலிந்த தேக நிலையிலும் தம்முடைய ஆராய்ச்சி வேலையில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட இத்தேர்தல் இவருக்கு ஊக்கம் அளித்தது. இவர் கண்டுபிடித்த சில விடைகளுக்குள் மிகவும் அருமையானவை இச்சமயத்தில் உதித்தவையே.

13-10-1918-இல் இவரைக் கேம்பிரிஜ்ஜில் ட்ரினிடி கலாசாலையார் ஓர் அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தனர். இது அதிக மதிப்புள்ள பதவி. இதற்கு யாதொரு நிபந்தனையும் இல்லை. வருஷம் ஒன்றுக்கு 250 பவுன்கள் வீதம் 6 வருஷங்களுக்குப் பணம் கொடுப்பார்கள். இத்தேர்தலைக் குறித்து அடியில் கண்டவாறு ஹார்டி பெருமையுடன் சென்னைச் சர்வகலாசாலையாருக்கு எழுதினார்:

> "ராமாநுஜன் சாஸ்திரப்பயிற்சியில் உலகத்திலேயே இதுவரையிலும் ஓர் இந்தியருக்கும் கிட்டாத புகழுடன் ஊர் திரும்புவார். அவரை ஒரு பெரும் பொக்கிஷமென நீங்கள் கருதுவீர்கள் என்பது திண்ணம்."

இதைக் கண்டதும் சென்னைச் சர்வகலாசாலை யாரும் இவருக்கு 1-4-1919 முதல் 5 வருஷங்களுக்கு வருஷந்தோறும் 250 பவுன் வீதம் கொடுப்பதென்றும், அது முடிந்ததும் இவர் இந்தியாவுக்குத் திரும்பிவருவ தற்குக் கப்பல் செலவையும், இதற்கிடையில் இங்கே வந்து திரும்பிப்போக இவர் விரும்பினால் அச்செலவுகளை

யும் கொடுப்பதென்றும் ஏற்பாடு செய்தனர். இதோடு கடைசியாக இவர் ஊர் திரும்பியவுடன் சென்னைச் சர்வ கலாசாலையில் இவரைக் கணித ஆசிரியராக நியமிப்ப தாகவும் தீர்மானித்தனர்.

இவருக்கு வந்த நோய் கடுமையான காச நோயாக இருந்தபோதிலும் அது குணமடைந்து வருவ தாகவே எல்லோரும் எண்ணினர். ஆனால், இங்கிலாந்தின் சீதோஷ்ணநிலை அந்நோய் குணமாவதற்குத் தடையாக இருப்பதாகக் கருதப்பட்டதால் இவரை இந்தியாவுக்கே திருப்பியனுப்ப முயன்றனர். அவ்வாறே 27-2-1919-இல் இவர் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டு 27-3-1919-இல் பம்பாய் வந்து இறங்கி, 2-4-1919-இல் சென்னையை அடைந்தார். அப்போது இவர் உடல் மிகவும் மெலிந்து, பார்க்கப் பரிதாபகரமாக இருந்தது. அந்நிலை இவருடைய சிநேகிதர்கள் மனத்தைக் கலக்கியது. இவருக்குத் தக்க சிகிச்சை செய்வதே அவர்களுடைய முதல் கடமை ஆயிற்று. சென்னையில் மூன்று மாதங்களும், கொடுமுடியில் காவேரி தீரத்தில் இரண்டு மாதங்களும் இருந்தார். 3-9-1919-இல் கும்பகோணம் சென்றார். அங்கே இவருடைய தேக அசௌகரியம் அதிகரிக்கவே நண்பர்களின் தூண்டுதலின்பேரில் 1920 ஜனவரியில் மீண்டும் சென்னைக்கு வந்தார். இவருடைய வைத்தியத்துக்கு ஏற்பாடு செய்யப் பலர் முன் வந்தனர். ஸ்ரீமான்கள் எஸ். ஸ்ரீநிவாசையங்கார், டி. நம்பெருமாள் செட்டியார் முதலிய பிரமுகர்கள் உதவியுடன் சென்னைச் சர்வகலா சாலை அங்கத்தினர்களுங்கூட இதில் பங்கெடுத்துக் கொண்டனர். இம்முயற்சிகளெல்லாம் பயன்படாமல் ராமாநுஜன் 26-4-1920-இல் சேத்துப்பட்டில் உயிர் நீத்தார். இவர் பிரிவினால் நம் மாகாணத்துக்கும் கணித சாஸ்திர உலகத்துக்கும் ஒரு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது.

இவர் நோய்வாய்ப்படுமுன் இவர் உடல் சற்றுப் பருமனாகவே இருந்தது. நடுத்தர உயரம், அதாவது 5 அடி 5 அங்குலம். பெரிய, மயிர் அடர்ந்த தலை, விசாலமான

உயர்ந்த நெற்றி. இவருடைய கண்களில் இருந்த ஒரு தனி ஜொலிப்பும் குறுகுறுப்பும் கண்டோர் மனத்தைக் கவர்ந்தன.

இவரிடம் படாடோபமே இல்லை. செருக்கோ லவலேசமும் இல்லை. இவருக்குத் தர்ம சிந்தனை உண்டு என்பது 11-1-49-இல் இவர் சென்னைச் சர்வகலாசாலைக்கு எழுதிய ஒரு கடிதத்திலிருந்து நன்கு விளங்குகிறது. அதில் இவர் கீழ்வருமாறு எழுதியிருந்தார்:

"நான் இந்தியாவுக்குத் திரும்பியபின் எனக்குக் கிடைக்கும் உபகாரச் சம்பளங்கள் என் செலவுக்குக் கண்டு மிஞ்சுமாதலால் அவைகளில் ஒரு பாகத்தைக் கல்வி விஷயத்தில் - முக்கியமாக எளிய பிள்ளைகளுக்கும், தாய் தந்தையை இழந்து திக்கற்றிருக்கும் பிள்ளைகளுக்கும், சம்பளத்துக்காகவும் புத்தகச் செலவுக்காகவும் - செலவிட உத்தேசித்திருக்கிறேன்."

இவர் பெற்றோரிடம் மிகவும் அன்பு வாய்ந்தவர். அவர்களுக்குக் குடும்பச் செலவுக்குத் தம்மால் பணம் சம்பாதிக்க முடியாமல் போனபோதெல்லாம் இவர் மனம் மிகவும் வருந்தும். இவருக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தவுடன் அதில் ஒரு பகுதியைத் தம் பெற்றோர்களுக்கு அனுப்பியதுதான் இவர் முதல் முதல் செய்த காரியம்.

இந்தியாவில் இருந்தபோதே கணிதசாஸ்திரத்தைக் குறித்துப் பல கட்டுரைகள் மூலம் புதிய விடைகளைத் தெரிவித்ததுடன், இங்கிலாந்துக்குச் சென்றபின் 38 வியாசங்களில் தம் ஆராய்ச்சியின் விடைகளை உலகுக்கு இவர் அளித்தார். இவைகளில் ஏழு ஹார்டியுடன் சேர்ந்து இவர் நடத்திய ஆராய்ச்சிகளைப் பற்றியவை. முக்கியமாக எண்களின் தன்மையென்னும் கணித சாஸ்திரப் பிரிவில்தான் இவர் அதிக ஆராய்ச்சிகள் செய்தார். இன்னும் சில பாகங்களிலும் புதிய விடைகளை அளித்துள்ளார். உதாரணமாக வட்டத்தின் சுற்றளவுக்கும் (Circumference of a circle), விட்டத்துக்கும் (Diameter) உள்ள சம்பந்தத்தை எளிதாக

அமைக்கக்கூடிய வழிகளால் நிர்ணயித்துக் காட்டினார். குறிப்பிட்ட வட்டத்தை (Circle) ஒரு சமசதுரத்துக்குள் (Square) அடைத்து (Squaring the circle அல்லது Circle Squaring) அச்சமசதுரத்திலிருந்து மேற்கூறிய சம்பந்தத்தை நிர்ணயிப்பதுதான் விடையைக் கண்டுபிடிக்கும் வழி. முற்காலத்தில் இதைக் கணிதசாஸ்திர ஆராய்ச்சி செய்ய முன்வரும் ஒவ்வொருவரும் முயன்றதுண்டு.

பொதுவாக இவருடைய ஆராய்ச்சிகள் உயர்ந்த தன்மையை உடையன என்பதைக் கணிதசாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளுகின்றனர். இவருடைய ஆராய்ச்சிகளுள் அடியில் கண்டவை முக்கியமானவை என்று ஹார்டி கருதுகிறார்:

(1) தொடர்பின்னங்களைப் பற்றியவை (Continued fractions),

(2) குறுஞ்செயல்களைப்பற்றியவை (Elliptic functions),

(3) பாகுபாடு செய்தல் என்பதைப் பற்றியவை (Theory of partitions).

"இவரிடம் சில அமானுஷ்யமான குணங்கள் காணப்பட்டன. இவருடைய ஆராய்ச்சிகளைக் கடவுளே இவருக்குக் கனவில் தெரிவித்தார்" என்பன போன்ற சில தப்பபிப்பிராயங்கள் தற்சமயம் நமது மாகாணத்தில் உலவுகின்றன. அவைகளைக் கண்டித்து ஹார்டி அடியில் கண்டவாறு எழுதுகிறார்:

> "கேம்பிரிஜில் வியாதி ஒன்றும் இல்லாமல், சௌக்கியமாக இருந்த ராமாநுஜனுடன் நெருங்கிப் பழகிய எனக்கு அவரிடம் அமானுஷ்யமானதொன்றும் தோன்றவில்லை. பிறருக்கு விளங்காத திறமையையுடைய ஓர் இந்திய யோகி அவர் என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். அவரிடம் சில கொனஷ்டைகள் இல்லாமல் இல்லை. அப்படியிருந்தும், அவர் மற்றவரைப்போன்ற ஒரு சாதாரண மனிதரே என்று நான் நிச்சயமாகக் கூறுவேன்."

ராமாநுஜனுடைய சரித்திரத்தை ஆராய்ந்தால் பல விதங்களில் நாம் துர்ப்பாக்கியசாலிகள் என்பது எளிதில் புலப்படும். முதல் முதலில் இவருடைய சக்திக்குத் தக்க வசதிகளை இவர் பெறவில்லை. கும்பகோணத்தில் இவர் தம்முடைய ஆராய்ச்சியைத் தொடங்குகையில் நல்ல கணிதசாஸ்திர புத்தகம் ஒன்றும் இவருக்குக் கிடைக்கவில்லை. ஆகையால் இவர் கண்டுபிடித்த பல விடைகள் ஏற்கனவே பிறரால் கண்டுபிடிக்கப்பட்டனவாயிருந்தன. உதாரணமாக இவருடைய விடைகள் சிலவற்றை ஆயிலர் என்பவர் முன்பே கண்டுபிடித்திருந்ததை இவர் ஒரு புத்தகத்தின் மூலம் தெரிந்துகொண்டு அதைக் குறித்து வருந்தினார். இவருடைய விடை மற்றொன்றை லாண்டார் என்பவர் கண்டுபிடித்திருந்தார் என்பதையும் இவர் அறிந்தார். அம்மாதிரி தக்க வசதிகள் இல்லாதபடியால் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட விடைகளை இவர் மீண்டும் உழைத்துக் கண்டுபிடித்ததில் எவ்வளவு முயற்சி வீணாயிற்றோ!

கணிதசாஸ்திரப் பயிற்சிக்குச் சாதனமாயுள்ள நல்ல ...த்தகங்கள் இரண்டொன்றாவது இவர் கண்ணில் ...ருந்தால் இன்னும் எவ்வளவோ அரிய உண்...ா இவர் உலகுக்கு அளித்திருப்பார். சென்னைச் சர்வ...லைப் புத்தகசாலையிலும் மற்றும் சில கல்லூரிப் புத்தகசாலைகளிலும் இருந்த விட்டேகர், ப்ராம்விச் போன்ற ...ர்கள் இயற்றிய புத்தகங்களை இவருக்கு யாரேனும் காட்டியிருந்தாலும் போதும். ஆனால் இவருக்குக் கிட்டியது கார் என்ற ஒருவர் எழுதிய ஒரு கணித சாஸ்திரப் புத்தகமே.

தக்க பருவத்தில் - அதாவது, 18-லிருந்து 25-வரையில் - இவருடைய ஆராய்ச்சிக்கு அநுசரணையாக முக்கியமாக வேண்டியிருந்தது ஓய்வு நேரமே. ஆனால் இவ்வயதில் குடும்பக் கவலையினால் இவர் ஓர் உத்தியோகத்தில் அமர்ந்து தம்முடைய அபார சக்தியைக் கணக்கில் செலுத்தாமல் தம்முடைய நேரத்தில் பெரும் பகுதியை ஒரு குமாஸ்தாவாக வேலை செய்வதில் செலவிட வேண்டியிருந்ததும் நம்முடைய துர்ப்பாக்கியமே.

கடைசியாக, வெண்ணெய் திரளுகையில் தாழி உடைந்ததுபோல் வேண்டிய வசதிகளும், ஓய்வும், பணமும் கிடைத்தபோது நமன் இவரைத் தன்னுலகுக்கு அழைத்துக்கொண்டு விட்டான்!

இவர் உயிர் துறந்தபின் இவரால் பிரசுரிக்கப்பட்ட விடைகள் எல்லாவற்றையும் திரட்டி ஒரு புத்தகமாக 1927-இல் கேம்பிரிஜ் சர்வகலாசாலையார் வெளியிட்டனர். இப்புத்தகத்தின் முன்னுரையாக இவருடைய சரித்திரத்தைப்பற்றி இரு குறிப்புகள் வெளியிடப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்று பி. வி. சேஷுவையர், திவான்பகதூர் ஆர். ராமசந்திர ராவ், இவர்கள் பேரில் உள்ளது. மற்றொன்று ஜி. எச். ஹார்டியால் எழுதப்பட்டது. வெகு நாள் வரையில் ராமானுஜனின் ஜீவிய சரித்திரத்துக்கு இவைதாம் ஆதாரமாயிருந்தன. 31-8-1936 - இல் ஹார்டி ராமானுஜனைப்பற்றி அமெரிக்காவில் ஹார்வார்டு சர்வகலாசாலையின் முந்நூறாவது ஆண்டு விழாவில் ஒரு பிரசங்கம் செய்தார். அது 1937-இல் ஓர் அமெரிக்க மாதாந்த கணிதப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. இம்மூன்றையும் ஆதாரமாகக் கொண்டுதான் இக்கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது.

4

குடியேற்ற நாட்டுக்குச் சென்ற கணக்காயர்

லண்டனிலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளுள் 'டெய்லி ஹெரால்டு' என்பது ஒன்று. அந்தப் பத்திரிகையின் காரியாலயத்தில் ஒரு விவாதம் எழுந்தது. அது 'Status' என்னும் ஆங்கிலப்பதத்திலுள்ள 'A' என்ற எழுத்துக்கு என்ன உச்சரிப்பு என்பது. விவாதத்தில் கலந்துகொண்ட இருவர்களுள் ஒருவர் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் 'பேலியல்' என்னும் பிரபல கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற உப பத்திராதிபர். மற்றவர் ஒரு சாதாரணப் பள்ளியில் படித்தவர். அவரும் ஓர் உப பத்திராதிபரே. ஒருவர் கக்ஷி 'A' என்னும் எழுத்தை இப்பதத்தில் 'ஏ' என்பதுபோல் உச்சரிக்க வேண்டும் என்பது. மற்றொருவரின் கக்ஷி 'A'-க்கு இங்கே 'ஆ' வின் ஒலிபோன்ற உச்சரிப்பு என்பது. இருவரும் அதைக் குறித்து ஒருவித முடிவுக்கும் வராததால் தலைமைப் பத்திராதிபரிடம் சென்றனர். 'யூவர்' என்ற பெயர் பூண்ட அவர் விஷயத்தைக் கேட்டார். குனிந்த தலையுடன் தம் வேலையைச் செய்தபடியே, "'ஏ' என்பதுதான் சரியான உச்சரிப்பு" என்றார். எதிர்க்கக்ஷியில் வாதித்துத் தோல்வியடைந்த உப பத்திராதிபர் ஆத்திரத்துடன், "உம்முடைய அபிப்பிராயத்துக்கு ஆதாரமென்ன? ஆக்ஸ்போர்டு அகராதியா?" என்று கேட்டார்.

"இல்லை, ஸ்ரீநிவாச சாஸ்திரியார்தாம் எனக்கு ஆதாரம். நேற்றிரவு அவர் பேசக் கேட்டேன். அவர் இப்படித்தான் இப்பதத்தை உச்சரித்தார். வேண்டுமானால் நீங்கள் ஆக்ஸ்போர்டு அகராதியையும் பாருங்கள். அதுவும் சாஸ்திரியார் சொல்லுவதையே ஆமோதிக்கும்" என்றார்.

ஆங்கில பாஷையில் உச்சரிப்பு விஷயத்தில் ஆக்ஸ்போர்டு அகராதியில் கூறியுள்ளதுதான் வேதவாக்கு. அதுவும் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரைப் பின்பற்றுகிறதென்று ஓர் ஆங்கிலேயரே சொல்லுவதென்றால் சாஸ்திரியாருக்கு ஆங்கில மொழியிலுள்ள பயிற்சி எவ்வளவு அப்பழுக்கில்லாதது என்பது எளிதில் விளங்கும்!

மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வலங்கைமான் என்னும் ஊரில் ஓர் உயர்ந்த வம்சத்தில் உதித்தவர். அத்வைத மதப் பயிற்சியில் பேர்போன அடையபலம் அப்பைய தீக்ஷிதர் என்னும் பெரியாரின் குடும்பத்துடன் தொடர்பு பெற்றவர்.

இவர் பிறந்தது 1869-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 24-ஆம் தேதி. மகாத்மா காந்திக்கு ஒன்பது நாட்களே வயதில் முற்பட்டவர். இளமையில் கல்வி கற்கையில் சாதாரணமான சோபிதம் தோன்றிற்றேயன்றி பின்பு உலகப்பிரசித்தராகப் போவதைச் சூசிப்பிக்கத் தக்க ஒருவித அறிகுறியும் அப்போது இவரிடம் காணவில்லையாம். சர்வகலாசாலைப் படிப்பு முடிந்ததும் இவர் கல்வி கற்பித்தலையே தம்முடைய தொழிலாக ஏற்றுக்கொண்டு உபாத்தியாயராக அமர்ந்தார். சில வருஷங்களுக்குப் பிறகு சென்னையில் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் என்னும் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் தலைமை உபாத்தியாயரானார். இத்துடன் இவருடைய வாழ்க்கை உச்ச நிலையை அடைந்துவிட்டதுபோல் தோன்றிற்று. ஏனெனில் இவருக்கு அப்போது வயதும் கிட்டத்தட்ட நாற்பதாயிற்று.

முப்பத்தெட்டு வயது வரையில் ஒரு சாதாரணப் பள்ளிக்கூட உபாத்தியாயராயிருந்து பின்பு அரசியல் துறையில் புகழ் கிட்டவேண்டுமென்றால் அதுவும் ஓர் ஆச்சரியமே. இவர் கணக்காயராக இருக்கையில் இவருக்கு ஒரு நண்பர் ஏற்பட்டிருந்தார். அவர்தாம் ஜி. ஏ. நடேசன் என்பவர். அவர் வெளியிட்டு வந்த, 'இந்தியன் ரிவ்யூ' என்னும் மாதாந்தப் பத்திரிகைக்கு இவர் விஷயதானம் செய்துவந்தார். அப்போது தென்னாப்பிரிக்காவில் நடந்துவந்த போயர் சண்டையைப்

பற்றி இவர் எழுதிய ஓர் கட்டுரையைப் படித்து மெச்சி அந்தச் சண்டையில் கலந்துகொண் டிருந்த ஒரு தளகர்த்தர், "எந்தப் போர்வீர எழுத்தாளன் இதை எழுதினன்?" என்று பத்திராதிபரைக் கேட்டாராம். போரின் நுட்பங்களை நேரில் கண்டறிந்த ஒரு வீரனே எழுதக்கூடிய முறையில் அமைந்திருந்தது அக்கட்டுரை!

அந்நாளில் சிறந்த அரசியல் வாதியெனப் பெயர் பெற்றிருந்த கோபால கிருஷ்ண கோகலே என்னும் தேச பக்தரைப்பற்றி இவர் ஒரு புத்தகம் எழுதினர். அதைப் படித்து இன்புற்ற கோகலே இவரை மறக்கவில்லை. சில வருஷங்களுக்குப் பிறகு கோகலே ஸ்தாபித்த, 'இந்திய ஊழியர் சங்கத்தின்' அங்கத்தினராவதற்கு இவர் மனுச் செய்கையில் தாம் முன்பு படித்ததை அவர் பயன்படுத்திக் கொண்டார். அந்த மனுவில் இவர், "என் வாழ்க்கையில் பயனளிக்கத்தக்க பெரும்பகுதி ஏற்கனவே கழிந்துவிட்டது. இருந்தாலும் அங்கத்தினராக என்னை ஏற்கும்படி வேண்டுகிறேன்" என்றார். கோகலேக்குப் பிறகு அச்சங்கத்தின் தலைவராக இவரே, அங்கத்தினரால் ஒருமனதாக நியமிக்கப்பட்டார்!

இவருடைய உயர்ந்த குணங்களைக் கண்டு தெளிந்தவர் கோகலே. அப்போது கர்ஸான் பிரபு என்பவர் ராஜப்பிரதிநிதியாக இருந்து இந்தியாவை ஆண்டுவந்தார். அவரைத் தைரியமாக எதிர்த்து வாதித்துப் பெரும் புகழ் பெற்றிருந்தார் கோகலே. கர்ஸானுக்குப் பின் மின்டோ பிரபு ராஜப்பிரதிநிதியாக இந்தியாவுக்கு வந்த பிறகும் கோகலேக்கு அதிக மதிப்பு இருந்துவந்தது. அத்தகைய தேசபக்தர், தேச சேவைக்காக நிறுவிய இந்திய ஊழியர் சங்கத்துக்கு இவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது இவருடைய யோக்கியதைக்கு ஒரு சிறந்த நற்சாக்ஷிப் பத்திரமாக நிற்கிறது.

சாஸ்திரியார் மத்திய சட்டசபையில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டபோது அவருக்கு ஐம்பது வயதுக்கு மேல் ஆகிவிட்டது. எனினும் ஒரு சமயத்தில் இவரைவிட அரசியல் வட்டாரங்களில் அதிகச் செல்வாக்குடையவர் வேறொரு இந்தியரும் இல்லை.

அரசாங்கத்தினரே இவருடைய புத்தி நுட்பத்தைக் கண்டு மெச்சி இவரைப் பல குடியேற்ற நாடுகளுக்குப் பிரதிநிதியாக அனுப்பினர். சென்ற மகா யுத்தம் முடிந்ததும் நடந்த சாம்ராஜ்யக் கூட்டத்துக்கு இவர் அனுப்பப்பட்டிருந்தார். சர்வதேச சங்கம், அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டன் என்னும் நகரத்தில் யுத்த தளவாடங்களைக் குறைத்துக்கொள்ளுவதற்காக நடந்த ஒரு மகாநாடு, கானடா, ஆஸ்திரேலியா, நியூஸிலந்து, தென்னுப்பிரிக்கா இவைகளுககு இவர் பிரதிநிதியாகச் சென்றார். கடைசியில் மன்னர்பிரானின் மந்திராலோசனை சபையிலும் ஓர் அங்கத்தினராக ஆக்கப்பட்டார். இப்பதவியை வகித்ததைக் குறிப்பிடத்தான் இவரை எல்லோரும் மகாகனம் என்னும் அடைமொழியுடன் அழைக்கிறார்கள்.

கடைசியாகத் தென்னுப்பிரிக்காவில் குடியேறியிருக்கும் இந்தியரின் விஷயங்களைக் கவனிப்பதற்காக இந்திய சர்க்காரின் சார்பில் ஓர் ஏஜெண்டு பதவி ஏற்பட்டபோது முதல் முதலாக அதற்கு இவர் தாம் நியமிக்கப்பட்டார். அப்போது தம்முடைய உடல் மெலிந்த நிலையில் இருந்தும் அதையும் பாராட்டாது இவர் அப்பதவியை ஏற்றது பாராட்டத்தக்கது. அதை ஏற்க இவரே மிகத் தகுதியானவர் என்று தென்னுப்பிரிக்காவிலிருந்த இந்திய மக்களின் உயர்வுக்காகத் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் கொடுத்துப் போராடிய மகாத்மா காந்தியே சொல்லி ஆமோதித்ததும் இதையே வலியுறுத்துகிறது.

1921-இல் லண்டனில் நடந்த சாம்ராஜ்யக் கூட்டத்தில் இவர் தென்னுப்பிரிக்காவின் பிரதம மந்திரியான ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவரை நேருக்கு நேராகச் சந்தித்து அவருடைய பிற்போக்கான சில அபிப்பிராயங்களை மறுதளித்துப் பேசவேண்டியிருந்தது. அங்கே குடியேற்ற நாடுகளிலுள்ள இந்தியர்களுக்குச் சம உரிமை அளிக்க வேண்டுமென்று இவர் வாதித்தது மெச்சத் தக்கதாயிருந்ததென்று காலஞ்சென்ற தீனபந்து ஸி. எப். ஆண்ட்ரூஸ் பாதிரியார் சொல்லியிருக்கிறார். பின்பு தென்

ஆப்பிரிக்காவுக்குப் போன பின்னரும் இந்தக் காரியத்துக்கே பாடுபட்டு உழைத்தார்.

சென்றவிடமெல்லாம் பிறரை இவர் வசிகரித்தது இவருடைய சொற்பொழிவாற்றலால்தான். இவர் செய்த பிரசங்கங்களிலும் எழுதும் கட்டுரைகளிலும் சொற்கள் செவ்வனே தேர்ந்தெடுத்ததாக இருக்கும். ஒரு சொல்லைப் பெயர்த்துவிட்டு அதற்குப் பதிலாக வேறொன்றை உபயோகப்படுத்துவது முடியாததாக இருக்கும். ஆங்கில மொழியை அவ்வளவு தீர்மானமாக இவர் ஆராய்ந்திருக்கிறார். புதிய முறையில் எழுதப்பட்டிருந்த ஓர் ஆங்கில அகராதியை இவர் எப்போதும் கையிருப்பாக வைத்துக்கொண்டு சதா அதைப் படித்துக்கொண்டே இருப்பார் என்று இவருடைய நெருங்கிய உறவினர் ஒருவரிடத்திலிருந்து நான் கேட்டிருக்கிறேன்.

இவர் பேசுமுன் தம்மை எவ்வாறு ஆயத்தம் செய்து கொள்ளுவார் என்று கவனித்தால், அது சற்று வியப்பளிப்பதாகவே இருக்கும். நன்முகப் பேச வல்லவர்கள் என்று பெயர் பெற்றவர்கள் இவ்விஷயத்தில் மேற்கொள்ளும் வழிகள் பல. உதாரணமாக, கர்ஸான் பிரபு தம் சொற்பொழிவு ஒவ்வொன்றையும் முன்கூட்டியே தயார் செய்து வைத்துக்கொண்டு அதை ஒரு வார்த்தை விடாமல் மனப்பாடம் செய்துவிடுவாராம். இங்கிலாந்தின் மாஜி பிரதம மந்திரியான லாயிட் ஜார்ஜ் என்பவர் முதலில் தம் பேச்சை எழுதி, அதைப் படித்துவிட்டுக் கிழித்துப் போட்டுவிடுவாராம். பிறகு முற்றும் வேறுபட்ட ஒரு சொற்பொழிவை நிகழ்த்துவாராம். இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் என்பவர் தாம் பேசுமுன் தனிமையாக ஓர் அறையினுள் சென்று தாழிட்டுக்கொண்டு தம் பிரசங்கத்தை நடத்தி ஒத்திகை செய்துகொள்ளுவாராம். நம் நாட்டிலேயே பேசுவதில் பேர்போன ஒருவர் தம்முடைய சகாக்கள் பலரைக் கொண்டு பிரசங்கத்தைத் தயார் செய்யச் சொல்லி அவைகளினின்றும் சொற்களைப் பொறுக்கியெடுத்துத் தாம் பேசப் போவதை எழுதிக் கொள்ளுவாரென்று சொல்லப்படுகிறது.

சாஸ்திரியாரின் வழியோ இவைகளினின்றும் முற்றும் வேறு விதத்தில் அமைந்தது. தாம் நடத்தப் போகும் பிரசங்கத்தை இவர் முன்னுடியே எழுதிப் பயிலுவதில்லை. ஆனால் பேசவிருக்கும் விஷயத்தைக் குறித்துமட்டும் சிலமணி நேரங்கள் தீரச் சிந்திப்பார். பேச்சை எப்படி அமைப்பதென்று மனத்தில் திட்டம் செய்துகொள்ளுவார். அவசியமாகப் பிரயோகம் செய்ய வேண்டியவை என்று தோன்றும் சில சொற்றொடர்களை மட்டும் தேர்ந்தெடுத்துக்கொள்ளுவார். அவ்வளவுதான். பிரசங்கம்மட்டும் அச்சமயத்தில் தோன்றியபடியே அமையும்.

இவர் பேச்சைப்பற்றிச் சில ரஸமான விஷயங்கள் கூறப்படுகின்றன. இவ்வளவு அழகாகப் பேசும் திறமை வாய்ந்த இவருக்கும், பேச எழும்போது ஒரு பயம் உண்டாகுமாம். கட்டிடம் இடிந்து விழுதல், இடிவிழுதல், தீப்பற்றல், இவைபோன்ற ஏதாவது ஒரு விபத்து ஏற்பட்டு, தாம் பேச வேண்டிய அவசியம் இல்லாமல் போகாதா என்று எண்ணுவாராம். ஆனால் பேச ஆரம்பித்த பிறகு இந்தப் பயம் பறந்துவிடுமாம். அதே மாதிரியே பேச்சு முடிந்தவுடன், தாம் இன்னும் நன்றாகப் பேசியிருக்கலாமென்றாவது, சொல்ல வேண்டிய விஷயங்களில் சிலவற்றை விட்டுவிட்டோமே என்றாவது அதிருப்தியடைவாராம்.

இவருடைய பேச்சைக் கேட்டு மெச்சாதாரில்லை. பால்பர் பிரபு என்பவர், உலகத்திலுள்ள முதல் ஐந்து பேச்சாளர்களுள் இவர் ஒருவர் என்றார். பேலியல் என்னும் சிறந்த கல்லூரியின் தலைமையதிகாரி ஒரு முறை இவர் பேசுவதைக் கேட்டுவிட்டு ஆங்கில மொழியில் இவ்வளவு அழகு இருக்கிறதா என்று வியந்தார். காலஞ் சென்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பேசுவதில் சிறந்தவர் எனப் பெயர் பெற்றவர். அவரே இவருடைய பேச்சை மெச்சியிருக்கிறார். இங்கிலாந்தின் மாஜி பிரதம மந்திரி பால்டுவின் என்பவர் இவருடைய பிரசங்கம் ஒன்றைக் குறித்து, "இப்பிரசங்கம் என்னுடையதாக இருக்கக் கூடாதா என்று வருந்துகிறேன்" என்றாராம். சாம்ராஜ்ய

மகாநாட்டில் இவருடைய சொற்பொழிவை முழுவதும் இருந்து கேட்பதற்காக அப்போது பிரதம மந்திரியாக இருந்த லாயிட் ஜார்ஜ் என்பவர் அதே சமயத்தில் நடக்க விருந்த தம்முடைய மந்திரி சபைக் கூட்டத்தையும் ஒத்திப்போட்டதாகச் சொல்லப்படுகிறது.

பேசுவதில் இவ்வளவு திறமை வாய்ந்த இவர், பிறர்-அதிலும் பள்ளிக்கூட மாணவர்கள்-நன்ருகப் பேசினுல் அதைக் கேட்டுக் களிப்பார். ஒரு முறை சென்னை ராஜதானிக் கலாசாலையைச் சேர்ந்த மாணவர் விடுதியில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்த இவர் இசைந்தார். இவருடைய பேச்சு முடிந்தவுடன் மாணவர்களுள் ஒருவன் இவருக்கு வந்தனமளிப்பதற்காகச் சில வாக்கியங்கள் பேசினுன். தம் பிரசங்கம் முடிந்தவுடன் அவசரமாக வேறு ஓரிடத்துக்குப் போகப் புறப்பட்டுவிட்ட இவர் அவனுடைய சிறு பேச்சின் வனப்பைக் கண்டு மெச்சி, திரும்பி வந்து அவனை ஆசீர்வதித்துவிட்டுப் போனுர். அச் சிறுவன் பின்பு ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேறினுன்; ஆனல் ஒரு கடுமையான நோயினுல் பீடிக்கப்பட்டு இறந்தான்.

சாதாரண சம்பாஷணைகளிலும் இவர் இப்படியே பேசுவார், சந்தர்ப்பத்துக்குத் தகுந்த பொறுக்கி யெடுத்த வார்த்தைகள். இவரைப் பேட்டி காண்பவர் கள் ஒருவித சிரமமும் அடைவதில்லை. இவர் சொல்லிக்கொண்டு வருவதை அப்படியே குறித்துக் கொண்டு அதை நேராக அச்சுக்கு அனுப்பிவிடலாம். அவ்வளவு தெளிவாகவும் தீர்மானமாகவும் பேசி இவர் தம் எண்ணங்களை வெளியிடுவார்.

நம் மாகாணத்தில் கடைசியாக இவர் வகித்த பொறுப்புள்ள பதவி அண்ணுமலைச் சர்வகலாசாலையின் தலைவர் பதவி. சிறிது காலம் திறமையுடன் அதை நடத்தியபின் தேக நிலை காரணமாக அதை விட்டு விலக வேண்டி வந்தது.

அந்நிய மொழியில் அழகுடன் எழுதவும் பேசவும் திறமை வாய்ந்த இவர், தாய்மொழியில் பேசவும் எழுத

வும் பயிலாமல் அதை அலக்ஷ்யம் செய்கிறார் என்று சிலர் இவர்மேல் குறை கூறியதுண்டு. இதைத் தீர்ப்பதற் காகத்தானோ என்னவோ இவர் பிற்காலத்தில் கூட்டங் களில் தமிழிலேயே பேச முயன்று வந்தார். தமிழிலேயே தம்முடைய சுய சரிதத்தையும் எழுதியிருக்கிறார். தேச விடுதலைக்காகப் பிரியப்பட்ட இவர் அந் நாள் வருமுன்னரே காலமானது துர்ப்பாக்கியமே. இருந் திருந்தால் அரசியல் நிர்ணய வேலையில் வெகுவாகப் பங் கெடுத்துக்கொண்டு தேசத்துக்கு அரிய தொண்டு புரிந் திருப்பார்.

இருந்தமிழினால் இருந்தவர்

ஒரு மொழி மிகவும் தொன்மையானது; தொன்மையென்றால் எழுநூறு, எண்ணூறு வருஷங்களல்ல. அது தோன்றிய காலம் எதுவென்றே சரிவர வரையறுக்க இயலாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பரந்த இலக்கண இலக்கியங்களை உடையது. சுமார் ஆயிரத்து நூறு வருஷங்களுக்குமுன் அதில் எழுதப்பட்ட ஒரு காவியம் உலகத்திலேயே மிகவும் அருமையானதென்று போற்றத்தக்கது. இத்தகைய மொழியின் பண்டை நூல்களின் பரப்பும் நூல்நயமும் மட்டுமே, சில குறிப்புகளால் மக்களுக்குத் தெரிந்திருந்ததே ஒழிய அந்நூல்களின் மூலங்களையும் உரைகளையும் உருப்படியாகக் கண்டவர்கள் எவரும் இலர். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவர் தோன்றினார். பல ஆண்டுகள் உழைத்ததன் பயனாக அந்த நூல்கள் எல்லாவற்றையும் காலத்தின் கொடுமையினின்றும், கறையானின் படையெடுப்பினின்றும் விடுவித்துக் காப்பாற்றினார். ஊர்தோறும் சென்று ஏடுதேடி, கைக்கெட்டிய பிரதிகளையெல்லாம் அலசி ஆராய்ந்து, ஒவ்வொரு நூலுக்கும் திருத்தமான மூலத்தையும் புகழுடன் அவைகட்கமைந்த பழைய உரைகளையும் வெளியிட்டார். இந்த நல்லுழைப்பினால் அம்மொழியும், அம்மொழியைப் பயில்வோரும் அம்மொழி வழங்கி வந்த நாடும் பெரிதும் பயனடைந்தன.

இம்மொழிதான் தமிழ். இவ்வாராய்ச்சியாளர்தாம் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் என்னும் பெரியார்.

சாமிநாதையர் என்பது இவருடைய பெற்றோர்கள் இவருக்கு இட்ட இயற்பெயர் அல்ல. அது வேங்கடராமன் என்பது. விஷ்ணுபரமான இப்பெயர் சிவபரமான

சாமிநாதையரென மாறியதைக் குறித்து ஒரு ரஸமான வரலாறு உண்டு. ஒரு நாள் இவருடைய ஆசிரியரான மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் இவரை நோக்கி, "உமக்கு வேங்கடராமன் என்று ஏன் பெயர் வைத்தார்கள்?" என்று கேட்க, இவர், "வேங்கடாசலபதி குலதெய்வமாதலால் எங்கள் குடும்பத்தில் ஒவ்வொரு வரும் அந்தக் கடவுள் பெயரையே கொள்வது வழக்கம்" என்று சொன்னார்.

அவர், "உமக்கு வேறு பெயர் ஏதேனும் உண்டோ?" என்று மீண்டும் கேட்டார்.

"எங்கள் வீட்டில் என்னைச் சாமா என்று அழைப்பார்கள்" என்று சொல்லி அது சாமிநாதன் என்பதனின்றும் மாறி வந்தது என்றும் விளக்கினார். உடனே அவ்வாசிரியர், "சாமிநாதன் என்ற பெயர் எவ்வளவு நன்றாக இருக்கிறது! உம்மை நானும் அந்தப் பெயராலேயே அழைக்கலாமென்று எண்ணுகிறேன். நீரும் இனிமேல் அந்தப் பெயரையே சொல்லிக்கொள்ளும்" என்று சொன்னார். அப்போது இவருக்கு 18-ஆம் பிராயம். பதினேழு வருஷங்களாக வேங்கடராமன் என்ற பெயரைப் பூண்டு வந்த இவர், அன்று முதல் சாமிநாதனாக மாறினார்.

இவர் பூர்விகமாகத் தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள உத்தமதானபுரம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவ்வூர் உண்டானதைப்பற்றியும் இதற்கு இப்பெயர் கிடைத்ததைப்பற்றியும் ஒரு ரஸமான வரலாறு இவர் சொல்லியே நமக்குக் கிடைத்திருக்கிறது. தஞ்சைச் சம்ஸ்தானாதிபதி ஒருவர் சுமார் இருநூறு வருஷங்களுக்குமுன் தம் பரிவாரங்களுடன் நாட்டைச் சுற்றிப் பார்க்கும்போது தஞ்சாவூருக்குக் கிழக்கே பதினைந்து மைலுக்கப்பால் பாபநாசத்துக்கருகில் ஓரிடத்தில் தங்கினார். அன்று ஏகாதசி தினமென்று தெரியாமல் போஜனம் செய்துவிட்டார். அது தெரிந்தவுடன் அன்று நேர்ந்த விரத பங்கத்துக்குப் பிராயச்சித்தமாக ஏதாவது ஒரு நற்காரியத்தைச் செய்ய நினைத்தார். உடனிருந்த சில பெரியோர்களின் யோசனையின்பேரில் அவ்விடத்திலேயே ஓர் அக்கிரகாரத்

தைத் தோற்றுவித்தார். நாற்பத்தெட்டு வீடுகளும், இருபத்து நான்கு கிணறுகளும் அமைத்து அங்கே நாற்பத்தெட்டு உத்தம அந்தண மரபினரைக் கொணர்ந்து குடியேற்றினார். ஒவ்வொருவருக்கும் நன்செய் புன்செய் நிலங்களையும் நன்கொடையாக வழங்கினார். இப்படித் தோன்றியதுதான் உத்தமதானபுரம் என்னும் ஊர். ஓர் உத்தமமான தானப் பொருளாக அமைந்தபடியால் அதற்கு இப்பெயர் உண்டாயிற்று.

இவர் தந்தையாரின் பெயர் வேங்கடசுப்ரமண்ய ஐயர் என்பது. நாளடைவில் அது வேங்கடசுப்பைய ரென்று மாறிற்று. அவர் சங்கீதங் கலந்து கதாப் பிரசங்கம் செய்வதைத் தம் ஜீவனோபாயமாகக் கைக்கொண்டவர். அவருக்கு முதல் குமாரராக 19-2-1855-இல் உதித்தவர் நம் சாமிநாதையர். இவர்கள் பிராமண மரபில் அஷ்ட ஸஹஸ்ரம் அல்லது எண்ணாயிரம் என்னும் பெரும் பிரிவில் அடங்கிய அத்தியூர்ப் பிரிவு என்னும் உட்பிரிவைச் சேர்ந்தவர்கள்.

சாமிநாதையர், தமிழ் நாட்டில் தொன்று தொட்டுக் கடைப்பிடித்து வந்த முறையில் வித்தியாப்பியாசம் செய்தவர். அதாவது, பலர் கூடிய பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கல்வி பயிலவில்லை; தகுந்த ஆசிரியர்களைத் தேடிப் பிடித்து அவர்களிடம் குருகுலவாசம்போல் பாடம் கேட்டவர். இவர் ஆரம்பத்தில் உத்தமதானபுரத்திலேயே திண்ணைப்பள்ளிக்கூடம் நடத்திவந்த நாராயணையர் என்பவரிடம் அரிச்சுவடியும் எண்சுவடியும் கற்றார். பின்பு அவ்வூரிலேயே சாமிநாதையர் என்பவர் நடத்தி வந்த பள்ளிக்கூடத்தில் சேர்ந்து அங்கே முதலில் ஏட்டில் எழுதக் கற்றுக்கொண்டார். அதாவது காகிதத்தில் பென்ஸிலாலோ மசியில் தோய்த்த பேனாவாலோ எழுதுவதில்லை; பனையோலைச் சுவடியில் எழுதுவதுதான். வடமொழிப் பயிற்சியும் உடைய அவரிடம் ஐயரவர்கள் சம்க்ஷேப ராமாயணம், விஷ்ணு ஸஹஸ்ரநாமம், நீதி சாரம், அமரத்தில் மூன்று காண்டங்கள் என்னும் வடமொழி நூல்களைக் கற்றுக்கொண்டார். இத்துடன் அவரிடம் தமிழும் கணக்குங்கூடக் கற்றார். இவ்விள வயதில்

சங்கீதமும் சித்திரம் எழுதவும் பயின்ருர். அதே சமயத்தில் அவ்வூரில் சிவஸ்வாமி ஐயர் என்பவரிடம் இவர் ஆங்கில எழுத்துக்களும் எண்களும் (அதாவது 1 2 முதலிய வடிவங்களுடைய அராபிக் எண்கள்) கற்ருர்.

அங்கிருந்து இவர் குடும்பம் அரியிலூருக்குப் போன பின்பு கிருஷ்ணவாத்தியார் என்பவரிடம் ஆத்திசூடி, மூதுரை, மணவாள நாராயண சதகம் முதலிய சதகங்கள், ரத்தின சபாபதி மாலை, நாலடியார், குறள் முதலிய நூல்களைப் பயின்ருர். அக்காலத்தில் வெகு இளம் பிராய மானதால் இத்தகைய நூல்களைப் பயிலுவ தென்ருல் பெரும்பாலும் மனப்பாடம் செய்வதென்றே பொருள். நயத்தை அறிந்து அநுபவித்தல் அதிகமாக இராது. அதற்கு வேண்டிய முதிர்ந்த பருவம் அப்போது இவருக்கு இல்லை.

இந்தச் சமயத்தில் சங்கீதத் துறையில் இவரை விட வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்த இவர் தந்தை யார் அதற்கு அநுசரணையாக இருக்கும் தெலுங்கு பாஷையை இவர் பயில ஏற்பாடு செய்தார். அதன் பயனுல் தெலுங்கில் கணிதம் முதலியவை, வேமன்ன சதகம், ராமதாச சதகம் என்னும் சிறு நூல்களைக் கற்ருர். ஆனுல் இவர் மனம் அம்மொழியில் ஈடுபடவில்லை யாகையால் அதைப் பயிலுவதை விட்டுவிட்டார். அதில் இவர் தந்தையாருக்கு அச்சமயம் கொஞ்சம் கோபங்கூட. ஆனுல் அதற்கு இவர் என்ன செய்வார்? இவர் மனத்தைத் தமிழும் சங்கீதமும் கவர்ந்ததுபோல் அம்மொழி கவர வில்லை.

இதற்கப்புறம் இவர் கற்றதெல்லாம் பள்ளியில் அல்ல, ஆசிரியரின் வீட்டிலேதான். இதன் நடுவில் ஜீவனே பாயமாக அரியிலூரில் தில்லைக் கோவிந்தபிள்ளை என்பவ ரிடம் கிராமக் கணக்கு வேலையையும் கற்ருர்.

தனிப்பட்ட ஆசிரியரை அண்டி அவரிடம் இவர் முதல் முதல் தமிழ் கற்றது அரியிலூர்ச் சடகோபையங் கார் என்பவரிடந்தான். ஐயரவருடைய தமிழ்ப்பயிருக்கு

முதல் முதல் விதை விதைத்தவர் இவரே. அவரிடம் ஐயரவர்கள் கேட்ட முதற்பாடம் அவ்வாசிரியர் இயற்றிய ஆலந்துறை ஈசர் பதிகம் என்பது. இசைப் பயிற்சியும் அதில் கலந்திருந்தது. அவரிடம் ஐயர் கற்ற வேறு பாடங்கள் திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கட மாலை முதலியன.

அடுத்தபடியாக இவர்கள் குடும்பம் அரியிலூருக்கருகிலுள்ள குன்னம் என்னும் ஓர் ஊருக்குப் போகவே அங்கே சிதம்பரம்பிள்ளை என்ற ஒரு செல்வவந்தரிடம் இவர் தமிழ்ப்பாடம் கேட்டார். அவரிடம் கேட்ட பாடங்கள் திருக்குறளும் திருவிளையாடற் புராணமுமே. இத்துடன் அவ்வாசிரியரிடம் கிராமக்கணக்கும் பயின்று வந்தார். அவ்வூரில் இருக்கையில் அங்கே வந்து போன வேறு சிலரிடமும் இவர் பாடம் கேட்டார்.

பின்பு கார்குடியென்னும் ஊரில் கஸ்தூரி ஐயங்கார் என்ற ஒருவரிடம் நன்னூல் பாடம் கேட்டார். அவரிடமும் அவருடைய நண்பரான சாமி ஐயங்கார் என்பவரிடமும் ஐயரவர்கள் பல நூல்களைப் பயின்றார்.

இவைகளுக்கிடையில் இவருக்குக் கல்யாணம் நடக்கவே, அதையொட்டி மீண்டும் தம் ஊராகிய உத்தமதானபுரத்தில் இவர் சில நாட்கள் தங்க நேர்ந்த போது அவ்வூரில் ராகவையர் என்ற ஒருவரிடம் பாடங் கேட்டார். அவரிடத்திலிருந்துதான் இவர் முதல் முதலாக மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களைப்பற்றியும் அவருடைய முக்கிய சிஷ்யராகவும், கும்பகோணத்தில் அரசாங்கக் கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராகவும் இருந்த தியாகராச செட்டியாரைப்பற்றியும் கேள்விப்பட்டார்.

அடுத்தபடியாக இவர் பாடம் கேட்டது செங்கணம் என்னும் ஊரில் விருத்தாசல ரெட்டியார் என்பவரிடம். அவரிடம் பாடம் கேட்ட நூல்களுள் முக்கியமானது யாப்பருங்கலக்காரிகை என்பது. அவரிடம் இவர் படித்த ஏனைய நூல்கள் தண்டியலங்காரம், திருக்குறள், திருக்

கோவையார், கம்பராமாயணத்தில் சில பகுதிகள் முதலியன. இத்துடன் சில பாட்டியல்களும் (அதாவது காப்பியங்களின் லக்ஷணங்களைக் கூறும் இலக்கண நூல்கள்) படித்தார். விருத்தாசல ரெட்டியார் என்பவர் தாம் ஐயரவர்களை மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களிடம் போய்ப் பாடங் கேட்கும்படி வற்புறுத்திச் சொன்னவர்.

பின்பு 1870 முதல் நான்கு வருஷங்கள் மகா வித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடங் கேட்கும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது. அவர் காலமானபின் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் சுப்பிரமணிய தேசிகரிடம் கல்வி பயின்றார். பிள்ளையவர்களிடம் இவர் அந்தாதிகள், கலம்பகங்கள், கோவைகள், பிள்ளைத்தமிழ்கள், உலாக்கள், தூதுகள் முதலிய பிரபந்த நூல்களைக் கற்றார். இவ்வளவு பெரிய வித்துவான்களிடம் தமிழ் பயின்றிருக்கும் இவரே தமிழுக்கு அரிய பெரிய தொண்டுகள் இயற்ற வல்லார் என்பதில் சிறிதும் ஐயமுண்டோ?

மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களிடம் இவர் பாடங்கேட்டது, இவர் வாழ்க்கையில் நான்கே வருஷங்கள் தாம். என்றாலும், அதில் அவை ஒரு முக்கியமான பகுதியாக அமைந்தன. அதை இவர் எழுதியுள்ள மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

வேதத்தின் ஒரு பகுதியான சாந்தி பாடத்தில் ஆசானும் மாணவனும் தங்களுக்குள் மனஸ்தாபம் வராமல் அன்னியோன்யமாயிருந்து பாடம் கற்கவேண்டுமென்று கடவுளை வேண்டிக்கொள்கிறார்கள். அத்தகைய பரஸ்பர அன்பும் நெருங்கிய உறவும் இவருக்கும் இவர் ஆசிரியர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களுக்கும் இடையில் தான் இருந்தது என்று பயமின்றிச் சொல்லிவிடலாம்.

முதல் முதலில் இவர் திருவாவடுதுறை மடத்திலேயே சில காலம் தமிழ்ப்பாடம் கற்பித்து வந்தார். பின்பு தியாகராச செட்டியாரின் முயற்சியின் பயனால் கும்பகோணம் காலேஜில் இவருக்குத் தமிழாசிரியர் வேலை

கிடைத்தது. 1880-முதல் 1903-வரையில் அங்கும், பின்பு 1919-வரையில் சென்னை மாகாணக் கலாசாலையிலுமாகச் சேர்ந்து இவர், 39 வருஷங்கள் தமிழ்ப் பாடஞ் சொல்லிக் கொடுத்தல் என்னும் பரோபகாரமான வேலையை மேற்கொண்டு நடத்தினார். அதற்கப்புறம் உபகாரச் சம்பளம் பெற்று, சர்க்கார் வேலையிலிருந்து விலகிய பின்பும் சிதம்பரத்தில், அண்ணாமலைச் சர்வகலாசாலையில் சில காலம் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார்.

இவர் வாழ்க்கையின் முக்கிய அம்சம் என்னவென்றால் அது தமிழுக்காக உழைத்ததுதான். இவருடைய உழைப்புக்கும் சுறுசுறுப்புக்கும் எறும்பையும் தேனீயையுந்தான் இணையாகக் கூறலாம். இவர் தம் தள்ளாத காலமான 90-ஆம் வயதிலும் தொடர்ந்து ஒரு வாரப் பத்திரிகையிலும், ஒரு மாதப் பத்திரிகையிலும் கட்டுரைகள் எழுதியதுடன் தமிழ்ப் பிரசுரங்களும் செய்து வந்தார். ரேடியோவிலும் சொற்பொழிவுகள் நடத்தினார். இவர் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் எவ்வாறு கழிகிறது என்பதை நோக்கினால் இவர் உழைப்பு எத்தன்மையது என்பது நன்கு விளங்கும்.

அதிகாலையில் நான்கு மணிக்கே துயிலெழுதல், பின்பு காலைக் கடனைக் கழித்தல், ஆறு மணி வரையில் ஜபமும் அதற்கப்புறம் தேவார பாராயணமும் செய்தல் இவை இவருக்குத் தவறாத பழக்கம். இவருடைய அபார சிவபக்தியின் விளைவுதான் பின் இரு காரியங்களும். பின்பு உடன் இருக்கும் மாணாக்கர்களுடன் பங்கிட்டுக்கொண்டே காலை ஆகாரம் அருந்துவார். அப்புறம் பதினொரு மணிவரையில் தமிழ்த்தொண்டு செய்வார். அதாவது, ஏட்டுச் சுவடிகளைப் பார்ப்பது, பிரதி செய்வது, செய்த பிரதியை ஒப்பு நோக்குவது, அச்சிலிருந்து வந்த 'ப்ரூப்'களைத் திருத்துவது, குறிப்புரை எழுதுவது, ஆராய்ச்சி செய்வது முதலியன. இவ்வேலைகளில் முனைந்திருக்கையில் சிறிது அலுப்பு உண்டானால் அருகில் உள்ளோருக்குப் பாடஞ் சொல்லி அதைத் தீர்த்துக்கொள்ளுவார். இதற்கிடையில் யாராவது அன்பர்கள் இவரைப் பார்க்க வருவார்கள். அவர்களுடன் அளவளாவு

வார். பிறகு ஸ்நானம், ஜபம், பூஜை இவை முடிந்த பின் பகல் போஜனம் செய்வார். அதற்குப் பின் சற்றுத் தூங்கி இளைப்பாறுவார். இத்தூக்கத்தை உண்டுபண்ணு வதற்காகப் படுத்துக்கொண்டே சிறிது பாடஞ் சொல்வார். அல்லது பிறரை ஏதாவது வாசிக்கச் சொல்லிக் கேட்பார். ஒரு மணிக்கு எழுந்து தினசரிப் பத்திரிகை களைப் படித்தோ படிப்பித்தோ சமாசாரங்களைத் தெரிந்து கொண்டபின் மறுபடியும் தமிழாராய்ச்சியை இரவு ஒன்பது மணிவரையில் நடத்துவார். இதற்கிடையில் மாலையில் வரும் 'ப்ரூப்'களைப் பார்ப்பார். இராச்சாப்பாடு. பிறகு சில நாள் இரவு 11, 12 மணி வரையில்கூட மாண வர்களுக்குப் பாடஞ் சொல்லுவார். பிறகு படுத்துக் கொண்டு செய்யுள் இயற்றிக்கொண்டே ஈசுவர தியானத் தில் மனம் லயித்துத் தூங்கிவிடுவார். சில நாள் நடு இர வில் விழித்துக்கொண்டுவிட்டால் அப்போதும் ஏதாவது நூலைப் பார்த்துக்கொண் டிருப்பார். இது இவர் வாழ்க் கைப் புத்தகத்தில் ஓர் ஏடு. எப்படி இதிலுள்ள இவர் உழைப்பு! இதனால்தான் உழைப்பின் அவதாரம் என்று கூடச் சிலர் இவரைக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இவருடைய தமிழ் நூலாராய்ச்சி சாமான்ய மானதன்று. எண்ணிறந்த இடையூறுகளைச் சதா விலக்கிக்கொண்டே இருக்க வேண்டும். முதல் முதலில் தாம் பதிப்பிக்க விரும்பும் பழைய நூலுக்குத் தக்க ஏடு கிடைக்க வேண்டும். இதற்காக ஊரூராகத் திரிய வேண்டும். போன இடங்களில் சில சமயங்களில் நேரிடும் அவமதிப்பையும் ஏமாற்றத்தையும் பொருள்படுத்தக் கூடாது. கிடைத்த ஏட்டில் பாடம் சுத்தமாக இல்லாமல் போனால் அதே நூலின் வேறு பிரதிகளைத் தேட மீண்டும் பிரயாணம் தொடங்க வேண்டும். விளங்காத சொற்க ளுக்கு உரை சொல்லுவாரை அண்டித் தக்க உரைகளைச் சேகரிக்க வேண்டும். பிறகு அச்சுப்போடப் பணவுதவி செய்யச் செல்வவந்தர்களைப் போய்ப் பார்க்க வேண்டும். இவர் வெளியிடுவதைக் கண்டு மனஞ்சகியாத பொறாமைக் காரர்கள் இவருக்கு இழைத்த இன்னல்களினால் மனம் தளராது எடுத்த காரியத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

புத்தகம் வெளிவந்த பின்பும் அது விற்று அதில் போட்ட பணத்தை எடுக்க வேண்டுமே என்னும் கவலை வேறு. இவ்வளவு தொல்லைகள் இருந்தும் 1880-இல் தொடங்கிய அவ்வாராய்ச்சித் தொண்டை விடாது அறுபது வருஷங்களுக்குமேலாக இவர் நடத்தி வந்தாரென்றால் இவருக்கு எவ்வளவு நெஞ்சமுத்தமும் அநுபவமும் இருந்திருக்க வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும்.

பண்டைத் தமிழ் நூலாராய்ச்சியில் ஐயரவர்களின் நோக்கத்தைச் செலுத்தியவர் சேலம் ராமசாமி முதலியார் என்னும் பிரமுகர். இவர்கள் இருவருக்கும் இடையில் நிகழ்ந்த முதல் சந்திப்பு மிகவும் விசித்திரமானது. இவர் அவரை முதல் முதலில் 21-10-1880-இல் பார்த்தபோது தாம் பிள்ளையவர்களிடம் பாடங்கேட்டவர் என்றும், தமக்குப் பாடமான நூல்கள் பல என்றும் கூறி அவைகளின் பெயர்களைச் சொல்லி ஒரு நீண்ட ஜாபிதாவாக அடுக்கிக்கொண்டே போனார். முதலியார் சற்றும் அசையாமல் இருந்தது இவருக்குப் பெருத்த வியப்பை அளித்தது. கடைசியில் முதலியார், "இவற்றையெல்லாம் படித்து என்ன பிரயோசனம்?" என்று சொல்லி, "பழைய நூல்களில் ஏதாவது படித்ததுண்டா?" என்று கேட்டுத் தம்மிடமிருந்த சிவகசிந்தாமணி என்னும் நூலைக் கொடுத்து அதைப் படிக்கச் சொன்னார். அதுதான் இவருடைய பிற்கால ஆராய்ச்சிக்கு அஸ்திவாரம் போட்டதுபோல் அமைந்தது. அதுமுதல் ஊரூராகச் சென்று பண்டைத் தமிழ்நூல்கள் அடங்கிய ஏடுகளைத் தேடுவது, அவைகளை ஊன்றிப் பரிசோதித்துக் குற்றமுள்ள பாடங்களை வேறு திருத்தமான பிரதிகளின் உதவியால் செப்பனிட்டுப் பின்பு அந்நூல்களை வெளியிடுவது என்னும் பணியை மேற்கொண்டார். இம்முயற்சியால்தான் மறைந்து கிடந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி என்னும் தொன்மையான காப்பியங்களும், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என்னும் சங்க நூல்களும், ஏனைய பிற்கால நூல்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

சாதாரணமாகத் தமிழ் உபாத்தியாயர்களிடத்தில் பிறருக்கு அதிக மதிப்பு இருப்பதில்லை. ஆனால் இவரிடத்

தில்மட்டும் எல்லோரும் பெரும் மதிப்பு வைத்திருந்தார்கள். இவர் வேலை பார்த்து வந்த காலேஜ்களிலுள்ள பிரின்ஸி பால்கள் பலருக்கு இவரிடம் விசேஷ மதிப்பு இருந்தது. சென்னைப் பிரசிடென்ஸி காலேஜில் பிரின்ஸிபாலாயிருந்த பில்டர்பெக் துரை என்பவர் இவருடைய தமிழாராய்ச்சி யைக் குறித்து அரசாங்கத்தாருக்குத் தெரிவித்து 1905-இல் இவருக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார்.

கும்பகோணத்தில் இவர் தமிழாசிரியராக இருந்த போது அங்கே ஆங்கிலம், சரித்திரம், கணிதம் முதலிய பகுதிகளுக்கு ஆசிரியராக இருந்தவர்கள் இவரைத் தங்க ளுக்குச் சமமாகவே கருதி மதித்து வந்தார்கள். அவர்கள் இவருடன் எப்போதும் ஏதாவது நல்ல விஷயங்களைக் குறித்துப் பேசிக்கொண்டே இருப்பதுடன் தங்கள் அறை யிலிருந்து வகுப்புக்குப் பாடம் கற்பிக்கப் போகையில்கூட வழியில் இவ்விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே போவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்குமாம்.

இவருடைய ஆசிரியரிடத்தில் இவருக்கு அதிக பக்தி உண்டு. அவரைப்பற்றிச் சொல்ல நேரிடும்போதெல்லாம் இவர் வெகு மரியாதையோடுதான் சொல்லுவார். அவர் பெயரின் பின் 'அவர்கள்' என்னும் மரியாதைச் சொல் லைச் சேர்த்துத்தான் எப்போதும் இவர் குறிப்பார். சந்தர்ப்பத்தை ஒட்டி ஒரு முறை ஒருமையில் அவருடைய பெயரைக் குறிக்க நேர்ந்தபோது, கீழே ஒரு குறிப்பில் அப்படிச் செய்ததற்காக வருந்துகிறார். குறிப்பிட்ட சந்தர்ப்பம் வருமாறு:

மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தில் முதல் பாகத்தில் 2-ஆம் அத்தியாயத்தில் 'இளமைப் பருவமும் கல்வியும்' என்னும் தலைப்பில் 'கல்வி பயிலத் தொடங்கல்' என்பதைப் பற்றி,

"மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு ஐந்து பிராயமானவுடன் சிதம்பரம்பிள்ளை வித்தியாரம்பம் செய்வித்துத் தம் பள்ளிக்கூடத்திலேயே கல்வி பயிற்றத் தொடங்கினார்..." என்று எழுதி, இதற்கடியில் ஒரு குறிப்பில், 'பிள்ளைய

வர்களை இவ்வாறு பெயர் குறித்தெழுதுவதற்கு அஞ்சுகிறேன்' என்று எழுதியிருக்கிறார்!

இவர் சாந்த குணம் உடையவர். கோபம் என்பதே வராது. மிக்க பொறுமை உடையவர். அது இவர் தோற்றத்திலேயே நன்கு புலப்படுகிறது. பிறர் மனம் நோகாமல் பேசுவார். நான் ஒரு முறை இவரைப் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கையில் வீட்டுக் கூடத்திலும் முற்றத்திலும் இவர் வீட்டுப் பிள்ளைகள் சிலர் செய்த சப்தம் எங்கள் பேச்சுக்கு இடைஞ்சலாக இருந்தது. அப்பிள்ளைகளை அப்புறம் போகச் சொல்லிவிட்டு, "இக்காலத்துப் பிள்ளைகளின் நடத்தையே கெட்டுவிட்டது. தற்கால நாகரிகச் சின்னங்கள் இவர்களிடம் தோன்றுகின்றனவே ஒழிய முன்போல் உயர்ந்த ஒழுக்கமும் சீலமும் இல்லை" என்று சொல்லி மனம் நொந்தார். இச் சின்னங்களில் சில என்னிடமும் உண்டென்று நான் சொல்லவே, தம்மை அறியாமல் என்னையும் குறித்துவிட்டதை எண்ணி அதற்குத் தக்கபடி சமாதானம் சொன்னார். இச் சம்பவம் மேற்கூறிய இவருடைய குணத்தை நன்கு வெளிப்படுத்துகிறது.

தமக்கு எள்ளளவேனும் உதவி செய்தவர்களையும் இவர் ஒரு நாளும் மறக்கமாட்டார். சமயம் கிடைத்தபோதெல்லாம் அவர்கள் செய்த உதவியை வெளிப்படையாகக் குறித்துப் பாராட்டித் தம் நன்றியைக் காட்டுவார். இவர் எழுதிவந்த சுய சரித்திரத்தைப் படித்தால் அது நன்றாகப் புலப்படும். தமக்கு முதல் முதல் சர்க்கார் வேலையைத் தேடிக் கொடுத்த தியாகராச செட்டியாரின் பெயருக்கு அழியாத நிலையைக் கொடுக்கக் கருதி அதைச் சென்னை, திருவேட்டீசுவரன் பேட்டையில் பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள தம் வீட்டுக்கே கொடுத்திருக்கிறார்.

ஜீவனில்லாத முறையில் யாராவது தமிழில் கட்டுரைகள் எழுதினால் தமிழைச் சுவையறிந்து அநுபவித்த இவருக்கு, அவைகளைக் கண்டு மனம் நொந்துவிடும். "தற்காலத்தில் யார் யாரோ எழுதுகிறார்கள்; ஆனால் அவர்கள் எழுதுவதில் ஜீவன் இல்லை" என்று

என்னிடம் இவர் ஒரு முறை குறை கூறியிருக்கிறார். இதே மாதிரி சரியான பதப் பிரயோகங்களைக் கண்டு இவர் மகிழவும் மகிழ்ந்திருக்கிறார். காமகோடி பீடாதிபதியவர்கள் ஒரு சமயம் சிவகங்கை சம்ஸ்தானாதிபதிக்கு, 'சாந்த மண்டலபதி' என்னும் பட்டத்தை வழங்கினார். அதிலுள்ள 'மண்டலம்' என்பதுதான் அம்மன்னரின் ஆள்கைக்கு உட்பட்ட நிலப்பரப்புக்குப் பொருத்தமான பதம் என்று சொல்லி அதை இவர் பாராட்டினார். இவர் நிகழ்த்திய ரேடியோப் பிரசங்கம் ஒன்றில்கூட இவ்விஷயத்தையே சற்று விரிவாக எடுத்துச் சொன்னார். "பதப்பிரயோகம் செய்கையில் தமிழில் 'மரபு' என்று ஒன்று உண்டு; அதை அநுசரித்தே பதங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று சொல்லித் தக்க உதாரணங்களால் அதை விளக்கிக் காட்டினார். கல்வி கற்ற ஒருவர் இவர் கையிலுள்ள ஏட்டுச் சுவடிகளைச் சுட்டிக் காட்டி, "இந்தச் சருகுகளில் பிழையொன்றும் இராதா?" என்று கேட்ட கேள்வியிலுள்ள, சருகு என்பது தமிழ் மரபுக்குத் தவறான பிரயோகம் என்றும், அதே சொல் அதே பொருளில் படிப்பில்லாத ஒரு மறவனின் வாக்கில்,

'தீண்டரிய மடப்பனையின்
    சருகை வாரிச்
சிற்றிரும்பாற் சுற்றிவரச்
    செதுக்கிக் கூட்டி
நீண்டதுவும் சுருண்டதுமா
    வரைந்து சுற்றி
நிருபமெனக் கொடுத்தெதிரே
    நிற்கும் தூதா'

என்று 'திருவருணைக் கலம்பகத்தில்' ஆசிரியர் வைத்திருப்பது பிழையில்லாதது என்றும், அப்பிரசங்கத்தில் எடுத்துக் காட்டினார். மேலும் அச்சொற்பொழிவில் பிற பாஷைகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும்போதும் இந்த 'அதர்' அல்லது 'வழி' அதாவது 'மரபு' பிறழாமல் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தி, அதற்கு மேற்கோளாக,

'மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்' என்னும் தொல்காப்பிய அடியையும் எடுத்துச் சொன்னார்.

இவர் தம் வாழ்க்கை முழுவதும் தமிழ்த்தெய்வத்தின் சேவைக்கே அர்ப்பணம் செய்யவேண்டுமென்ற முக்கிய நோக்கத்தை உடையவர். இதே கருத்தைக் கொண்ட இரண்டடிகளை இவர் 'தமிழ் விடுதூது' என்னும் ஒரு நூலின் 151-ஆம் கண்ணியில் கண்டு அப்படியே மனம் உருகிவிட்டார். அவைகளுடன் இன்னும் இரண்டு அடிகளைத் தாம் இயற்றி அதனால் அமைந்த வெண்பாவைத் தம் வாழ்க்கையின் முக்கிய லக்ஷ்யத்தை எடுத்துரைக்கும் வெண்பாவாக அமைத்துக்கொண்டார்.

> 'இருந்தமிழே உன்னால்
> இருந்தேன் இமையோர்
> விருந்தமிழ்தம் என்றாலும்
> வேண்டேன்—திருந்த
> உதிப்பித்த பன்னூல்
> ஒளிர அடியேன்
> பதிப்பிக்க வேகடைக்கண் பார்'

என்னும் உருக்கொண்ட இவ்வெண்பாவை இவர் வெளியிட்டிருக்கும் தக்கயாகப் பரணிப் பதிப்பின் முகவுரையில் தமிழ்த்தெய்வ வணக்கமாகச் சேர்த்திருக்கிறார்.

இவருடன் அளவளாவுதல் ஒரு தனி இன்பத்தைக் கொடுக்கும். இவர் பேச்சில் நகைச்சுவை ததும்பும். இவர் கலாசாலைகளில் பாடம் சொல்லிக்கொடுக்கையி லும் விஷமஞ்செய்யும் மாணவர்களை இந்நகைச் சுவையின் உதவியினாலேயே திருத்திவிடுவார். ஒரு முறை வகுப்பில் இவர் பாடம் நடத்திக்கொண் டிருக்கையில் பின்னணியில் விஷமம் செய்துகொண் டிருந்த ஒரு பையனை நோக்கி இவர் புன்னகையுடன், "ஐயர்வாள்! அது இயற்கையோ? செயற்கையோ?" என்று கேட்டதும், வகுப்பு முழுவதும் கொல்லென்று நகைக்க, இவர், தான் குரங்குச் சேஷ்டை செய்பவன் என்று சுட்டிக் காட்டிவிட்டார் என்பதை உணர்ந்து வெட்கி, அதுமுதல்

அம்மாணவன் பாடங்களைக் கவனித்துக் கேட்டு வந்தானும்.

இவர் மாணவருள் ஒருவர் எனக்குத் தமிழாசிரியராக இருந்தார். ஒரு சமயம் நானும் என் உறவினர் ஒருவரும் அவரைத் தெருவில் சந்தித்தோம். உடன் இருந்தவர் யாரென்று அவர் வினவ, நான், "இவன் என் அம்மாஞ்சி (அம்மான் சேய்)" என்றேன். உடனே புன்முறுவலுடன் ஆசிரியர், "இவ்வுறவை அவர் சொல்லியிருந்தால் நன்றாயிருக்கும்!" என்றார். அம்மாஞ்சி என்னும் சொல்லுக்கு அசடு என்று ஒரு பொருள் ஏற்பட்டுவிட்டபடியால் அம்மாதிரி அவர் பதில் சொல்ல முடிந்தது. இம்மாதிரியே சிலேடை செய்வதைப் பல தமிழ் வித்துவான்களிடம் காணலாம். ஐயரவர்களிடமும் இது உண்டு. ஒரு முறை நான் இவரைக் கண்டு பேசிக்கொண்டிருக்கையில் இவருடன் நெருங்கிப் பழகியிருந்த ஒரு பெரியார் உயிர்நீத்ததைக் குறிக்க, "அவர்கள் சமீபத்தில்தான் தவறிவிட்டார்கள்" என்றேன். உடனே பளிச்சென்று, "அவர் ஒரு நாளும் தவறவே மாட்டார்" என்று சொல்லி நகைத்தார். நான் வெட்கினேன்.

ஆயிரம் பிறைகட்கு மேற்கண்ட இவரைத் தற்சமயம் தமிழுலகம் தமிழ்த்தாத்தா என்று குறிக்கிறது. அது தமிழ்மொழி பயின்ற வயோதிகர் என்று பொருள் அளிப்பதுடன், அதில் தமிழுலகுக்கே நூல்களைச் சலிக்காமல் எடுத்து வழங்கும் ஒரு 'தாதா' (வள்ளல்) என்ற பொருளும், "நான் பரிசோதித்து வெளியிட எனக்கு மேன் மேலும் ஏடுகளைத் தா, தா" என்று தமிழுலகை நோக்கி இவர் சொல்லுகிறார் என்ற பொருளும் தொனிக்கின்றன.

தமிழில், பிறரது வாழ்க்கை வரலாறுகளையும், சுய வாழ்க்கை வரலாற்றையும் வசனத்தில் இதுகாறும் ஒருவரும் எழுத முன்வரவில்லை. இத் துறையிலும் இவர் பிறருக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறார். இவருடைய ஆசிரியரின் வாழ்க்கையைப்பற்றி இவர் எழுதியிருக்கும் மகாவித்வான் திரிசிரபுரம் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரமும், தம் வாழ்க்கைப் போரைப்பற்றியே இவர் வாரந்தோறும் ஆனந்த விகட

னில் எழுதி வந்த 'என் சரித்திரம்' என்பதும் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தேனென ருசிக்கின்றன.

இவருடன் சிறிது நேரம் அளவளாவினாலும், நமக்கு

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்னும் குறளின் உண்மை நன்கு புலப்படும்.

இவருடைய 'என் சரித்திரம்' முற்றுப் பெறாமல் இருக்கையிலும், சுத்தமான கம்பராமாயணப் பதிப்பு ஒன்று இவரிடத்திலிருந்து வெளிவராமல் இருக்கையிலும், இவர் 28-4-1942-இல் திருக்கழுக்குன்றத்தில் உயிர்நீத்தார். இதனால் தமிழ் நாடு மீளாத் துயரத்தில் ஆழ்ந்தது.

5

உவமையினுல் அரசு புரிந்தவர்

1927-ஆம் வருஷத்தின் முற்பகுதியில் மகாத்மா காந்தி சென்னைக்கு விஜயம் செய்வதாக இருந்தார். சென்னையிலுள்ள மாணவர்களுக்கும் கதர் இயக்கத்தில் ஏற்பட்டிருந்த ஊக்கத்தைத் தெரிவிக்க அத்தருணத்தைப் பயன்படுத்தி, அம் மாணவர்களால் ஒரு பணமுடிப்பு அவருக்கு அளிக்கப்படவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. இதற்கு முயற்சி எடுத்துகொண்டவர் ஒரு பிரபலத் தென்னிந்திய அரசியல் தலைவர். இந்த நற் காரியத்தில் தம்முடன் உழைக்க இவர் சில இளந் தொண்டர்களின் உதவியை நாடினுர். பத்திரிகையில் இதைப் பற்றி இவர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கி, சென்னை ராஜதானிக் கலாசாலையைச் சேர்ந்ததும் திருவேட்டீசுவரன் பேட்டையில் உள்ளதுமான ஒரு மாணவர் இல்லத்திலிருந்து இவருக்கு உதவி செய்ய எங்களுள் சிலர் முன் வந்தோம். இந்த நிதிக்குச் சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியின் காரியதரிசி, பொக்கிஷதாராக நியமிக்கப்பட்டார். வசூலித்த பணமெல்லாம் மயிலாப்பூரில் லஸ் சர்ச் ரோட்டிலுள்ள அந்தப் பாங்கியில் செலுத்தப்பட வேண்டுமென்று ஏற்பாடாயிற்று. இந்த வசூலிப்பு விஷயமாகத் தலைவர் அந்தப் பாங்கியின் கட்டிடத்தில் 1927-ஆம் வருஷம் ஜனவரி மீ 13-ஆம் தேதியன்று தொண்டர்களைக் கூட்டி ஆலோசனை செய்கையில் முதல் இருநூறு ரூபாய்களை எவன் வசூலித்துப் பாங்கியில் சேர்ப்பிக்கிருனே அவனுக்கு ஒரு தங்கப் பதக்கம் அளிப்பதாகத் தெரிவித்தார். இதை இவர் வேடிக்கையாகவே சொன்னுர். இருந்தாலும் முதல் இருநூறு ரூபாய்களையும் நானே வசூல் செய்துவிடுவது என்று உறுதி கொண்டு அதை நிறைவேற்றியும் விட்ட பாக்கியம் என்னுடையதாக இருந்தது.

இந்தத் தலைவர்தாம் சென்னை மாகாணத்துக்குப் பெரும் பேரும் மதிப்பும் தேடிக் கொடுத்திருக்கும் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரென்னும் பெரியார். இச்சம்பவ மூலந்தான் எனக்கும் இவருக்கும் நேருக்கு நேர் பரிசயம் ஏற்பட்டது.

இவர், 1879-ஆம் வருஷத்தில் பிறந்தவர். வடகலை வைஷ்ணவ சமூகத்தில் நல்லான் சக்கரவர்த்தி என்னும் பெரியாரின் வழியில் வந்தவர். ஆனால் வாழ்க்கையில் 'எல்லோரும் ஒரு குலம்' என்னும் கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றி ஜாதி பேதங்களைத் தகர்க்க உழைத்திருப்பவராகையால் இவரை எந்த இனத்தையும் சேராதவர் என்றுகூடச் சொல்லிவிடலாம். சேலம் ஜில்லாவில் ஹோசூர் தாலுக்காவிலுள்ள ஒரு சிறு கிராமந்தான் இவர் பிறந்த ஊர். முதலில் பங்களூரிலுள்ள சென்ட்ரல் காலேஜிலும், பின்பு சென்னை ராஜதானிக் கலாசாலையிலும் இவர் தம் உயர்தரக் கல்வியைப் பயின்றார். பின்பு சென்னைச் சட்ட கலாசாலையில் சட்டப் படிப்புப் பயின்று சேலத்தில் ஒரு வக்கீலாகத் தம் வாழ்க்கைப் போரைத் தொடங்கினார். அந்தத் தொழிலில் கூடிய சீக்கிரத்தில் முதன்மை ஸ்தானமும் பெருத்த வருவாயும் அடைந்தார். வக்கீல் தொழிலின் இரு பகுதிகளான 'ஸிவில்', 'கிரிமினல்' என்பனவற்றுள் 'கிரிமினல்' என்னும் பகுதியிலேயே அதிகமாகப் பழகி இவர் வெகு சமர்த்தரெனப் பெயர் பெற்றார். கொலை முதலியவை போன்ற வழக்குகளை வாதிப்பதில் இவருக்கிருந்த திறமைக்கு அறிகுறியாக அக்காலத்தில் இவரைப்பற்றி வழங்கிய ஒரு நாடோடிக் கூற்றைக் குறிக்கலாம். சேலம் ஜில்லாவின் ஊர்கள் ஒன்றில் தெருவின் வழியே இருவர் போய்க் கொண்டிருக்கையில் ஒருவன் மற்றவனைப் பார்த்து, "ஏலே, உன்னெ குத்திக் கொன்னு போட்டுடு வேண்டா" என்பான். மற்றவன் அதற்கு, "நீ அப்படிச் செஞ்சா ஒன்னை சர்க்கார்லே தூக்குப் போட்டுட மாட்டாங்களாடா?" என்று பதிலளிப்பான். "அட போடா பைத்தியக்காரா. அரசமரத்தய்யிரு இருக்காங்களே! எனக்கென்னடா பயம்?" என்பானும் கொலை

செய்வதாக மிரட்டிய முதல்வன். இந்தச் சம்பாஷணையில் 'அரச மரத்தய்யிரு' என்று குறிப்பிடப்பட்டவர் வக்கீல் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.

இவ் வக்கீல் தொழிலை இவர் 1900 முதல் 1918 வரையிலுள்ள 18 வருஷங்கள் சேலத்தில் நடத்தியபின் 1919-ஆம் வருஷத்திலிருந்து சிறிது காலம் சென்னையிலும் நடத்தினர். 1920-ஆம் வருஷத்தில் மகாத்மா காந்தியவர்கள் வகுத்த திட்டப்படி இவர் தம் வக்கீல் தொழிலைத் துறந்தார். அப்படித் துறந்தவர் நாளது வரையில் அதை மீண்டும் தொடங்காமலேயே இருக்கிருர்; அதுவும் அப்போது இவரைப்போல் அத்தொழிலைக் கைவிட்டவர்களுள் பலர் மறுபடியும் அதைக் கைக்கொண்டிருந்தும்!

இந்திய சுதந்தரப் போராட்டத்தில் 'காந்தீயம்' என்று சொல்லப்படும் கொள்கைகளை நடைமுறையில் கடைப்பிடித்துக் காட்டி வந்திருப்பவர் தென்னிந்தியாவில் ஒருவர் உண்டென்ருல் அவர் இந்தச் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்தாம்; இதஞல்தான் இவரைத் 'தென்னிந்திய காந்தி' என்றுகூடப் பலர் குறிப்பிடுகின்றனர். இதைத் தவிர 'ராஜாஜி' என்னும் அருமைப் பெயரும் இவருக்கு வாய்த்திருக்கிறது. 'பாபுஜி' என்று மகாத்மா காந்தியவர்கள் அழைக்கப்படுவதுபோல், சென்னையிலும் பிற ஊர்களிலும் இவரை 'ஸி. ஆர்.' என்று இவர் பெயருக்கு முன்ஞலுள்ள இரண்டெழுத்துக்களால் மட்டும் பலர் அழைக்கின்றனர். இவையெல்லாம் பிறருக்கு இவரிடமுள்ள மதிப்பையும் அன்பையும் குறிக்கின்றன. பம்பாயில் ஸர்தார் வல்லபபாய் படேலும், பீஹாரில் பாபு ராஜேந்திர பிரஸாதும் இருப்பதுபோல் சென்னையிலும் ராஜாஜி காந்தீயத்துக்கு ஒரு தூண்போல் விளங்குகிருர். எனவே அதற்கு அடிப்படையான கொள்கைகளாகிய தீண்டாமையை ஒழித்தல், மதுவிலக்கு, கதரைப் பரவச் செய்தல், ஹிந்திப் பிரசாரம், அரசியற் போரில் சத்தியாக்கிரக முறையையே கைக்கொள்ளுதல் என்பவையே வாழ்க்கையில் இவருடைய முக்கிய லக்ஷ்யங்கள்.

பொதுவாகத் தென்னிந்திய தேசியத் தலைவர்களுக்கு வட இந்தியாவில் அதிக மதிப்பில்லை. பலருடைய பெயர்களைக்கூட வடக்கேயுள்ள மாகாணவாசிகள் கேட்டிருக்கமாட்டார்கள். சென்னை ஒரு பிற்போக்கான மாகாணம் என்பது இவர்களுடைய எண்ணம். ஆனால் இவ்விதிக்குப் புறம்பாய் நிற்பவர் ராஜாஜி. மகாத்மா காந்தியின் சகாக்களுள் இவருக்குத்தான் மற்றவர்களை விடச் செல்வாக்கு அதிகம் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கோஷ்டியினரைத் தவிர மிதவாதிகளும் மற்றும் பலரும் இவரிடம் அதிக மதிப்பு உள்ளவராக இருக்கின்றனர். வங்க மாகாணத்தில் டாக்டர் பிதான் சந்திர ராய், பிஹாரில் டாக்டர் ராஜேந்திரப் பிரஸாத், ஐக்கிய மாகாணத்தில் அவ்வூரின் மாஜி காங்கிரஸ் பிரதம மந்திரி கோவிந்த வல்லப பந்த், மத்திய மாகாணத்தில் ஸேட் ஜம்னாலால் பஜாஜ், பம்பாயில் முன்வழியும் புலாபாய் தேசாயும், மைசூரில் சமீபகாலம் வரையில் அந்தச் சமஸ்தானத்தில் திவானாக இருந்த ஸர் மிர்ஜா இஸ்மெயில், ஹைதராபாதின் மாஜி மந்திரி ஸர் அக்பர் ஹைதரி, திருவாங்கூரின் மாஜி திவான் ஸர் ஸி. பி. ராமசுவாமி ஐயர், மத்திய சர்க்காரின் தலைநகரான டெல்லியில் கனச்யாம்தாஸ் பிர்லா, இந்தியா முழுவதுக்குமே உரியவரான மகாத்மா காந்தியவர்கள் இவ்வளவு பேர்வழிகளும் இவருக்கு அடக்கம் என்று சொன்னாலும் அது மிகையாகாது. இவர் சென்னை மாகாணத்துக்குக் காங்கிரஸ் அரசின் கீழ் பிரதம மந்திரியானபின் இவருக்கு உள்ளடங்கிய மேற்கூறிய பிரமுகர்களின் கோஷ்டியில் சென்னையின் மாஜி கவர்னர் எர்ஸ்கின் பிரபு, சென்னையிலேயே தீவிர அரசியல்வாதத்தில் அதிகம் கலந்துகொள்ளாத ஸர் மகமத் உஸ்மான், ஜி. ஏ. நடேசன் முதலியோர்களும், மற்றும் பல ஐரோப்பியர்களும் சேர்ந்து கொண்டார்கள் என்றால் இவருடைய பரந்த செல்வாக்கைக் குறிப்பிட வேறு அறிகுறியும் வேண்டுமா?

பலவருஷங்களாகக் காந்தீயத்தின் தீவிரக் கொள்கைகளைக் கடைப்பிடித்த ஊழியம்; அதற்கிடையே சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டு மும்முறை அநுபவித்த சிறை

வாசம், இவைகளுக்குச் சிகரம்போல் கடைசியில் விளங்கியதும் காங்கிரஸ் பிரதம மந்திரியாகச் சென்னை மாகாணத்தில் $2\frac{1}{4}$ வருஷங்கள் இவர் புரிந்ததுமான திறமையான அரசு, அதன் பின்பு ஐரோப்பிய யுத்த நெருக்கடியால் மீண்டும் ஒரு முறை சிறைவாசம் இவைதாம் இவருடைய அரசியல் வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள்.

சமூக சீர்திருத்தத்தில் இவர் விசேஷப் பற்றுடையவர். முக்கியமாகத் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பதை ஒரு விரதமாகப் பூண்டவர். தாம் செய்யும் பிரசாரங்களை இவர் தம்முடைய சொந்த வாழ்க்கையிலேயே நேரில் நடத்திக் காட்டியிருக்கிறார்.

வேறொரு சமயத்தில் தீண்டாமையை ஒழிக்க இவர் செய்துவந்த காரியங்களில் ஒன்றைக் குறித்து இவருடைய தந்தையார் மனங்கலங்கி இவருக்கு எழுதிய கடிதத்துக்குப் பதிலாக இவர் தம் முன்னோருள் ஒருவரான நல்லான் சக்கரவர்த்தி என்னும் வைஷ்ணவப் பெரியார் செய்த அரிய ஒரு சமூக சீர்திருத்தக் காரியத்தைச் சுட்டிக் காட்டினார். தந்தையாரும் சமாதானமடைந்தார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியும் இவர் நோக்கத்தைக் கவர்ந்திருக்கிறது. தற்காலத்திய தமிழ் எழுத்தாளர்களுள் முன்னணியிலுள்ளோருள் ஒருவர் இவர். சிறு கதைகள் எழுதுவதில் இவர் திறமை வாய்ந்திருக்கிறார். வாழ்க்கையில் இவருக்குள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதில் சிறு கதையை ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுத்திக் கொள்ள இயலுமென்பதை இவர் நன்கு உணர்ந்திருக்கிறார். ஆகையால் இவருடைய கதைகளெல்லாம், தீண்டாமையை அகற்றல், மதுவிலக்கு, கதர் இயக்கத்துக்கு ஆதரவு அளித்தல் முதலிய ஏதாவது ஒன்றை நீதியாகப் போதிக்கும் முறையில் அமைந்திருக்கும். இத்துடன் இவருடைய கதைகள் பலவற்றுள் ஏழை மக்கள் படும் துயரத்தை, அதிலும் வறுமையின் கொடுமையால் பெண்டிர் தூய வாழ்வை இழத்தலை, சொற்களினால் அழகாகச் சித்திரித்துப் படிப்போரின் உள்ளத்தை உருகச் செய்திருக்கிறார்.

பண்டைக்கால இலக்கியங்களில் இவர் வெகுவாக ஈடுபட்டிருக்கிறார். திருவள்ளுவரிடம் இவருக்குப் பற்றுதல் இருந்ததைத் திருக்குறள் பொருட்பாலுக்கு இவர் ஆங்கிலத்தில் கொடுத்திருக்கும் மொழிபெயர்ப்பின் மேன்மையிலிருந்து அறியலாம். வடமொழியிலுள்ள வேதகாலத்திய தொன்மையான நூல்களிலும் இவருக்கு விசேஷப் பற்று உண்டு. உபநிஷதக் கதைகளையும் நீதிகளையும் பகவத் கீதையில் கண்ணன் போதித்துள்ளதையும் எல்லோருக்கும் எளிதில் புரியும் நடையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி விளக்கியிருக்கிறார்.

இவர் இயற்றியிருக்கும் இலக்கியத் தொண்டுக்கு இவருடைய சிறைவாசம் பெரிதும் பயன்பட்டிருக்கிறது. இவர் எழுதியுள்ள நூல்களில் பல, சிறையில் தமக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தில் எழுதியனவே.

விஞ்ஞானமென்று குறிக்கப்படும் மேல்நாட்டுப் பூத பௌதிக சாஸ்திரங்களைத் தமிழில் எழுதிப் பரவச் செய்தல் என்னும் நற்காரியத்திலும் இவர் வழிகாட்டியிருக்கிறார். இவர் எழுதிய 'தமிழில் முடியுமா?' என்னும் சாஸ்திர நூலையும் 'கலைச் சொற்கள்' என்னும் நூல் வெளிவர இவர் செய்திருக்கும் உதவியையும் இதற்கு அறிகுறியாகச் சொல்லலாம்.

பல விஷயங்களில் இவருக்கு இருக்கும் உண்மையான திறமை, மாகாணங்களில் காங்கிரஸ் பதவியேற்றதன் பயனாக இவர் சென்னைக்கு முதல் மந்திரியான பின்புதான் உலகத்தாருக்குப் புலப்பட்டது. பொறுப்புள்ள நிர்மாண வேலைகளை நிர்வகிப்பதில் இவர் எவ்வளவு திறமை வாய்ந்தவர் என்பது, அப்போதுதான் தெரிந்தது. குட்டித் துறைமுக நிதி என்னும் பிரிவில் நெடுநாளாகக் குவிந்து துருப்பிடித்துக் கிடந்த ஒரு பெரும் பொக்கிஷத்தைப் புதையல்போல் தேடி எடுத்து அதைக் குடிகளுக்குப் பயன்படும் வழியில் செலவழிக்க இவர் திட்டம் செய்தது இவருடைய அபார நிதி நிர்வாகத் திறமையை எடுத்துக் காட்டுகிறது. ஏழு காங்கிரஸ் பிரதம மந்திரிகளுள்ளும் இவர்தாம் முதன்மை ஸ்தானம்

வகித்தார் என்பதிலும் இவர் அரசுபுரிந்த சென்னை மாகாணத்தில்தான் குடிகள் காங்கிரஸ் ஆட்சியின் பலன்களைப் பரிபூரணமாக அடைந்தார்கள் என்பதிலும் ஒருவித ஆச்சரியமும் இல்லை. இவர் முயற்சியால் அமலுக்கு வந்த மதுவிலக்குச் சட்டம், கடன் நிவாரண நிர்வாகச் சட்டம், செலவில் சிக்கனம் செய்தது, ஜில்லா போர்டுகளின் எண்ணிக்கையைக் குறைத்தது, இவைதாம் இவர் செய்த நற்காரியங்களுள் முக்கியமானவை.

இவர் பிரதம மந்திரியானபின் இவருக்கு இயற்கையாயுள்ள பேசும் திறமை பதின்மடங்கு மேலும் சோபித்து விளங்கியது. சர்க்கார் தரப்பில் இவர் செய்து வந்திருக்கும் சொற்பொழிவுகளை எல்லாக் கட்சியினரும் ஆவலுடன் விரும்பிக் கேட்டுக் களித்தனர். இவர் சிலரைப்போல் வேகமாகப் பேசமாட்டார். ஆனால் இவர் பேச்சில் இடையிடையே தடங்கல்களும் ஏற்படா. சொல்லுவதை நிதானமாகச் சொல்லுவார்; தெளிவாகச் சொல்லுவார். அவை பசுமரத்தாணிபோல் கேட்போரின் மனத்தில் பதிந்துவிடும்படி சொல்லுவார். தம்மை எதிர்ப்போர் தம் சொற்பொழிவைக் கேட்டுவிட்டு ஒன்றும் ஆக்ஷேபம் சொல்ல முடியாமல் தவிக்கும் ரீதியில் இவர் பேச்சு அமையும். இம் முறையில் இவர்,

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

என்னும் குறள் நீதியைப் பின்பற்றுகிறார் போலும்!

இவர் பேசுவது சில சமயத்தில் ஒரு 'கிரிமினல்' வக்கீல் தம் வழக்கை வாதிப்பதுபோல் இருக்கும். சொல்லும் விஷயம் கடினமாயிருந்தால் அதை இரண்டொரு முறைகள் திரும்பத் திரும்பச் சொல்லுவார். இவர் சொற்பொழிவுகளிலும் சம்பாஷணையிலும் நகைச்சுவை கலந்திருக்கும். எதிராளியைக் கண்டிக்க விரும்பினால் சுருக்கென்று படக்கூடிய முறையில் தம் கூற்றுக்களை அமைப்பார்.

நெடுநாட்களாகப் பழகியிருப்போரும் கண்டிராத புதிய உண்மைகளை இவர் தம் சொற்பொழிவுகளில் எடுத்துச் சொல்லுவார். இதைக் கேட்டதும் 'இவ்வளவு

நாட்களாக நாம் இதை உணரவில்லையே' என்று அவர்கள் எல்லோரும் பிரமிப்பார்கள். இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடலாம். இவர் கல்கத்தாவிலுள்ள தென்னிந்தியர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தில் பேச நேர்ந்தது. அக்கூட்டம் தென்னிந்தியர்கள் கட்டிய ஒரு பள்ளிக்கூடக் கட்டிடத்தை யொட்டியுள்ள ஒரு சிறு இடைவெளியில் நடந்தது. பொழுது போக்குக்காக இவர்கள் நடத்திவந்த ஒரு சங்கமும் அக் கட்டிடத்திலேயே நடந்து வந்தது. அச்சங்கம் அக்கட்டிடத்தின் சில பகுதிகளை உபயோகித்து வந்ததற்காக ஒவ்வொரு மாதமும் கொடுத்து வந்த வாடகை பள்ளிக்கூடத்துக்கு ஒரு வருமானமாக உதவியது. இதையெல்லாம் கேட்ட இவர் தம் பேச்சைத் தொடங்குகையில், "நான் இதுவரையில் காணுத ஒரு விசித்திரமான இடம் இது. இங்கே குழந்தைகள் படிக்கிறார்கள், வயதானவர்கள் விளையாடுகிறார்கள்" என்று சொன்னதும் கூட்டத்தில் உள்ளவர்கள் கொல்லென்று நகைத்தனர்.

ராஜகோபாலாச்சாரியாரின் பிரசங்கங்களின் முக்கியமான அம்சம் அவர் எடுத்தாளும் உவமைகளே. விஷயம் பெரிதானாலும், சிறியதானாலும் ஓர் உவமைமூலம் அவர் அதை எடுத்து விளக்கிவிடுவார். உபநிஷதக் கதைகளைப் படித்து அவைகளின் அழகை ஊன்றி அநுபவித்ததன் பலன்தான் இது என்று எண்ண இடம் இருக்கிறது. ஏனெனில் தாங்கள் உலகுக்கு அளித்த அரிய வேதாந்த உண்மைகளை விளக்குவதற்கு வேத ரிஷிகள் தக்க உபமானங்களின் உதவியையும் கதைகளின் உதவியையும் நாடியிருக்கின்றனர். தம்முடைய அரசாட்சி சம்பந்தமாக இவரும் உவமையென்னும் அணியை வெகுவாகப் பயன்படுத்திக்கொண்டார். இவர் உவமையினால்தான் அரசுபுரிகிறார் என்றுகூடச் சிலர் சொல்லிவந்தனர். இவருடைய உவமைக்கு உதாரணமாக அடியில் கண்டவைகளைக் குறிப்பிடலாம்.

ஹிந்தி எதிர்ப்பு இயக்கம் பலமாக இருக்கையில் சென்னைக் கடற்கரையில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் இவர், "ஹிந்தியைப் பரவச் செய்வதில் உறுதிகொண்

டிருக்கும் எங்கள் சர்க்கார் இவ்வெதிர்ப்புக்களைக் கண்டு பயந்து கொஞ்சங்கூடப் பின்வாங்கப் போவதில்லை. அப்படிச் செய்வது எதை ஒத்திருக்குமென்றால் தண்டகாரண்யத்தினுள் புகுந்தவுடன் காலில் முள் தைத்ததென்று ராமன் அயோத்திக்குத் திரும்புவதுபோல் இருக்கும். முள்ளைப் பிடுங்கிவிட்டு மேற்சென்றால்தானே ராவணவதம் என்னும் நற்காரியம் நடக்க இயலும்?'' என்றார்.

கடன் நிவாரண மசோதா, விவாதத்தில் இருக்கையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர், ''அவசரப்பட்டு ஒன்றும் செய்துவிடக்கூடாது. நம் மாகாணத்தில் மக்கள் எவ்வளவு தூரம் கடன்பட்டிருக்கிறார்கள் என்பதற்குத் தகுந்த புள்ளி விவரங்கள் கிடைத்தபின்புதான் இதை ஆலோசிக்க வேண்டும்'' என்று சொன்னதற்கு, இவர் சொன்னது வருமாறு: ''சென்னையில் கொசு உபத்திரவம் இருக்கிறதென்றால் நாம் செய்ய வேண்டியது என்ன? மயிலாப்பூரில் கொசு அதிகமா, திருவல்லிக்கேணியில் கொசு அதிகமா என்றெல்லாம் புள்ளி விவரங்களைத் திரட்டிக்கொண் டிருக்க முடியுமா? ஒரு கொசுவலையை வாங்கி அத்துயரத்தைப் போக்குவோமல்லவா? அதே மாதிரியே நாட்டில் கடன் சுமை அதிகம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எல்லோரும் அறிந்ததே. ஆகையால் இம்மசோதாவைச் சட்டமாக்கிக் கால தாமதம் செய்யாமல் இத்தொல்லையினின்றும் நாம் நம்மை விடுவித்துக் கொள்ளுவோம்.''

இவர் கையாண்ட உவமைகளுக்குள் பிரசித்தமடைந்துவிட்டது எதுவென்றால் மாஜி காங்கிரஸ் தலைவர் சுபாஷ்சந்திர போஸைக் குறித்து இவர் அகில இந்தியக் காங்கிரஸ் மகாநாட்டில் சொன்னதுதான். காந்தியத்தைப் பின்பற்றிய வர்தா கோஷ்டியை எதிர்த்த போஸ் கட்சியில் சேரவேண்டாமென்று எச்சரிக்கை செய்ய வந்த இவர், ''பார்வைக்குப் பகட்டாயிருக்கும் இந்தப் படகில் ஏறாதீர்கள்; அது ஓட்டையுள்ளது. ஆற்றைக் கடக்க உதவாது. நடுவில் மூழ்கிவிடும்'' என்று குறிப்பிட்டது தேசமெங்கும் போற்றப்பட்டதுடன் போஸ் கட்சியினருக்கும் பெருத்த எரிச்சலை உண்டாக்கியது.

இவர் தோற்றத்தில் வெகு சாதுவாயிருப்பார். வழுக்கைத் தலை, சற்றுக் கூன் விழுந்த நடை, நீண்ட முகமும் மூக்கும். இவருடைய கணகளிலுள்ள ஒளியை ஒருவரும் பார்க்க முடியாமல் இவர் சதா அணிந்துவரும் ஒரு நீலநிறப் புகைக்கண்ணாடி மறைக்கிறது. தமிழ் நன்றாக எழுதவும் பேசவும் வரும். இவர் அசல் தமிழர் இல்லையென்றால் அது சற்று நம்பத்தகாததாகவே இருக்கும். இவரை ஒரு கன்னடக்காரர் என்றாலும் பொய்யாகாது. மைசூரைச் சுற்றிலுமுள்ள பல்லாரி, அனந்தபூர், சேலம், கோயம்புத்தூர் முதலிய சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஜில்லாவிலும் ஒவ்வொரு மைசூர் சம்ஸ்தானப் பிரதேசத்தை ஒட்டிச் சில ஊர்களோ தாலுக்காக்களோ உண்டு. இவைகளிலுள்ள ஜனங்கள் நடை உடை பாவனைகளில் மைசூர்க்காரர்களையே ஒத்திருப்பார்கள். சேலத்திலுள்ள ஹோசூரும் கோயம்புத்தூரிலுள்ள கொள்ளேகாலும் இத்தன்மையனவே. ஏன், ஹோசூர் என்னும் பெயரிலேயே மைசூர் மணம் வீசவில்லையா? இவருடைய நெருங்கிய பந்து ஒருவர் எனக்கு மிகப் பழக்கம். அவர் தமிழ் பேசுவது எங்களுக்கு நகைப்பை உண்டாக்கும். கன்னடத்தைத் தாய் மொழியாகக்கொண்டு புதிதாகத் தமிழ் பேசுவதுபோல் இருக்கும். இந்த ஹோசூரைச் சேர்ந்த இவரை அசல் தமிழர் என்று எப்படிச் சொல்லலாம்?

தாம் பின்னாலேயே இருந்து பிறரைக்கொண்டு தம் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளுவது இவருடைய காரியங்களில் இவர் கைக்கொள்ளும் முறைகளுள் முக்கிய அம்சம். இதை ஒரு பொம்மலாட்டத்தில் திரைக்குப் பின்னால் நின்றுகொண்டு நூலை இழுத்துப் பொம்மைகளை ஆட்டிவைக்கும் சூத்திரதாரிக்கு ஒப்பிடலாம். இவர் தூண்டிவிடும் மனிதர்கள் காரியத்தைத் தாங்கள் சாதிப்பதாகவே நினைப்பார்கள். ஆனால் நிறைவேறுவதென்னவோ இவருடைய லக்ஷ்யந்தான்.

இவர், தாம் செய்யும் காரியங்களைப்பற்றி வெளி ஆடம்பரங்கள் ஒன்றும் செய்யமாட்டார். ஆதலால் இவருடைய காரியங்களில் எதை எடுத்துக்கொண்டாலும் அதில்

எவ்வளவு நாட்களாக இவர் ஈடுபட்டிருக்கிறார் என்பது பிறருக்குத் தெரியாது. அவ்வளவு அடக்கமாக அதைச் செய்து வந்திருப்பார். உதாரணமாகப் பூத பௌதிகம் முதலிய சாஸ்திரங்களைப்பற்றிய நூல்களைத் தமிழிலேயே எழுத வேண்டுமென்று இவருக்கு இருந்த ஆசை சமீபத்தில் உண்டானதல்ல. சுமார் 15 வருஷங்களுக்கு முன்பே சேலத்தில் வக்கீலாக இருக்கையிலேயே இவரும் வேங்கடசுப்பையர் என்று ஒருவருமாகச் சேர்ந்து 'தமிழ்ச் சாஸ்திரச் சொற்கள் சங்கம்' என்று ஒரு சங்கத்தைத் தோற்றுவித்து அதன் சார்பில் ஒரு பத்திரிகையும் தொடங்கினார்கள். இவருடைய காரியங்கள் ஒவ்வொன்றிலும் இதே விதமான நீடித்த உழைப்பைக் காணலாம்.

ஒவ்வொரு விஷயத்தையும்பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது இவருடைய கொள்கை. உதாரணமாக, இவருடைய வீட்டுக்கு யாராவது ஒரு வைத்தியன் வந்து, மருந்து எழுதிக்கொடுத்தால் அந்த மருந்தில் உள்ள ரஸாயனப் பொருள்களின் தன்மைகள், அவை அதில் சேர்க்கப்படும் காரணம் முதலியவை போன்றவைகளைப்பற்றி அந்த வைத்தியனை இவர் கேட்கும் கேள்விகள் அவனை அலற வைத்துவிடுமாம். இதை இவருடைய நெருங்கிய உறவினர் ஒருவரே என்னிடம் பன்முறை சொல்லியிருக்கிறார்.

இவர் அஞ்சா நெஞ்சமுத்தம் உள்ளவர். இல்லாவிட்டால் சமூக சீர்திருத்தம், தேசீயப் போர், காங்கிரஸ் ஆட்சியில் பிரதம மந்திரி வேலை, இவை ஒவ்வொன்றிலும் இவருக்கு ஏற்பட்டிருந்த பலத்த எதிர்ப்பைச் சமாளித்துக் கொண்டு தம் எண்ணங்களை நிறைவேற்றுவதென்பது வேறு எவராலும் முடிந்தே இராது.

பாகிஸ்தானைக் கொடுத்தே ஆக வேண்டுமென்றும், ஜின்னாவுடன் சமரசம் ஏற்பட்டால்தான் நம் லக்ஷ்யம் நிறைவேறும் என்றும் முதல் முதலாக இவர் தைரியமாகவும் தீர்க்க தரிசனத்துடனும் கூறியபோது மற்றத் தலைவர்களும் பொதுமக்களும் இவரைத் தூற்றினர். பதவி மோகத்தினால்தான் இவர் இவ்வாறெல்லாம் வாதிக்கிறார்

என்றும் இவரை ஏசினர். கடைசியில் இவர் சொன்ன முறையில்தான் நாட்டுக்கு விடுதலை கிடைத்தது.

இவருடைய ஒப்பற்ற திறமை சென்னைமாகாணத்தின் நிர்வாக வேலைக்குப் பயன்படாதது நம் துரதிருஷ்டம் என்றாலும், மத்திய சர்க்காரிலாவது இவருக்குப் பதவி அளித்து இவர் திறமையை உபயோகிக்கிறார்கள் என்பது ஒருவாறு ஆறுதல் அளிக்கிறது.

ஒப்பற்ற தியாகியான இவருக்குக் காங்கிரஸ் தலைவர் பதவி கிட்டவில்லையே என்று ஒரு சமயம் நாம் எண்ணி ஏங்கினோம். ஆனால் அதைவிடப் பதின்மடங்கு பொறுப்புள்ள பதவிகள் இவருக்கு வரக் காத்திருக்கின்றன என்பதை அப்பொழுது நாம் அறிந்திலோம். வங்க மாகாணத்தின் முதல் இந்திய 'கவர்னராக' இவர் நியமிக்கப்பட்டது அம்மாகாணவாசிகளுக்கு ஒரு நல்ல படிப்பினையாக அமைந்தது. ஏனெனில், சுபாஷ்சந்திர போஸின் ஒழுங்கீனமான நடத்தைக்குப் பின் கல்கத்தாவில் 'வெல்லிங்டன் பார்க்' என்னும் இடத்தில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலிருந்து வெளியேறுகையில் இவர்மேல் செருப்பை வீசி இவரை அவமதித்தது அந்த மூடமக்களே அல்லவா?

சுதந்தர இந்தியாவின் முதல் 'கவர்னர் ஜெனரல்' பதவிக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் எல்லோருக்கும் திருப்தியளிக்கக்கூடிய முடிவே.

௬

அந்நிய மொழிக்கு அழகு கொடுத்தவர்

சென்னை ராஜதானிக் கலாசாலையைச் சார்ந்த மாணவர் தங்கும் விடுதி ஒன்று நெடுநாட்கள் வரையில் திருவேட்டீசுவரன்பேட்டை வல்லப அக்கிரகாரத்தில் இருந்தது. கலாசாலையில் வாசித்த ஒரு பகுதியாருக்காக, அதாவது தமிழ் தேசத்தவர்களுக்காக அது ஏற்பட்டது. அதில் சுமார் பதின்மூன்று வருஷங்களுக்கு முன் நான் தங்கியிருக்கையில் அவ்விடுதியைச் சேர்ந்த கலைச்சங்கத்தின் சார்பில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்தோம். கூட்டத்தில் பேச இருந்தவர் அப்போதுதான் வெளி நாடுகளுக்குச் சென்று புகழ்பெற்றுத் திரும்பிய ஒரு தென்னிந்தியராகையால் கூட்டத்தை வழக்கம்போல் அவ்விடுதியிலேயே வைத்துக்கொள்ளாமல் எங்கள் கலாசாலையில் ஆங்கிலமொழிப் பாடம் நடக்கும் பெரிய ஹாலில் நடத்த ஏற்பாடு செய்தோம். கூட்டத்துக்குச் சென்னையிலுள்ள எல்லாப் பிரமுகர்களுக்கும் அழைப்பு அனுப்பியிருந்தோம். சென்னை உயர்நீதி மன்றத்திலுள்ள எல்லா நீதிபதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

குறிப்பிட்ட நேரத்தில் கூட்டம் கூடிற்று. பேசுகிறவரின் பெயரைக் கேள்வியுற்று, அழைப்பு அனுப்பப்படாத பல பேர்களும் கூடிவிட்டபடியால் அந்த ஹால் கொண்ட வரையில் கும்பல் வந்து அதற்கு மேலும் நெருக்கம் ஏற்பட்டுவிட்டது. பிரசங்கி வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதுமே ஒரு பலத்த கரகோஷம் எழுந்தது. அவர் பேச ஆரம்பிக்கையில், 'திறந்த வெளி, திறந்த வெளி' என்று கூட்டத்திலுள்ள பெரும்பாலோர் கூச்சலிட்டனர். ஹால் கொள்ளாத ஜனக் கூட்டம் கூடிவிட்ட

தால் அவ்விடத்தை விட்டு வெளியே சென்று எங்கேயாவது திறந்த வெளியில் கூட்டத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவே அவர்கள் அப்படிக் கூக்குரலிட்டனர்.

இந்தக் கலவரம் காரியங்களை மேற்செல்லவிடவில்லையாகையால் அக்கட்டிடத்தின் பின்னுள்ள திறந்த வெளியில் கூட்டத்தை நடத்துவதென்று நிச்சயித்தோம். இந்தத் தீர்மானம் கூட்டத்துக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் எல்லோரும் அவ்விடத்துக்குப் பறந்து ஓடினர். அப்பரபரப்பில் கூட்டத்துக்கென்று வரவழைக்கப்பட்ட சில முக்கியமான பிரமுகர்களுக்குக்கூடக் கூட்டம் நடந்த புதிய இடத்தில் நாற்காலி முதலிய வசதிகள் செய்து கொடுக்க எங்களால் இயலவில்லை. பேசியவர் உட்பட எல்லோரும் அன்று அக்கூட்டம் கலையும்வரையில் கால் கடுக்க நின்றுகொண்டிருக்க வேண்டியதாயிற்று. ஆனால் பிரசங்கத்தை மட்டும் எல்லோரும். ரசித்துக் கேட்டனர். கால் கடுப்பதையும் பாராட்டாமல் சென்னை உயர்நீதி மன்றத்தின் எல்லா நீதிபதிகளும் மற்றும் பலரும் நிச்சப்தமாகச் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தனர். ஓர் ஊசி விழுந்திருந்தாலும் அதன் ஒலி கேட்டிருக்கும். கூட்டத்தை அப்படிப் பரவசமடையச் செய்தது, ஆங்கில மொழியில் நிகழ்ந்த அந்தப் பிரசங்கம்.

அன்று பேசியவர்தாம் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் என்னும் உலகமறிந்த தத்துவ சாஸ்திர ஆசிரியர். அவர் பேச முன்வந்துவிட்டால் கேட்போர் மனம் கொள்ளை கொள்ளப்படுவது நிச்சயம். பேசுகையில் மொழிகள் ஒரு நீர்வீழ்ச்சியில் ஓடி உருண்டுவந்து விழும் பிரவாகம் போல் தங்கு தடையின்றி ஒன்றன் பின் ஒன்றாக வெளிவரும். பேச்சும் ஓர் இனிய கீதம்போல் அமையும். "இவர் பேசுகையில் நம் ஆங்கில மொழி ஒரு புதிய அழகைப் பெறுகிறது" என்று இவருடைய சொற்பொழிவாற்றலைப்பற்றி இங்கிலாந்தில் ஓர் ஆங்கில மடாதிபதி ஒரு முறை புகழ்ந்திருக்கிறார்.

இவருடைய முழுப்பெயர் ஸர் ஸர்வபள்ளி ராதாகிருஷ்ணன் என்பது. இதிலுள்ள ஸர்வபள்ளி என்பது

இவருடைய குடிப்பெயர். இவர் சென்னை மாகாணத்தில் சித்தூர் ஜில்லாவைச் சேர்ந்தவர். இவர் ஓர் ஆந்திரப் பிராமண மரபில் உதித்தவர். இவர் பிறந்த தினம் 1888-ஆம் ௵ ஸெப்டம்பர் ௴ 5-ஆம் தேதி. இவர் சென்னையில் கிறிஸ்துவக் கலாசாலையில் உயர்தரப் படிப்பைப் பயின்றார்.

தென்னிந்தியராயிருந்தும் இவர் சோபிதம் அடைவதற்கு வட இந்தியாவுக்குப் போகவேண்டியிருந்தது. இச் சந்தர்ப்பத்தில் கவி ரவீந்திரநாத டாகுரைப்பற்றிய நிகழ்ச்சியொன்று குறிப்பிடத்தக்கது. அவருடைய கவிதைகளை முதல் முதலில் அவருடைய தாய்மாகாணமாகிய வங்க மாகாணத்திலேயே பலர் ரஸித்து அவைகளுக்குரிய மதிப்புக் கொடுக்கவில்லை. 1913-இல் அவருக்கு அயல் நாட்டார் நோபெல் பரிசை அளித்த பின்புதான் உள்ளூரிலும் அவருக்கு மதிப்பு உயர்ந்தது. இதை அவரே மனக்கசப்புடன் தம்முடைய நூல் ஒன்றில் சொல்லியும் இருக்கிறார். தாம் சேகரித்த மலர்களின் அழகையும் மணத்தையும் கண்டு தம் வீட்டில் இன்புறுவாரின்றி அவைகளை ஜன்னல் வழியே வெளியே எறிந்த பின் அயலார் அவைகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு போய் அநுபவித்தனர் என்று மறைமுகமாகத் தம் மனக் கொதிப்பை வெளியிட்டார். இந்த மாதிரி, உலகம் போற்றும் அறிஞர்களாகத் தகுதியுள்ளவர்கள் பலரைச் சென்னை மாகாணம் புறக்கணித்து அவர்கள் அயல் மாகாணங்களுக்குச் செல்லும்படி செய்திருக்கிறது. அம் மாதிரி வெளியேற்றப்பட்டவர்களில் ஒருவர் ஸர் ராதாகிருஷ்ணன்.

முதல் முதலில் சென்னை ராஜதானிக் கலாசாலையில் இவர் தத்துவ சாஸ்திர போதகாசிரியராக அமர்ந்தார். ஆனால் சென்னை மாகாணம் செய்த பாக்கியம், இவர் அதைத் துறக்க நேர்ந்தது. முதலில் மைசூர் ஸர்வகலா சாலைக்கும் பின்பு கல்கத்தா ஸர்வகலாசாலைக்கும் சென்றார். கல்கத்தா ஸர்வகலாசாலையில் 'ஜார்ஜ் மன்னர் தத்துவ சாஸ்திர போதகாசிரியர்' என்னும் பதவியைத் திறம்பட வகித்துப் பின் சீமையில்

ஆக்ஸ்போர்டு ஸர்வகலாசாலையில் ஆசிரியராக நியமிக்கப் பட்டார்.

இடையில் இவர் ஆந்திர ஸர்வகலாசாலைக்குச் சில வருஷங்கள் தலைவராக இருந்தார். பின்னர், பண்டித மதன் மோகன் மாளவியா அவர்கள் நிறுவியிருக்கும் காசி ஹிந்து விசுவ வித்தியாலயம் என்னும் ஸர்வகலாசாலையை நடத்தும் பொறுப்பு இவருக்கு அளிக்கப்பட்டது. இது ஏனைய ஸர்வகலாசாலைகளின் தலைவர் பதவி போன்ற தன்று. சுமார் 20 லக்ஷ ரூபாய் கடன் ஏற்பட்டுள்ள ஒரு ஸ்தாபனத்தை நடத்துவதென்றால் அது எத்தகைய கடின மான காரியம் என்பதை எளிதில் ஊகித்துக்கொள்ள லாம்.

இவர் பிறரால் எவ்வளவு மதிக்கப்படுகிறார் என்ப தற்கு இவருக்குக் கிடைத்திருக்கும் பட்டங்களே போதிய சான்று. 1931-இல் இவருக்கு ஸர் பட்டம் கிடைத்தது. 1939-இல் எப். பி. ஏ. என்னும் ஓர் உயரிய அங்கத்தினர் பதவி கிடைத்தது. 1909-இல் சென்னை ஸர்வகலாசாலையில் இவருக்குக் கிடைத்த எம். ஏ.யுடன் ஆக்ஸ்போர்டில் 1928-இல் லிட். டி (ஹானர்ஸ்), 1936-இல் டி. லிட். (ஹானர்ஸ்), 1937-இல் எல். எல். டி (ஹானர்ஸ்), 1938-இல் ஆல் ஸோல்ஸ் கல்லூரியில் அங்கத்தினர் பதவி முதலியவை இவர் பெற்ற கல்வி சம்பந்தமான பட்டங் களும் பதவிகளுமாகும். 1926-இலும் 1929-30-இலும் ஆக்ஸ்போர்டில் இவர் மான்செஸ்டர் கல்லூரியில் 'உப்டன்' போதகாசிரியராகவும், 1936-முதல் 'ஸ்பால்டிங்' போதகாசிரியராகவும் இருந்தார்.

இதோடு இவர் புகழ் அமெரிக்கா கண்டத்திலும் பரவியிருந்தது. அதற்கு அடையாளம்போல் அங்கே 1926-இல் சிக்காகோ ஸர்வகலாசாலையில் இவர் 'ஹாஸ் கெல்' போதகாசிரியராக்கப்பட்டார். இவர் தலைமை வகித்து நடத்திய சங்கங்களும் கூட்டங்களும் எண்ணிறந் தன. சர்வதேச சங்கத்துக்கும் இந்தியாவின் சார்பில் இவர் ஒரு முறை சென்றிருக்கிறார். 1939-இல் மகாத்மா காந்தி யைக் குறித்துப் பலர் எழுதிய கட்டுரைகளை ஒரு ஞாபகச் சின்ன வெளியீடாகப் பதிப்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்

கொண்டு அதை வெற்றியுடன் நிறைவேற்றினர். இவர் வெளிநாடுகளுக்குப் பன்முறை சென்று அங்கே ஹிந்து மதத்தைப்பற்றியும் நம் தத்துவ சாஸ்திரத்தைப்பற்றியும் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கிறார்.

இவர் எழுதியுள்ள புத்தகங்கள் பல. ஹிந்து மதத்தைப்பற்றியும் வேதாந்தத்தைப்பற்றியும் எழுதப்பட்டவை. கவி ரவீந்திரரைப் பற்றியும் இவர் ஒரு புத்தகம் எழுதியுள்ளார். கவி ரவீந்திரர் ஏற்படுத்திய சாந்திநிகேதனம், ஸ்ரீநிகேதனம் என்னும் வித்தியா சாலைகளை அவருக்குப் பின் நடத்தும் திறமை உடையவர் இவர் ஒருவரே என்று கருதி இவரை அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி அங்கிலயங்களின் அதிகாரிகள் வேண்டலாம் என்று ஒரு சமயம் எதிர்பார்க்கப்பட்டது.

தோற்றத்தில் இவர் ஒல்லியாயும் ஒடிசலாயும் இருப்பவர். நல்ல உயரம். தேகத்தில் அதிகச் சதைப்பற்றில்லை. உயரத்துக்கு ஏற்றாற்போல் இவருடைய முகமும் நீண்டிருக்கும். முகத்தில் முக்கியமான அங்கம் இவருடைய நீண்ட மூக்குத்தான். இவர் முகத்தில் வீசும் ஒளி எல்லோரையும் வசீகரிக்கக்கூடியது. இவர் மேனி சிவந்த நிறமுடையது.

இவரை ஸதா ஒரு தலைப்பாகையுடனும், கழுத்தை மூடிய நீண்ட அங்கியுடனுந்தான் காணலாம். தலைப்பாகையும் வேஷ்டியும் எப்போதும் துல்லியமான வெண்மை நிறத்துடன் இருக்கும். இவ்வுடையே இவருக்கு ஒரு போதகாசிரியரின் தோற்றத்தைக் கொடுத்துவிடுகிறது. இவரை முதல் முதலாக 1926-இல் நான் பார்க்கையிலும், பின்பு 1929 முதல் சில வருஷங்கள் வரையில் பார்க்கையிலும், சமீபத்தில் பார்க்கையிலும் எனக்கு இவருடைய தோற்றத்தில் ஒருவித மாறுதலும் தெரியவில்லை. பிறர் அநுபவமும் இதுவே என்று பலர் சொல்லி நான் கேட்டிருக்கிறேன். வயதினால் இவருடைய மேனியில் ஏற்பட்டிருக்கும் மாறுதல் நரைமயிர் ஒன்றுதான். மற்றப்படி இவர் ஸதா இளமையுடன் தோற்றமளிப்பது வியக்கத்தக்கதே.

இவருடைய தொழில் தத்துவ சாஸ்திரத்தைப் போதிப்பது என்பது உண்மையாயினும் இது நம் நாட்டில் சற்றுப் பொருத்தமற்றதே. ஏனென்றால் முன்னாட்களில் வேதாந்த விசாரணை நடைபெற்ற முறையே வேறு. பலர் கூடியிருக்கும் ஓர் இடத்துக்கு ஒரு குரு சென்று பிரசங்கம் செய்வதென்பது இல்லை. வேதாந்தக் கருத்தைப்பற்றிப் பேச அருகர்கள் யோகாப்பியாசம் முதலிய தபஸ்களைச் செய்து அதன் பயனாகப் பிரம்மஞானம் அடைந்தவர்களே. பிரம்மத்தைத் தேடுபவனும் தன்னுடைய சொந்த அநுபவத்தினால்தான் அதை அடைய முடியும். தைத்திரீய உபநிஷத்தில் மூன்றாவதான பிருகுவல்லி என்னும் பாகத்தில் வரும் பிருகு, வாருணி என்போரின் கதையை இதற்குத் திருஷ்டாந்தமாகச் சொல்லலாம். பிருகு மகரிஷி பிதா. வாருணி அவருடைய மகன். பிரம்மத்தைப்பற்றி அறிய விரும்புகிறான் மகன், பிதாவிடத்திலிருந்து. சீடன் தன்னுடைய சொந்தப் பிள்ளையாக இருந்தும் பிதாவானவர், "தவஞ்செய்து நீயே தெரிந்து கொள், பிரம்ம ரகசியத்தை" என்று சொல்லி அனுப்பி விடுகிறார்.

ராதாகிருஷ்ணன் பிரம்மஞானம் பெற்ற ஒரு யோகியல்ல. எனவே இவரை ஒரு தத்துவசாஸ்திர போதகாசிரியர் என்று கூறுவதைக்காட்டிலும் மேனாட்டாருக்கு இந்திய வேதாந்த நூல்களின் நுட்பங்களை எடுத்து விளக்குபவர் என்பதே மிகப் பொருந்தும்.

முற்கூறியபடி இவருடைய வாக்கு வன்மைதான் இவரிடத்திலுள்ள முக்கிய விசேஷம். இவர் பேசுகையில் சொற்களாலாகிய ஒரு நீர்வீழ்ச்சி நம் காதினுள் வந்து கடகடவென்று கொட்டுவதுபோல் இருக்கும். கேட்போர் ஸ்தம்பிக்கும்படி சொற்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கன வேகத்துடன் வரும். பேசவல்லவர்கள் என்று பெயரெடுத்தவர்கள் ஏனையோரும் இந்தியாவில் உண்டு. உதாரணமாகக் கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் முதலியோர். ஆனால் அவர்கள் பேச்சில் இந்த வேகம் இராது. பேசும் விஷயத்தைக் கேட்கும்போதே, கேட்போர் சிந்திக்க இடையிடையே நேரங்கொடுத்து அவர்கள் பேசுவார்கள்.

ஆனால் இவரோவென்றால் பெரு வேகத்துடன் சொற்களைத் தொடுத்துக் கேட்போரை வியப்பு என்னும் கயிற்றினால் பிணித்துவிடுவார்.

இவர் நல்ல ரஸிகர். ஒவ்வொரு விஷயத்தையும் அலசி ஆராய்ந்து தெளிவாகப் பிறருக்கு எடுத்துரைக்க வல்லவர். குழப்பம் இல்லாத புத்தி கூர்மை உள்ளவர். ஆரம்பத்தில் சாதாரண ஆசிரியராக இருக்கையிலேயே இவர் மாணவர்களுக்குக் கொடுத்த குறிப்புகள் தெளிவுக்குப் பேர் போனவை. அக் குறிப்புகளைப் படித்துவிட்டே பட்டப் பரீக்ஷைகளில் தேறிவிடலாம். அவை அவ்வளவு பயன் அளிக்கத் தக்கனவாக இருந்தன. படித்த விஷயத்தை நன்கு ஆராய்ந்து சாற்றை உட்கொண்டு சக்கையை நீக்கித் தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துச் சொன்னவை அக் குறிப்புகள்.

சமீபத்தில் சில காலமாக இவர் அரசியல்வாதங்களிலும் கலந்துகொள்ளுகிறார். இது இயற்கைக்குச் சற்று முரணாயிருப்பதாகவே தோன்றும். அரசியல் துறையில் உழைத்து அதன் நிமித்தமாகப் பதவி பெற்றுச் சுக வாழ்வை அடைவதுதான் உலக வழக்கம். இவர் செய்வதோ நல்ல பதவிகளை ஏற்றுச் சுக வாழ்வை அநுபவித்தபின் அரசியல் துறையில் இறங்க விரும்புவது. எனினும் இவர் போன்றவர்கள் அரசியலில் ஈடுபட்டு மும்முரமாக உழைப்பார்களானால் அதனால் வரும் லாபம் அரசியலுக்கே ஒழிய அவர்களுக்கு அல்ல.

இவர் கடைசியாக அடைந்துள்ள பதவி ரஷ்யா தேசத்தில் இந்திய தூதுவர் என்னும் இக்கட்டான உத்தியோகம். இவருடைய பரந்த ஞானமும், பிறரிடம் இவர் நடந்துகொள்ளும் நெளிவும் இப்பதவியை இவர் திறமையுடன் வகிப்பதற்கு அனுசரணையாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

7

நிதிமந்திரியின் செவிலித்தாய்

1923-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 5-ஆம் தேதி இந்திய சர்க்காரின் மத்திய சட்டசபையில் விவாதம் நடந்துகொண்டிருந்தது. சர்க்காரின் நிதிமந்திரி விவாதத்துக்கு விடுத்த வரவு செலவுத் திட்டந்தான் அங்கே நடந்த சர்ச்சைக்கு இலக்கான விஷயம். தேசீயவாதிகள் வரவு செலவுத் திட்டம் வகுப்பதில் இந்நாட்டு அந்நிய சர்க்கார் கைக்கொள்ளும் முறை முற்றும் பிசகு என்றும், அவர்கள் வரவையும் செலவையும் சரிக்கட்டுவதற்காகப் போடும் வரிகள் தவறான வழியில் அமைந்துள்ளன என்றும் எடுத்துக்காட்டினர். அப்படிப் பேசியவரில் ஒருவர் பதாம்ஜி கின்வாலா என்னும் பார்ஸிக்காரர். அன்று அவர் இதைக் குறித்துப் பேசியது வருமாறு:

''நம் தேசத்தில் வரவு செலவுத் திட்டம் அமைக்கப் படுவதே ஒரு தனிமாதிரி. அதை அமைப்பதற்குமுன் நிதி மந்திரி, கையில் ஒரு நீலநிறப் பென்சிலை வைத்துக்கொண்டு உட்கார்ந்துகொள்வார். அவருக்கு ஒரு புறம் குக் என்பவர் இருப்பார். மற்றொரு புறம் ஐயர் காணப் படுவார். எதிரில் ஸிம் என்பவர். நிதி மந்திரி, அவர்களை நோக்கி, 'இவர்களுக்கு இந்த வருஷச் செலவுக்கு, வரிகளிலிருந்து எவ்வளவு பணம் வேண்டுமாம்?' என்பார்.

'எண்பது கோடி போதும்' என்ற பதில் வரும்.

'போன வருஷம் வரிகளிலிருந்து எவ்வளவு வரும்படி கிடைத்தது?'

'அறுபத்துநான்கு கோடி.'

'சரி, உங்கள் வரிவிகிதப் புத்தகங்களை எடுத்துக் கொடுங்கள்.'

"மற்ற வேலையை எல்லாம் அந்த நீலநிறப் பென்சில் செய்துவிடும். இங்கும் அங்கும் அடித்தும் கூட்டியும் பென்சில் வேலை செய்கையில் இடையிடையே, 'வருமான வரியில் நூற்றுக்குப் பதினொரு விகிதம் அதிகம் இருக்கட்டுமே. இல்லை, போதாதுபோல் இருக்கிறது. பதினைந்து விகிதம் ஆக்குகிறேன். அப்போது இரண்டு கோடி ரூபாய்கள் கிடைத்துவிடும். என்ன சொல்லுகிறீர்கள்?' என்று இவர் கேட்பார்.

"அதற்கு உடன் இருப்பவர்கள், சரி என்று தலையாட்டுவார்கள்.

"இவைபோன்ற சம்பாஷணைகள் நடைபெறும். இதே மாதிரியேதான் மற்ற வரிகளின் கதியும். இப்புதிய வரிகளை விதித்தால் அதைச் செலுத்தவேண்டியவர்கள் அச்சுமையைத் தாங்க முடியுமா என்பதை இவர்கள் யோசிப்பதே இல்லை. இம்மாதிரி வேறு எந்தத் தேசத்திலும் வருஷாந்த வரவு செலவுத் திட்டத்தை வகுக்கமாட்டார்கள்."

மேற்கூறிய நிகழ்ச்சியில் நிதி மந்திரிக்கு உதவியாக உடனிருந்து வேலை செய்தவர்களுள் ஒருவராகக் குறிக்கப்பட்ட ஐயர்தாம் காலஞ்சென்ற ஏ. வி. வி. ஐயர் என்பவர். நிதிமந்திரிகளுக்கு இவர் செய்த உதவி எவ்வளவு இன்றியமையாததாக இருந்தது என்பதைத் தெரிவிக்க இன்னொரு சம்பவமும் குறிக்கப்படுகிறது. சட்டசபையில் வேறொரு பேச்சில், "நம் நிதிமந்திரிக்கு என்ன குறைவு? ஆங்கில தேசத்தவரான அவருக்கு, இவ்வூருக்கு வந்திருக்கும் அத்தேசத்தவர்களுக்கு என்ன முக்கியமாக இங்கே வேண்டுமோ அவை அதிகார ரீதியிலும் கிடைத்துவிட்டன. வீட்டில் இருப்பதுபோல் ஆபீசிலும் அவருக்கு ஒரு குக்கும் (சமையல்காரனும்) ஒரு ஆயாவும் (செவிலித்தாயும் - ஆங்கிலேயர் ஐயர் என்னும் பதத்தை ஆயா என்பதுபோல் உச்சரிப்பதைப் பேசியவர் இங்கே குறித்திருக்கிறார்) கிடைத்துவிட்டனர்" என்று ஒருவர் சொன்னார். இந்தப் பேச்சில் குறிப்பிடப்பட்ட ஆயா இவர்தாம்.

இவருடைய முழுப் பெயர் ஏ. வி. வேங்கட ரமண ஐயர் என்பது. தென்னிந்தியப் பெயர்கள் மிகவும் நீண்டவை; உச்சரிப்பதற்குக் கடின மானவை என்று பிறர் சொல்லிவரும் புகாரை நீக்குவ தற்காகவோ என்னவோ, தென்னிந்தியர்களில் பலர் வடக்கே வந்துவிட்டால் தங்கள் பெயர்களைக் குறுக்கிக் கொண்டுவிடுவது என்ற ஒரு வழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கின்றனர். அதற்கிணங்க இவர் பெயரும் ஏ. வி. வி. ஐயர் என்று ஆயிற்று. தமிழில் இது ஆ. வே. வேங்கடரமண ஐயர் என்று அமையவேண்டியது. ஏனெனில், இவருடைய சொந்த ஊர் தென்னார்க்காடு ஜில்லாவில் திருக்கோயிலூர் தாலூகாவிலுள்ள ஆயந்தூர் என்னும் குக்கிராமம். இவர் தந்தையாரின் பெயர் வேதாசலையர் என்பது. அவ்வூரில் இவர் சுமார் அறுபது வருஷங்களுக்கு முன் தோன்றினார். இவர் ஸ்மார்த்தப் பிராம்மணருள் வடமர் என்னும் பிரிவைச் சேர்ந்தவர்.

இவருடைய பெற்றோர்கள் மிகவும் எளிய நிலையில் இருந்தவர்கள். அவர்களுடைய ஜீவனம் விவசாயம். நிலத்திலிருந்து கிடைத்த வருவாய், குடும்பச் செலவுக்குப் போதாமல் மிகவும் சிரமப்பட்டுக்கொண் டிருந்தார்கள். இவருடைய சிறு பிராயத்தில் இவரைப் பள்ளிக்கூடத்தில் வைப்பதற்கு இருமுறை நல்ல நாள் பார்த்துவைத்தும், அதற்குப் போதுமான செலவுக்குப் பணம் கையில் இல் லாமையால் அந்தச் சடங்கை ஒத்திவைக்க வேண்டி வந்த தாம். கடைசியில் மூன்றாம் முறையாக அக்ஷராப்பியாசத் துக்காக நாள் வைக்கையிலும் நெருங்கிய ஓர் உறவின ரிடம் கடன்வாங்கித்தான் இதை நடத்தவேண்டியிருந்த தாம்.

இவருடைய ஆரம்பப் படிப்பு மஞ்சக்குப்பத்திலுள்ள செயின்ட் ஜோஸப் பள்ளிக்கூடத்திலும் காலேஜிலும் நடந்தது. உயர்தரப்படிப்பு, திருச்சிராப்பள்ளியிலுள்ள செயின்ட் ஜோஸப் காலேஜில் நடந்தேறியது. இவர் படிக்கையில் உபகாரச் சம்பளம் பெற்றார்.

படிப்பு முடிந்தவுடன் சென்னை அக்கௌண்டன்ட் ஜெனரல் ஆபீஸில் முதல் முதலில் சம்பளமின்றி வேலை

பழகுபவராக அமர்ந்தார். அடுத்தபடியாக இவருக்கு மாதம் ரூ. 15-இல் ஒரு குமாஸ்தா வேலை அதே ஆபீஸில் போட்டுக்கொடுத்தனர். அந்த இலாகாவில் கீழ்ச் சிப்பந்திகளின் வேலைகளை மேல்பார்வை பார்க்கும் பதவிக்கு ஆள் நியமிக்க ஒரு பரீக்ஷை உண்டு. அப்போது அதைக் கல்கத்தாவிலிருந்த மத்திய சர்க்காரின் தலைமை ஆபீஸ் நடத்தியது. நாளடைவில் அப்பரீக்ஷையில் இவர் தேறினார். அத்துடன் இவர் பரீக்ஷை எழுதிய வருஷத்தில் இவர் கொடுத்த விடைகளைக் கண்டு மெச்சி இவரைக் கல்கத்தாவில் மத்திய சர்க்காரின் நிதி இலாகாவில் அதிகச் சம்பளமுள்ள ஒரு பதவிக்கு அழைத்தனர். முதல்முதலில் வடநாட்டுக்குச் செல்லத் தயங்கிய இவர் கடைசியில் அதை ஒப்புக்கொண்டார். அது முதல் அவ்விலாகாவில் இவர் நல்ல பேரும் மதிப்பும் சம்பாதித்துக்கொண்டதுடன் பெருவாரியான சம்பளமுள்ள பொறுப்புள்ள பல பதவிகளையும் வகித்தார். மத்திய நிதி இலாகாவின் உயர்தரப் பதவிகள் அடங்கிய, 'இந்தியன் ஆடிட் அண்டு அகௌண்ட்ஸ் சர்வீஸ்' என்பதற்குப் போட்டிப் பரீக்ஷையின் மூலம் ஆள்களைத் தேர்ந்தெடுப்பதுடன், அவ்விலாகாவிலேயே கீழ்ச் சிப்பந்திகளுக்குள் திறமையுள்ளவர்களைப் பிரமோஷன் செய்வதும் உண்டு. அத்தகைய பிரமோஷன் அடைந்தவர்களுள் ஒருவர் நம் ஐயர்.

நிதி இலாகாவில் பல தென்னிந்தியர்கள் நிபுணர்கள் எனப் பெயரெடுத்திருக்கின்றனர். இவர்களுள் ஐயர் பிரசித்தமான ஒருவர். இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதற்காக இந்த நாட்டுக்கு வந்த ஸைமன் தூது கோஷ்டியார் தம் அறிக்கையில் நிதி இலாகாவுக்குத் தென்னிந்தியர்களையே நியமிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஐயர் போன்றவர்களின் வேலைத் திறமைதான் இந்த அபிப்பிராயத்துக்குக் காரணம் என்பதில் ஐயமில்லை.

இவருடைய வேலைத்திறமையை இவருடன் நெருங்கிப் பழகிய பலர் மெச்ச நான் கேட்டிருக்கிறேன். அந்த இலாகாவில் ஸி. ஐ. இ. என்

னும் ஆங்கிலப் பட்டத்தை அடைந்த சில இந்தியர்களுள் இவரும் ஒருவர். அதிலும், வரவு செலவுத் திட்ட சம்பந்தமான வேலையிலும் (Budget) பொக்கிஷம், நாணயம் இவை சம்பந்தமான வேலையிலும் (Currency) இவர் நிகரற்ற திறமை வாய்ந்தவரெனப் பெயர் பெற்றவர். வரவு செலவுத் திட்ட சம்பந்தமாக இவர் செய்த உதவியைப் புகழ்ந்தும் நன்றி பாராட்டியும் பல நிதி மெம்பர்கள் (மந்திரிகள் — குடிகளால் தேர்ந்தெடுக்கப்படாமல் சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்களாதலால் மெம்பர்கள் என்று குறிக்கப்படுவார்கள்) இவரைக் கடிதங்கள் மூலம் பாராட்டியிருக்கின்றனர் என்று பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். எனவே நிதிமந்திரிகள் பலருக்கு இவர் ஓர் செவிலித்தாய்போல் உதவினார் என்றாலும் அது மிகையாகாது. ஆனால் யானைக்கும் அடி சறுக்கும் என்பர். இவ்வளவு திறமையுள்ள இவர் போட்டமைத்த புள்ளியிலும் ஒரு முறை தவறு ஏற்பட்டதாம். அதைப்பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கத்திலிருந்து கிளம்பிய விசாரணையின்போது இந்திய சர்க்கார் ஐயரின் வேலையைப்பற்றிப் புகழ்ந்து, இந்தத் தவறு இவருடைய வேலையில் தோன்றியது ஓர் துரதிருஷ்டமே என்று அபிப்பிராயம் தெரிவித்தனராம்.

அதிகார தோரணையில் இவர் மத்திய சட்டசபையில் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டுச் சில வருஷங்கள் இப்பதவியையும் வகித்தார்.

இவர் பார்த்த உத்தியோகங்களுள் முக்கியமானவை பம்பாயிலும் கல்கத்தாவிலும் நாணய இலாகாவின் உபதலைவர் பதவிகள், மத்திய சர்க்காரின் பொக்கிஷ இலாகாவின் உதவிக் காரியதரிசி முதலியவை. இவர் நாணய இலாகாவின் தலைவராக இருக்கையில் சில ஆயிரம் ரூபாய் நோட்டுகளில் சர்க்காரின் சார்பாகக் கையெழுத்திட்டார். இவருக்கு முன்பும் பின்பும் அதாவது 'ரிஸர்வ் பாங்கி' ஏற்படுவதற்கு முன்பு வேறு எந்த இந்தியருக்கும் சர்க்கார் பிரதிநிதி என்னும் தோரணையில் நோட்டுகளில் கையெழுத்திடும் பெருமை கிட்டவில்லை.

சுமார் இருபத்தாறு வருஷங்களுக்கு முன் மத்திய சர்க்கார் இந்திய நாணய விஷயமாக ஒரு விசாரணைக் கமிட்டி ஏற்படுத்தினர். அதற்குத் தலைவர் ஸர் ஹில்டன் யங் என்னும் நிபுணர். அவருடைய பரிசீலனைக்கு விடப்பட்ட விஷயங்களுள் முக்கியமானது இங்கிலாந்தின் நாணயமான பவுண்டு என்பதற்கும் இந்தியாவின் நாணயமான ரூபாய்க்கும் ஒரு பரஸ்பர மதிப்பு ஏற்படுத்துவது என்பதே. அதாவது நாணயமாற்றில் ஒரு பவுண்டு எவ்வளவு ரூபாய்க்குச் சமமாகக் கருதப்பட வேண்டும் என்பது. இந்தக் கமிட்டிக்கு உப காரியதரிசியாக நம் ஐயர் நியமிக்கப்பட்டார். இந்த விசாரணையின் முற்பகுதி இந்தத் தேசத்திலும், பிற்பகுதி இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் நடப்பதாக ஏற்பாடாகியிருந்தது. முற்பகுதி முழுவதிலும் அந்தக் கமிட்டிக்குக் காரியதரிசியாக உதவிய இவர் அப்பகுதி முடிந்து எல்லோரும் இங்கிலாந்துக்குக் கப்பலேறும் தறுவாயில் நோயுற்றார். அந்நோயிலிருந்து இவர் மீளவே இல்லை. ஆகையால் கமிட்டியின் பிற்பகுதியில் இவர் வேலை செய்யமுடியாமல் போயிற்று. அவ்வேலை முழுவதையும் இவர் செய்திருந்தாரானால் அது முடிந்ததும் அச்சமயம் இங்கே ஸ்தாபனம் செய்யப்படுவதாக இருந்த இந்தியன் ரிசர்வ் பாங்கி என்னும் சர்க்கார் பொக்கிஷசாலையில் இவர் ஓர் பொறுப்புள்ள பெரும் பதவியை வகித்திருப்பார் என்று எண்ணப்பட்டது. ஆனால் நோய் வந்து குறுக்கிட்டதால் எல்லோரும் எதிர்பார்த்த இந்தப் பாக்கியம் இவருக்குக் கிடைக்கவில்லை. நோயுற்ற சில மாதங்களுக்குப் பின்னர் வியாதி குணமடைந்து வருவதாக எண்ண இடம் இருந்தது. ஆனால் திடீரென்று ஒரு நாள் - 1926 - செப்டம்பரில் - சென்னையில் இவர் மாரடைப்பினால் உயிர் துறந்தார்.

இவர் நிறத்தில் சற்றுக் கருமை கலந்த மாநிறம் உள்ளவர். அதிக உயரமில்லை. அதிகக் குள்ளமும் இல்லை. நடுத்தரப் பருமனுள்ள தேகம் படைத்தவர். கண்களில் மட்டும் ஒரு கூர்மையான பார்வை உண்டு.

குணத்தில் இவர் பரம சாது. தோற்றத்தில் பசுப் போன்றவர். அதிகக் கலகலப்புடன் பேசமாட்டார்.

இவர் ஆயுள் முழுவதும் வட இந்தியாவிலேயே இருந்தபடியால் இவருடைய உறவினர்கூட இவருடன் அதிகமாக நெருங்கிப் பழக இயலவில்லை. இவருக்கு ஒன்றுவிட்ட மருமானான நானே இவரை என் வாழ்க்கையில் இருமுறைதான் சந்தித்திருக்கிறேன். இவர் உறவினர்களாகிய நாங்கள் இவரைப் பார்க்கப் போகும்போது சில சிறு வாக்கியங்களினாலோ சொற்களினாலோ குசலப்பிரச்னம் செய்வார். அவ்வளவுதான். பின்பு நிகழும் சம்பாஷணை மௌனம் நிறைந்ததாக இருக்கும். வந்திருப்போர் கேட்கும் கேள்விகளுக்குச் சிக்கனமாகப் பதில்கள் கிடைக்கும். சர்க்கார் செலவுகளில் சிக்கனத்தைப் புகுத்தும் தொழிலையுடைய இலாகாவின் தொடர்புதான் இவர் சம்பாஷணையிலும் காட்டிய சிக்கனத்துக்குக் காரணம் போலும்!

அதிகக் கலகலப்பு இல்லாதிருந்தும் இவரிடம் பிறருக்கு அளவில்லாத மதிப்பு இருந்தது. கல்கத்தாவில் ஒரு சமயம் பல தென்னிந்தியப் பிரமுகர்கள் கூடியிருக்கையில் அங்கே ஏதோ ஒரு காரியத்தை முன்னிட்டு இவர் போய்ச் சேர்ந்தார். அங்கிருந்தவர்கள் பலருக்கு, அதிகார தோரணையில் இவருடன் ஒருவித சம்பந்தமும் இல்லையாம். அப்படியிருந்தும் இவர் நுழைந்ததும், எல்லோரும் எழுந்திருந்து தங்கள் சம்பாஷணைகளை நிறுத்திக்கொண்டு மரியாதையுடன் இவரை வரவேற்றார்களாம். இதை நான் அச்சமயம் அங்கிருந்த ஒருவர் சொல்லக் கேட்டேன். பிறருக்கு இவரிடம் இருந்த மரியாதையை இச்சம்பவம் நன்கு எடுத்து விளக்குகிறது.

பிறருக்கு உதவும் தன்மை இவரிடம் உண்டு. உறவினர்களுள் பல இளைஞர்களின் படிப்புக்கு ஒவ்வொரு மாதமும் பணம் அனுப்பி இவர் உதவியிருக்கிறார். ஆதியில் எளிமையின் கொடுமையினால் தாம் அநுபவித்த கஷ்டங்களை மறக்காமல் இம்மாதிரி இவர் பிறருக்கு உதவ முன்வந்தது மெச்சத்தக்கது.

இவருடைய உதாரகுணத்துக்கு வேறொரு சம்பவத்தையும் இங்கே குறிப்பிடலாம். இவருடைய உறவினர் ஒருவருக்கு ஒரு சமயம் இவர் முந்நூறு ரூபாய்கள்

கொடுத்து உதவியிருந்தார். பணம் கடனாகத்தான் கொடுக்கப்பட்டது. என்றாலும் பணம் வாங்கியவர் பின்பு அதைத் திருப்பிக்கொடுக்க இயலாமல் துன்புறுகையில் இவர் தாமாகவே அவருக்கு ஒரு கடிதம் எழுதி அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டாமென்றும் அம் மாதிரி நேர்ந்ததற்குக் கவலைப்படவும் வேண்டா மென்றும் தெரிவித்தார்.

செய்ந்நன்றி மறவாமை என்னும் குணம் இவரிடம் பரிபூரணமாகக் காணப்பட்டது. இளமையில் இவருக்கும் இவர் குடும்பத்துக்கும் இவருடைய அம்மான் ஒருவர் உதவினார். தம் ஆயுள் உள்ளவரையிலும் அவருடைய குடும்பத்தாருக்குத் தம்மாலான உதவியை இவர் செய்து வந்தார்.

கஷ்டம் வந்தால் அதை அநுபவிக்கத் தக்க மனோ தைரியம் இவருக்கு இருந்தது. ஒரு முறை இவருடைய நண்பர்களில் ஒருவரும் சென்னை அக்கௌன்டன்ட் ஜெனரல் ஆபீஸில் வேலை பார்த்துவந்தவருமான ஒருவர் நோட்டம் பார்ப்பதற்காகப் பலரிடம் வைர நகைகளை வாங்கி அவைகளைத் தம் செலவுக்கு உபயோகித்துவிட்டார். பிறகு அதனால் தமக்கு வந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் எட்டிக்காய் விஷத்தை உண்டு தற்கொலை செய்து கொண்டார். இதனால் வைர ஆபரணத்தை இழந்தவர்களுள் இவரும் ஒருவர். இவருக்கு இதனால் ஏற்பட்ட நஷ்டம் ஐயாயிரம் ரூபாய். இதைப்பற்றித் தகவல் கிடைத்ததும் இவருடைய குடும்பத்தினர் பெருத்த மனக் கலக்கம் அடைந்து அதை வாய்விட்டும் சொல்லிக் காட்டி விட்டனர். அதை வீட்டின் மாடியிலிருந்து கேட்ட இவர் கீழே இறங்கி வந்து, "இந்தப் பணம் நம்முடையதன்று என்று எண்ணி இதை மறந்துவிடுங்கள். வீணாக இதைக் குறித்து மனத்தைப் புண்படுத்திக் கொள்ளாதீர்கள்" என்று அவர்களை நோக்கி அமைதியுடன் சமாதானம் சொன்னார். இது இவருடைய திடசித்தத்தை நன்கு விளக்குகிறது.

இவர் கையெழுத்து இங்கிலீஷிலும் சரி, தமிழிலும் சரி; பார்க்க மிகவும் அழகாயிருக்கும். கண்களில் ஒற்றிக்

கொள்ளச் சொல்லும். என் சிறு வயதிலேயே இவர் எங்களுக்கு எழுதிய கடிதங்களிலுள்ள எழுத்துக்கள் என் மனத்தைக் கவர்ந்தன. சதா புள்ளிவிவரங்களுட னேயே உறவாடும் இவர் வேலையில் இவர் அடைந்த பெரும் புகழுக்கு இதுவும் ஒரு சிறந்த சாதகமாக அமைந் திருக்க வேண்டுமென்று நம்புகிறேன்.

வட இந்தியாவில் இவர் இருந்த நகரங்களிலுள்ள தென்னிந்தியர்களுக்கு இவர் சமூகத்தொண்டும் செய் திருக்கிறார். கல்கத்தாவில் இவர் இருந்த சமயத்தில் சில தென்னிந்தியர்களே அங்கே இருந்தனர். அவர்களுக் குள்ளும் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதற்கு இவர் தலைவராக இருந்தார். பின்பு டெல்லி, சிம்லா இங்கெல் லாம் மாற்றப்பட்ட போதும் அந்த ஊர்களிலுள்ள தென்னிந்தியச் சங்கங்களுக்குத் தலைவராகவும் இருந்தார்.

8

தென்னாட்டு டாகூர்

லார்ட் ரிப்பன் என்னும் பிரபு இந்த நாட்டுக்கு ஐந்து வருஷங்கள் ராஜப் பிரதிநிதியாக இருந்ததன் பயனை நாடு ஸ்தல ஸ்தாபனங்கள் என்னும் சீர்திருத்தத்தில் கண்டது. நாளடைவில் இது தேசத்துக்கு ஒரு நன்மையாக இருப்பது போய் நம் பாரதத் தாயின் உடலில் ஒரு புண்போல் ஆகிவிட்டது. ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தை இந்தியரிடம் ஒப்படைத்து அதில் அவர்கள் காட்டும் திறமையையும் நடுநிலைமையையும் கண்டு பின்னர் தேசத்தின் அரசியலையே நாட்டு மக்களிடம் ஒப்படைப்பார்கள் என்று எண்ணினோம். ஆனால் முனிஸிபாலிடி, தாலூக்கா போர்டுகள், ஜில்லா போர்டுகள் முதலிய ஸ்தாபனங்கள் நம் வசம் வந்ததன் பயன் அவைகளில் தோன்றிய ஊழல்கள் தாம். இந்த ஊழல்களைப் பார்த்து, 'தேசத்தை ஆள நாம் தகுதியற்றவர்கள்' என்று கூடப் பிறர் எண்ண இடம் கொடுத்துவிட்டோம்.

ஊழல் நிரம்பிய முனிஸிபாலிடிகளுள் ஒரு காலத்தில் மாயவரம் முனிஸிபாலிடியும் ஒன்றாக இருந்தது. அதைக் கண்டு தாங்க முடியாமல் மனக் கொதிப்புடன் 1906-ஆம் வருஷத்தில் ஒருவர் ஒரு பத்திரிகையில் ஆங்கிலத்தில் ஒரு கண்டனக் கட்டுரை எழுதினார். அச் சமயம் அவ்வூரில் டெபுடி கலெக்டராயிருந்த (தற்சமயம் 'ஸர்' பட்டம் பெற்றுப் பரோடா சம்ஸ்தானத்தில் திவானாக இருக்கும்) வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் என்பவர் அதைப் படித்து அதை ஒரு பென்சிலால் கோடிட்டுக் குறித்து அவ்வூர் நகரத் தலைவருக்கு அனுப்பினார். தலைவருக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. கட்டுரையில் எழுதியவரின் பெயர் குறிக்கப்படவில்லை. ஒரு நிருபர் எழுதியதாக மட்டும் கண்டிருந்தது. கட்டுரையில் கண்டிக்கப்பட்

டிருந்த ஊழல்களை நீக்கத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வ தில் இவர் மனம் நாடவில்லை. அந்தக் கட்டுரையை எழுதிய வரைக் கண்டுபிடித்து அவரைத் தகுந்த தண்டனைக்கு உள்ளாக்க வேண்டுமென்னும் வேலையில்தான் அவர் முனைந்தார். 'பழி ஓரிடம் பாவம் ஓரிடம்' என்பதுபோல் அக்கட்டுரையை எழுதிய குற்றம் அவ்வூர் முனிஸிபல் பள்ளிக்கூடத்திலிருந்த ஒரு நொண்டி வாத்தியாரின் பேரில் சுமத்தப்பட்டது. கட்டுரை வெகு அழகாக எழுதப்பட்டிருந்தது. வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவில் செய்த அக்கிரமச் செயல்களுக்காக அவரைக் கண்டித்துப் பேசிய எட்மண்டு பர்க் என்னும் ஆங்கில ஆசிரியரின் நடை முழுவதும் இக் கட்டுரையில் பயன்படுத்தப்பட் டிருந்தது. தலைவர் முன் குற்றவாளி என்று கொண்டு போய் நிறுத்தப்பட்ட நொண்டி உபாத்தியாயர், 'இவ்வ ளவு அழகாக எனக்கு எழுதத் தெரியாதே' என்று முறை யிட்டார். அவர் புலம்பலைத் தலைவர் ஏற்றுக்கொள்ள வில்லை.

கட்டுரையை எழுதியவர் ரகசியமாக இந்த நாட கத்தைக் கண்டு தமக்குள் மகிழ்ந்துகொண் டிருந்தார். அன்றுதான் அச்சில் வெளிவரும் மொழியின் பலத்தை அவர் கண்கூடாகக் கண்டார். தேன் குடித்த நரியின் மனப்பான்மையை அன்று அவர் அடைந்தார்.

இவர்தாம் இன்று தமிழ் நாட்டின் சிறந்த சொல் லேர் உழவராக இருக்கும் ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி என்பவர். அப்போது அவ்வூர் முனிஸிபல் பள்ளிக்கூடத் தில் அவர் ஒரு மாணவராக இருந்தார்; வயது பதினைந்தே தான். நான்காவது பாரம் அதாவது எட்டாம் வகுப்பில் வாசித்துக்கொண் டிருந்தார். கருணாகர மேனன் என்று ஒருவர் பத்திராதிபராக இருந்ததும், அப்போதுதான் புதி தாகத் தொடங்கப் பெற்றதுமான 'இந்திய தேசபக்தன்' (இந்தியன் பேட்ரியட்) என்னும் ஒரு தினசரிப் பத்தி ரிகையில்தான் இவர் கட்டுரை வெளிவந்தது. அதில் இது வெளிவந்ததற்குக் காரணமாக இருந்தவர் அப் பத்திரிகையுடன் தொடர்பு வாய்ந்தவராக இருந்த எஸ். ரங்கையர் என்பவர்.

கே. எஸ். வேங்கடரமணி என்னும் இவருடைய பெயர் சுத்தத் தமிழில் கா. சி. வேங்கடரமணி என்று எழுதப்பெறும். இதிலுள்ள கா என்பது காவேரிப் பட்டணம் என்னும் இவருடைய சொந்த ஊரைக் குறிக்கும். சி என்னும் எழுத்து இவருடைய தந்தையாராகிய சித்தநாதையர் என்பவருடைய பெயரைக் குறிக்கிறது.

காவேரிப்பட்டணம் என்னும் இவருடைய ஊர் தஞ்சாவூர் ஜில்லாவில் சீர்காழித் தாலூகாவில் உள்ளது. காவேரிப்பட்டணம் என்பது இவ்வூரின் தற்காலப் பெயராயிருப்பினும் இதுதான் பண்டைய காவிரிப் பூம்பட்டினம் என்னும் சோழ நாட்டுத் துறைமுகப் பட்டினம். சிலப்பதிகாரப் பிரசித்தி பெற்றதும் அந்தக் காப்பியத்தில் புகார் என்று குறிக்கப்பட்டதுமான ஊர் இதுவே. இத்தகைய பழமையும் சிறப்பும் கொண்ட இவ்வூரைத் தாம் சேர்ந்தவர் என்பதைப்பற்றி இவருக்கும் பெருமையும் சந்தோஷமும் அதிகம். பல சொற்பொழிவுகளிலும் சம்பாஷணைகளிலும் இவர் தம் ஊரின் சிறப்பைக் குறிப்பதை நான் நேரில் கேட்டிருக்கிறேன்.

இவர் பிராம்மண மரபில் ஸ்மார்த்தப் பிரிவில் அடங்கிய வடமர் என்னும் உட்பிரிவைச் சேர்ந்தவர். 10-6-1891-இல் பிறந்தார். இவர் தம்முடைய ஆரம்பப் படிப்பை மாயவரத்திலும் உயர்தரப் படிப்பைச் சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலையிலும் திருவனந்தபுரத்தில் சட்டப் படிப்பையும் படித்தார். வாழ்க்கையில் வக்கீலாக அமர்ந்து சென்னையில் மயிலாப்பூர் வக்கீல்கள் கோஷ்டியில் ஒருவரானர். ஆனலும் பத்திரிகைக்கு எழுதுதல், புத்தகங்கள் எழுதுதல் என்பனவற்றை அத்துடன் வைத்துக்கொண்டதனல் வக்கில் தொழிலில் இவர் அதிக சோபிதமடையவில்லை. இதற்கு ஸர் ஸர்வபள்ளி ராதாகிருஷ்ணன் ஒரு சமயம் கொடுத்த ஹாஸ்யமான ஒரு காரணத்தை இங்கே குறிக்கிறேன். ‘சட்டம் என்னும் தொழில் ஒருவனுக்கு மனைவி போன்றது. பிற ஸ்திரீகளைப்பற்றி நினைக்கவும் அது இடங்கொடுக்காது. ஆகையால் பிற தொழில்களை இத்துடன் கைக்கொள்ளுபவர்கள் இத்

தொழிலில் பிரகாசிக்க மாட்டார்கள்' என்று இவரைப் பற்றிக் கல்கத்தாவில் நடந்த ஒரு கூட்டத்தில் அவர் சொன்னது மிகவும் உண்மையானது. இவர் சமீபத்தில் ஆழ்வார் சம்ஸ்தானத்தில் கிராமப் புனருத்தாரணத்தையும் கல்வியையும் மேற்பார்வையிடும் ஒரு பொறுப்புள்ள பதவியில் நியமிக்கப்பட்டு வேலை பார்த்து வந்தார். உடல்நிலை குன்றியதால் அதை விட்டு விலகவேண்டி வந்தது.

இவர் பின்பு சிறந்த எழுத்தாளராக விளங்கப் போவது முன்கூட்டியே தெரிந்துவிட்டது. மேலே குறிக்கப்பட்ட கட்டுரையிலேயே இவருடைய ஆற்றல் நன்கு புலப்பட்டது. டெல்லியில் 'ராய்ஸ் வீக்லீ' என்னும் பத்திரிகையின் ஆசிரியராக 1933-இல் இருந்த ரங்கையர் இவரைப் பார்த்து, "உங்களுக்கு என்னை இப்போதுதான் தெரியும். ஆனால் உங்களை எனக்கு உங்களுடைய சிறு பிராயம் முதல் நன்றாகத் தெரியும். முதல் முதல் மாயவரம் முனிஸிபாலிடியின் ஊழல்களைப்பற்றி நீங்கள் எழுதிய கட்டுரையை வாசித்துப் பார்த்து ஆனந்தத்துடன் நான் தான் அதை 'இந்தியன் பேட்ரியட்'டில் போடச் செய்தேன். அப்போது முதல் நான் உங்களை மறக்கவில்லை. உங்கள் ஞாபகமாகவே இருக்கிறேன். உங்களுக்கு ஈசன் அருள் புரிவார்" என்றார்.

அந்நாளில் இவரைக் கட்டுரை எழுதத் தூண்டியவை ஆங்கில ஆசிரியர் எட்மண்ட் பர்க் என்பவரின் கட்டுரைகளும் சொற்பொழிவுகளும், வந்தே மாதரம் என்னும் பத்திரிகையில் வெளிவந்த பாபு (பிற்காலத்திய யோகி) அரவிந்த கோஷ் என்னும் தேசபக்தரின் கட்டுரைகளுமே. சென்னையில் கலாசாலையில் இவர் உயர்தரப் படிப்புப் படிக்கையிலும் மேனாட்டில் நடத்தப் பெற்ற ஆங்கில வியாசப் போட்டிகளில் கலந்துகொண்டு, பரிசு பெற்று, சென்னை மாணவர் உலகில் ஒரு பெருத்த ஆச்சரியத்தை உண்டுபண்ணினார்.

இவர் முதல் முதலில் எழுத்தாளராக வெளிவந்தது 1921-ஆம் வருஷத்தில். அப்போதுதான் 'காகிதக் கப்

பல்கள்' என்னும் தொகுதியிலுள்ள இவருடைய கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இதில் தென்னிந்திய கிராமங்களிலுள்ள வாழ்க்கை நிகழ்ச்சிகளை, பிச்சைக்காரன், செம்படவன், கிராமக் கிரிக்கட் விளையாட்டு, கோயில்கள், பஞ்சமப் பையன், யாத்திரிகன், பாட்டி, சப் ரிஜிஸ்திரார், ஆசார்யஸ்வாமிகள், இந்திய மணம் என்னும் பத்து வியாசங்கள் மூலம் சித்திரித்துக் காட்டியிருக்கிறார்.

இவருடைய அடுத்த புத்தகமாகிய 'மணல் மேட்டின் மேல்' என்பதில் இவருடைய ஆற்றல் வசன கவிதைகளாக மலர்கிறது. தம்முடைய சொந்த ஊருக்கு அருகிலுள்ள காவேரி நதியின் தீரத்திலுள்ள மணல் மேட்டின்மேல் படுத்துக்கொண்டு வானத்தை நோக்கிய வண்ணம் மானிட வாழ்க்கையின் விளைவுகளைப்பற்றிய ஆலோசனைகளில் ஆழ்ந்துவிடுகிறார். இந்தச் சிந்தனையின் பயன் சிறுசிறு கவிதைகளாக வெளித்தோன்றுகிறது. ஆனால் இந்தக் கவிதைகள் சந்தம் நிறைந்த செய்யுள் வடிவம் கொண்டவை அல்ல. வெறும் வசன நடையில் உள்ளவையே என்றாலும் கவிதைகளில் உள்ள கருத்துக்களை உள்ளடக்கியவை.

அடுத்தபடி இவர் எழுதியவை இரண்டு நவீனங்கள். அவை 'முருகன் ஓர் உழவன்' என்பதும், 'தேசபக்தன் கந்தன்' என்பதும். இவை இரண்டிலும் இவர் கிராம வாழ்க்கையைச் சித்திரித்திருப்பதுடன் சமூக சீர்திருத்தத்தைப்பற்றித் தாம் கொண்டுள்ள கொள்கைகளையும் எடுத்து விளக்கியிருக்கிறார். 1927-இல் முதல்முதலாக வெளிவந்த 'முருகனில்' நாட்டில் பெருஞ் செல்வம் படைத்த சிலரும் வறுமையில் மூழ்கியிருக்கும் பலரும் இருப்பது அநீதியென்றும், நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் உண்ண உணவும் உடுக்கத் துணியும் கொடுக்கப் போதுமானதாக இவர் கருதும் மூன்று ஏகர் நிலமும் ஒரு பசுமாடும் ஒவ்வொருவனுக்கும் இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தை வெளியிடுகிறார். 1932-இல் வெளிவந்த 'கந்தன்' நாட்டில் சுதந்தர உணர்ச்சி தலைக்கு ஏறியிருந்த சமயத்தைச் சித்திரிக்கும் ஒரு நவீனம்.

இவர் எழுதியிருக்கும் ஏனைய நூல்களாகிய, 'அடுத்த படி, மறுமலர்ச்சி இந்தியா, சம்புவினுடன் ஒரு நாள்' என்பனவற்றில் அரசியல் விஷயமாகவும் சமூக சீர் திருத்த விஷயமாகவும் தாம் கொண்ட அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார். ஜடாதரன் என்ற இவருடைய புத்தகம் ஒரு சிறுகதைக் கொத்து. இதில் சிறு கதை எழுதுவதில் இவருக்குள்ள திறமை நன்கு புலப்படு கிறது.

ஜடாதரன் என்னும் கதையில் ஓர் இளைஞன் மேனாட்டுப் படிப்பைப் படித்துவிட்டு ஒரு பட்டதாரி யான பின்பும் வேறு வேலையை நாடாமல் தன் கிராமத் துக்கே திரும்பி வந்து ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்துகிறான். இது கிராமப் புனருத்தாரணத்தில் இவருக் குள்ள அபாரப் பற்றுதலை வெளியிடுகிறது.

கிராமச் சீர்திருத்தத்தில் இவர் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நிதி ஸ்தாபனம், ஒரு பால் பண்ணை, ஒரு பள்ளிக்கூடம், ஒரு தொழிற்சாலை, ஒரு பஞ்சாயத்து முதலியவைகளை ஏற் படுத்த வேண்டும் என்பது இவருடைய கொள்கை. இம் மாதிரி நம் கிராமங்களைத் திருத்தியமைத்தலில்தான் நம் தேசத்தின் விமோசனம் இருக்கிறது என்று தீவிரமாக எண் ணுபவர் இவர். இதை நடைமுறையில் நடத்திக் காட்ட வேண்டுமென்ற எண்ணத்துடன் தஞ்சாவூர் ஜில்லாவில் மாயவரம் தாலுக்காவிலுள்ள திருக்கடையூரில் 'மார்க்கண் டேய ஆசிரமம்' என்னும் ஸ்தாபனத்தை நிறுவி அதைப்பல வருஷங்கள் நடத்திவந்தார். இந்தத் தொண்டில் உதவு வதற்காகப் 'பாரத மணி' என்னும் ஒரு பத்திரிகையை யும் 1938-அக்டோபரிலிருந்து ஆரம்பித்தார்.

இவர் ஓர் உண்மையான கவி என்பதை இவருடைய வச னத்திலும் சம்பாஷணையிலுமே காணலாம். சாதாரணப் பேச்சிலேயே இவர் கவிதைகளில் தோன்றும் சித்திரங் களையும் உணர்ச்சிகளையும் நிரப்புவார். பூக்களிலிருந்து காயும் பழமும் உண்டாகின்றன என்னும் இயற்கை உண்மையை, "பழத்துக்காகப் பூ தன்னையும் தன்னுடைய எழிலையும் தியாகம் செய்கிறது" என்பார். ஒரு நீரோட்

டத்தைச் சிறிது நேரம் கண்ணுற்றதும் கவியின் உள்ளத்தில் எழும் எண்ணங்கள் இவர் வாக்கிலிருந்து வெளிவரும். அடியில் கண்ட வர்ணனை இதற்கு ஓர் உதாரணம்:

"நான் இப்போது கங்கைக் கரையிலிருந்து எழுதுகிறேன். ஹௌரா பாலத்தின் நடுவில் நின்றுகொண்டு கல்கத்தாவின் வியாபார ஓட்டத்தையும், செல்வப் பெருக்கையும், பரபரப்பையும் பார்த்துக் கொஞ்ச நேரம் மதிமயங்கியிருந்தேன். இச்செல்வத்துக்கு மூலகாரணமாயுள்ள கங்கா நதி என் காலுக்குக் கீழே சுழலிட்டுச் சமுத்திரம்போல் பெருகி ஓடிக்கொண்டிருந்தது. நீர்ச் சுழியைக் கண்டு வியந்தேன். ஒப்பில்லாத அழகுடன் ஒரு நிமிஷத்தில் பிறந்து மறு நிமிஷத்தில் அழியும் நீர்ச்சுழியும் மானிட வாழ்வுபோல்தான் இருக்கிறது."

இவ்வர்ணனையேதான் பண்டைத் தமிழ்க் கவியின் வாக்கில், "நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம், நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள், நீரில் எழுத்தாகும் யாக்கை" என்னும் கவிதையாகப் பரிணமித்திருக்கிறது!

இவர் எழுதியிருக்கும் நவீனங்கள், வசன கவிதைகள், கட்டுரைகள், கவிதை, சிறுகதை முதலியவை வங்கக் கவி ரவீந்திரநாத டாகுரின் நூல்களைப் பல வழியில் ஒத்திருப்பதால் இவரைத் 'தென்னிந்திய டாகுர்' என்று குறிப்பிடுவார்கள். இவர் மட்டும் வங்க நாட்டில் பிறந்திருந்து இந் நூல்களை இயற்றியிருந்தால் அந்த நாட்டு மக்கள் இவரும் 'நோபெல்' பரிசை அடையும்படி செய்திருப்பார்கள் என்பது நிச்சயம். இவருடைய துரதிருஷ்டம் தென்னாட்டில் பிறந்தார். தேசீய கவி பாரதியாரைத் தரித்திரத்தில் தவிக்க விட்ட நாடல்லவா இது!

இவர் சென்னையில் வக்கீலாக இருக்கையில் சென்னை, அண்ணாமலை இவ்விரு ஸர்வ கலாசாலைகளிலும் செனட் மெம்பராக இருந்தார். வட இந்திய சம்ஸ்தானங்களிலும் ஸர்வ கலாசாலையிலும் இவருக்கு அதிக மதிப்பு உண்டு. அங்கே பல முறை கிராமப் புனருத்தாரணத்தைப்

பற்றியும் சமூக சீர்திருத்தத்தைப்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தி அதற்காகத் தக்க சம்மானங்களும் பெற்றிருக்கிறார். இவர் இம்மாதிரி செய்திருக்கும் வடநாட்டு யாத்திரைகளுள் 1933-இல் காசி ஸர்வகலாசாலைக்குச் சென்றது, 1936-இல் அலாகாபாத் ஸர்வ கலாசாலையாரால் வரவேற்கப்பட்டது, 1939-இல் பரோடா, குவாலியர், இவ்விரு சம்ஸ்தானங்களுக்கும் சென்று பிரசங்கங்கள் செய்தது, இவைகளை முக்கியமானவையாகக் குறிப்பிடலாம்.

இவருடைய நூல்களின் நயத்தைக் கண்டு மெச்சி, காஞ்சி காமகோடி பீடாதிபதியார் இவருக்கு ஒரு சால்வையும் தந்தக் கேடகமும் அளித்திருக்கிறார். சென்னை வக்கீல்கள் சங்கமும் இவருக்கு ஒரு வெள்ளித் தட்டை நன்கொடையாக வழங்கியிருக்கிறது.

இவர் தோற்றத்தில் வெகு சாந்தமானவர். விசாலமான நெற்றி, சற்று வளைந்த மூக்கு. ஆனால் மோவாய்க் கட்டையே இல்லைபோல் இருக்கும். இவருடைய நூல்களைப் படித்துவிட்டு இவர்மேல் அபிமானங்கொண்ட பலர், பின்பு இவரை நேரில் கண்டதும் இவருடைய தோற்றத்தைப்பற்றிச் சற்று ஏமாற்றமடைந்ததாக என்னிடம் சொல்லியிருக்கின்றனர். பிறருக்கு உதவி செய்ய இவர் சலிக்காமல் முன் வருவார். இவரிடம் கோபமென்பதே இல்லை. இவருடைய சம்பாஷணையில் ஹாஸ்யமும் கவித்துவமும் ததும்பும். இளம் எழுத்தாளர்களைக் கண்டால் இவருக்கு வெகு சந்தோஷம். அவர்கள் முன்னுக்கு வர இவர் தம்மால் இயன்ற உதவியைச் செய்ய ஒரு நாளும் தயங்குவதில்லை. பிறருக்கு விருந்திடுவதில் இவருக்கு மிகப் பிரியம். எழுத்தாளர்கள் அடிக்கடி ஒருவரை ஒருவர் சந்தித்துத் தங்கள் கருத்துக்களையும் கொள்கைகளையும் ஒப்பு நோக்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்குத் தீவிரமாக உண்டு.

இந்த நாட்டின் இரு திலகங்களான மகாத்மா காந்தி, கவி ரவீந்திரர் இவ்விருவர்களிடமும் இவருக்குப் பரிசயம் உண்டு. மகாத்மாவைப்போல் இவரும் ரெயிலில் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்வதையே ஒரு

விரதமாகக் கொண்டிருக்கிறார். கிராம வாழ்க்கையின் சீர்திருத்தத்துக்காகப் பாடுபடும் இவர் கிராம ஜனங்கள் போகக்கூடியதான மூன்றாவது வகுப்பிலேதான் தாமும் செல்ல வேண்டுமென்று உறுதிகொண்டிருக்கிறார். ஆனால் இவருடைய மூன்றாவது வகுப்புப் பிரயாணம் மிகவும் பரிதாபகரமானது. ஒரு முறை வட நாட்டில் இவர் இவ் வகுப்பில் சென்றதை நான் காண நேர்ந்தது. வண்டியில் ஏக நெருக்கம். இவருடன் கூட இருந்தவர்கள் எழுத்து வாசனையே அறியாத ஏழை மக்கள். மத்தளம் முதலிய இசைக் கருவிகளுடனும் அழுக்கும் கிழிசலும் நிறைந்த உடைகளுடனும் வண்டியில் ஏறி இவருக்கு அருகில் உட்கார்ந்துகொண்டு தங்கள் சங்கீதத்தைத் தொடங்கினார்கள். இவர் காது கிழிந்து விடும்போல் இருந்தது. உலகம் அறிந்த அறிஞர் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் உள்பட நானும் உடனிருந்த நண்பர்களும் பரிதாபத்துடன் இவரை நோக்கினோம். வதங்கிய ஒரு புன்சிரிப்புடன், "உழவன் முருகனின் சிருஷ்டிகர்த்தாவுக்கு இத்தகைய பிரயாணந்தான் ஏற்றது" என்று சொன்னார். வண்டியும் நகர்ந்தது.

௭

கூட்டங்களின் மனத்தைக் கொள்ளை கொண்டவர்

ஐரோப்பாவைச் சேர்ந்த டென்மார்க் என்னும் ஒரு தேசத்தில் இரு சகோதரர்கள் இருக்கின்றனர். ஒருவர் பெயர் நீல்ஸ் போர் (Niels Bohr). மற்றொருவர் பெயர் ஹாரல்டு போர் (Harald Bhor). இருவருள் ஹாரல்டு என்பவர் பெரியவர். இருவரும் உலகமறிந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள். அத்தேசத்தின் தலைநகரான கோபன்ஹேகன் என்னும் ஊரிலுள்ள ஸர்வகலா சாலையில் இருவரும் போதகாசிரியராக இருக்கின்றனர். நீல்ஸ் போர் என்பவர் பௌதிக சாஸ்திரத்தில் அரிய ஆராய்ச்சிகளைச் செய்து நோபல் பரிசு பெற்றவர். ஹாரல்டு போர் பிரபல கணித சாஸ்திரி. அத்துடன் கால்பந்து ஆடுவதிலும் அவர் திறமை வாய்ந்தவர். ஒரு பெரிய சர்வதேசப் போட்டியில் தம்முடைய தேசமாகிய டென்மார்க்கின் கட்சிக்காக ஹாரல்டு 'கோல் கீப்பர்' என்னும் ஸ்தானத்தில் வெகு திறமையுடன் விளையாடித் தம் தேசத்துக்குப் பெரும் புகழைச் சம்பாதித்தார்.

அவ்வருஷம் அவ்விளையாட்டு நடந்த சில நாட்களுள் இளைய சகோதரனான நீல்ஸ் என்பவர் ஒரு நாள் கோபன்ஹேகனில் ஒரு ட்ராம்வண்டியில் போய்க் கொண்டிருந்தார். வசீகரத் தோற்றமுடைய அவருடன், அவ்வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தவன் பேசலுற்றான். ஹாரல்டின் தம்பி இவர் என்பதைமட்டுமே அவன் அறிந்திருந்தானே யொழிய நீல்ஸ், நோபெல் பரிசைப் பெற்றதனால் அத்தேசத்துக்கே விஞ்ஞான உலகில் பெரிய பெயர் ஏற்பட்டிருக்கிறதென்பதை அவன் அறியவில்லை.

இவரை நோக்கி அவன், "பிறந்தால் உங்கள் அண்ணவைப்போல் பிறக்கவேண்டும்! அன்று அவர் என்ன அழகாகக் கோலில் விளையாடினார்! இந்நாட்டின் பெருமைக்கும் புகழுக்கும் தம்மை எவ்வளவு தூரம் இன்றியமையாதவராக ஆக்கிக்கொண்டார்! நம் நாடு முழுவதுமே அவருக்கு வெகுவாகக் கடன்பட்டிருக்கிறது. அவர் அவ்வளவு நன்றாக ஆடியிராவிட்டால், அப்பெரும் பந்தயத்தில் நம் நாட்டுக் கோஷ்டியார் எவ்வாறு ஜயித்திருக்க முடியும்? ஊரெங்கும் அவர் பேச்சாகவே இருக்கிறது"* என்றான்.

நீல்ஸ் இதைக் கேட்டுப் புன்னகை புரிந்தார்.

விஞ்ஞான சாஸ்திரத்தில் அரிய ஆராய்ச்சிகளைச் செய்து நோபெல் பரிசைப் பெறுவது சிரமசாத்தியமான காரியம். இப்புகழ் ஒருவருக்குக் கிடைத்தால் அதனால் அவருடைய சொந்த நாட்டுக்கே ஒரு தனிப் பெருமை ஏற்படும். அத்தகைய நோபல் பரிசைப் பெற்றிருந்த போதிலும், நீல்ஸின் ஆற்றலை டென்மார்க்கின் பாமர ஜனங்களில் ஒருவனை அந்த டிராம் வண்டியோட்டி அறிந்துகொள்ளவில்லை. ஹாரல்டும் கணிதசாஸ்திரத்தில் உயர்ந்த ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறார். அதைப் பற்றியும் அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. கால் பந்து விளையாட்டில் அவருக்கு இருந்த திறமைதான் அவன் மனத்தைக் கவர்ந்தது. அதற்காகத்தான் அவரை அன்று அம்மாதிரி வாயாரப் புகழ்ந்து பேசினான். தேகப்பயிற்சி சம்பந்தமான திறமை, மூளையை உபயோகித்துச் செய்ய வேண்டிய காரியங்களில் காட்டப்படும்

குறிப்பு: *இவ்வரலாறு ஜெர்மனி தேசத்திலுள்ள லீப்ஜிக் (Leipzig) என்னும் ஊரில் உள்ளவரும் நோபெல் பரிசுபெற்ற பிரபல விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாளருமான புரொபசர் ஹேஸன்பர்க் (Heisenberg) என்பவர் 1929-ஆம் வருஷம் இந்த நாட்டுக்கு விஜயம் செய்திருந்தபோது அவரால் நம் நாட்டுப் பிரசித்த சாஸ்திர ஆராய்ச்சியாளரான கே. எஸ். கிருஷ்ணன் (பின்னால் எப். ஆர். எஸ். பதவியும் 'ஸர்' பட்டமும் பெற்றவர்) என்பவருக்குச் சொல்லப்பட்டது. நான் இதை 1933-இல் நண்பர் கிருஷ்ணனிடமிருந்து டாக்காவில் அறிந்தேன்.

ஆற்றல், இவ்விரண்டினுள்ளும் முன் சொன்னதே சாதாரண ஜனங்களுக்கு அதிகக் கவர்ச்சியை உண்டு பண்ணுகிறதென்பது இந்த நிகழ்ச்சியினால் விளங்குகிறது.

என் அநுபவத்திலும் இம்மாதிரி சம்பவங்கள் உண்டு. நான் சென்னை ராஜதானிக் கலாசாலையில் மாணவனாக இருக்கையில், காலேஜில் தேகப்பயிற்சி சம்பந்தமான போட்டிகளிலும் விளையாட்டுகளிலும் தனக்கு ஈடு இணையில்லாமல் எல்லாப் பரிசுகளையும் ஒரு மாணவன் பெற்றுவந்தான். ஆனால் படிப்பில் மட்டும் அவன் நிரக்ஷர குக்ஷி. ஒவ்வொரு வகுப்பிலும் நிதானமாக இரண்டிரண்டு வருஷங்கள் தங்கி வந்தான். அதே சமயத்தில் படிப்பில் வெகு மேதாவியாக விளங்கிப் பின்னர் ஐ. ஸி. எஸ். முதலிய பெரும் பதவிகளை அடையவிருந்த சிலரும் அக்கலாசாலையில் வாசித்து வந்தனர். ஆனால் அவர்களுள் ஒருவன் பெயராவது அதிகமாக அடிபடவில்லை. இவனை மட்டும் எல்லா மாணவர்களும் அறிந்திருந்தனர். படிப்பில் இருக்கும் சூடிகைத்தனத்தைவிடத் தேகப்பயிற்சியிலுள்ள திறமைதான் மேம்பட்டதென எல்லோரும் மதித்ததாக எனக்குத் தோன்றிற்று.

முற்காலத்திலும் தேகப்பயிற்சியும் தேகவலிமையும் இன்றியமையாதவை என்று கருதப்பட்டன என்பதற்குப் போதிய சான்றுகள் புராண இதிகாசங்களில் கிடைக்கின்றன: உதாரணமாக, மகாபாரதத்தில் சாந்திபர்வத்தில் 166-ஆம் அத்தியாயத்தில் பீஷ்மர் யுதிஷ்டிரருக்குச் செய்யும் ஆபத் தர்மம் என்னும் போதனையில் இவ்விஷயம் விளக்கப்பட்டிருக்கிறது. அரசன் எவ்வெவ்வித மனிதர்களின் சேர்க்கையை நாடவேண்டும் என்பதைப்பற்றிச் சொல்லுகையில் பீஷ்மர் 'வியாயாமசீலர்'களின் நட்பு அரசர்களுக்கு அவசியமானது என்று எடுத்துக்காட்டுகிறார். வியாயாமம் என்பது தேகப்பயிற்சி. தேகப் பயிற்சியில் வல்லவர்கள் தாம் வியாயாம சீலர்கள்.

எனவே ஒரு நாட்டில் உதித்த பெரியார்களாகத் தேகப் பயிற்சியிலும் அது சம்பந்தமான துறைகளிலும் பெயர் பெற்றவர்களையும் கருத வேண்டும். நம் நாட்டில் அத்தகைய பெரியார்களுள் லெஃப்டினன்ட் கர்னல் ஸி. கே.

நாயுடு என்பவர் ஒருவர். கிரிக்கட்டு என்னும் ஆட்டத்தில் மிகத் திறமை வாய்ந்தவர். அந்த ஆட்டத்தில் நம் நாட்டுக்கே பெரும் புகழைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கும் சிலருள் அவரும் ஒருவர்.

இவருடைய முழுப்பெயர் கோட்டாரி கங்கையா நாயுடு என்பது. இவர் 31-10-1895-இல் பிறந்தார். இவர் காலத்தில் இவருடைய குடும்பத்தார் மத்திய இந்தியாவிலுள்ள மத்திய மாகாண வாசிகள் ஆய்விட்டார்கள். எனினும் சில தலைமுறைகளுக்கு முன் இவருடைய முன்னோர்கள் சென்னை மாகாணத்தில் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். சென்னைக்கும் இவருக்கும் உள்ள தொடர்பை இவருடைய ஜாதிப்பெயராகிய நாயுடு என்பதே குறிக்கிறது.

இவருக்குக் கிரிக்கெட் என்று சொல்லப்படும் பந்தாட்டத்தில் முதல் முதலில் பரிசயம் ஏற்பட்டது நாகபுரியில் 'பிஷப் கலீஜியேட் ஸ்கூல்' என்னும் பள்ளிக்கூடத்தில் இவர் மாணவராக இருக்கையில்தான். ஆட்டத்தில் கலந்துகொண்ட சில நாட்களிலேயே இவர் தமது பள்ளிக்கூடக் கிரிக்கட்டுக் கோஷ்டியின் தலைவர் (Captain) ஆனார். பின்னர் அங்கேயே 'மோடி கிரிக்கட்டு கிளப்பு' என்னும் சங்கத்தின் 'கிரிக்கட்' கோஷ்டிக்குத் தலைமை வகித்து விளையாடினார்.

பிரசித்தமான ஆட்டத்தில் இவர் கலந்துகொண்டது 1916-இல் தான். அவ்வருஷம் முதல் இவர் இந்நாட்டிலேயே மிகச் சிறந்ததென்று கருதப்படும் 'பம்பாய் குவாட்ராங்குலர்' (பின்னால் இதுவே 'பம்பாய் பென்டாங்குலர்' என்று மாறிற்று) என்னும் போட்டிப் பந்தயத்தில் ஹிந்துக்கள் கோஷ்டியில் ஆடியிருக்கிறார். அப்பந்தயங்களில் கலந்துகொண்ட எல்லோரிலும் இவர்தாம் முதல் முதல் 1000 ஓட்டங்கள் எடுத்தவர். இத்துடன் இவர் சென்னை மாகாணத்தின் சார்பிலுங்கூட ஆடியிருக்கிறார்.

இந்தியக் கிரிக்கட் கோஷ்டிகளுடன் இவர் பல முறை இங்கிலாந்துக்கும் போயிருக்கிறார். முதல் முதலாக இவர் அவ்வாறு போனது 1931-ஆம் வருஷத்தில்.

அவ்வருஷம் இங்கிலாந்தில் இவர் அங்குள்ள 'இந்திய ஜிம்கானு' என்னும் சங்கத்தின் கோஷ்டியாருக்குத் தலைமை வகித்து ஆடி 1000 ஓட்டங்கள் எடுத்தார். அவ்வருஷம் இவர் இங்கிலாந்தில் ஆடப்பட்டு வந்த கிரிக்கட் ஆட்டத்தின் நுட்பங்களை நன்கு அறிந்து கொண்டார். இந்த அநுபவம் அடுத்த வருஷமாகிய 1932-இல் இவர் ஓர் அகில இந்தியக் கிரிக்கட் கோஷ்டியுடன் அந்நாட்டுக்கு மீண்டும் செல்லுகையில் இவருக்கு மிகவும் பயன்பட்டது. இம்முறை அங்கே ஆடப்பட்ட பல போட்டிப் பந்தய ஆட்டங்களில் தலைமை வகிக்கும் பொறுப்பு இவருக்கு ஏற்பட்டது. இதைத் திறமையுடன் நிர்வகித்து அம்முறை இவர் 1842-ஓட்டங்கள் எடுத்தார். 6 தடவை இவர் ஒரே ஆட்டத்தில் 100-க்கு மேற்பட்ட ஓட்டங்கள் எடுத்தார். இவ்வருஷம் இவருடைய ஆட்டத்திலிருந்து இவர் ஓட்டம் எடுப்பதில் மட்டும் திறமை வாய்ந்தவரல்லர்; பந்து எறிவதிலும் சமர்த்தர் என்பது தெரியவந்தது. தாம் எறிந்த பந்துகளால் இம்முறை இவர் 79-பேர்களை ஆட்டத்திலிருந்து வெளியேற்றினார். இதை, கிரிக்கட் பரிபாஷையில் 'விக்கட் எடுப்பது' என்று சொல்லுவார்கள்.

அதற்குப் பின் விஜயநகரம் இளவரசரின் தலைமையில் சிமைக்குச் சென்ற அகில இந்தியக் கிரிக்கட்டுக் கோஷ்டியுடனும் இவர் சிமைக்குப் போய் விளையாடினார்.

பம்பாய் குவாட்ராங்குலர், சென்னையில் பிரதிவருஷமும் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் நடக்கும் பெரும் போட்டிப் பந்தயங்களுள் சில, இவைகளைத் தவிர கில்லிகன் என்பவர் தலைமையில் இந்நாட்டுக்கு வந்த ஆங்கில கிரிக்கட் கோஷ்டி, பின்னர் ஜார்டீன், டென்னிஸன் பிரபு முதலியோர்களின் தலைமையில் இங்கே வந்த ஆங்கிலக் கிரிக்கட்டு கோஷ்டிகள், ஆஸ்திரேலியாவிலிருந்து ரைடர் என்பவர் தலைமையில் இங்கே வந்த கிரிக்கட் கோஷ்டி, இவைகளுக்கெல்லாம் எதிராக ஆடின நம் நாட்டுக் கோஷ்டிகளில் கலந்துகொண்டார். இவைகளுள் பலவற்றுக்குத் தலைமை வகித்தும்

ஆடினார். ஒரே ஆட்டத்தில் ஒரு மூச்சில் 100 ஓட்டங்கள் எடுப்பது கிரிக்கெட்டில் ஒரு பெரிய ஆற்றல். அவ்வாட்டத்தின் பரிபாஷையில் இதை 'ஸென்சரி' (Century) எடுப்பது என்று சொல்லுவார்கள். அம் மாதிரி இவர் இதுவரையில் ஆடிய முக்கியமான ஆட்டங்களில் 100 ஸென்சரிகள் எடுத்திருக்கிறார்.

கிரிக்கட்டு என்னும் ஆட்டத்தில் கலந்துகொள்வோர்கள் மூன்று வழிகளில் சோபிக்கலாம். ஒன்று, பந்தடித்து அதிக ஓட்டங்கள் எடுப்பது; மற்றொன்று, பந்தெறிந்து எதிராளிகளை ஆட்டத்தை விட்டு வெளியேற்றுவது, மூன்றாவது, எதிரிகள் அடிக்கும் பந்துகளைத் தடுத்து அவர்கள் அதிக ஓட்டங்கள் எடுக்காமல் செய்துவிடுவது, அல்லது அடித்த பந்து மேல் நோக்கிக் கிளம்புகையில் அது கீழே விழும் முன்னரே அதைப் பிடித்து, எதிரி ஆட்டக்காரனை ஆட்டத்தினின்றும் வெளியேற்றிவிடுவது. கடைசியாகச் சொன்னதற்கு பீல்டிங் (Fielding) என்று கிரிக்கட் பரிபாஷையில் பெயர். சாதாரணமாக இம்மூன்றில் ஏதாவது ஒன்றிலோ, இரண்டிலோதான் இவ்வாட்டத்தில் கலந்து கொள்பவர்களுள் பெரும்பாலோர் திறமை வாய்ந்திருப்பார்கள். இவர் மட்டும் மூன்று துறைகளிலும் பெயர் வாய்ந்தவர். எனவே ஏதாவது ஒரு போட்டிப் பந்தய ஆட்டத்தில் இவைகளுள் ஒன்றில் தவறினால், மற்ற இரு துறைகளில் இவர் சிறந்து விளங்குவது நிச்சயம். மூன்றிலும் இவர் தவறிவிடுவதென்பது அரிது.

இவர் பந்தடிப்பது இவ்வாட்டத்தின் ரஸிகர்களுக்கு ஒரு தனி மகிழ்ச்சியை அளிக்கும். ஆடுவதில் இவருக்கென்றே ஒரு தனி வழி ஏற்பட்டுவிட்டது. அதை நாயுடு பாணி, 'நாயுடு ஸ்டைல்' என்று சொல்லிப் பாராட்டுவார்கள். இவர் ஆட்டத்துக்குப் போகும்போது இவருடைய நடை, போனபின் அங்கே நிற்கும் தோரணை, பந்தை அடிப்பதில் இவருக்கு இருக்கும் லாகவம், இவையெல்லாம் இவ்வாட்டத்தின் நுட்பங்களை ரஸிக்கக்கூடியவர்களுக்கு அளவில்லாத ஆனந்தத்தை அளிக்கும். பந்தடிப்பதில் பல விதம் உண்டு. வலதுகால்பக்கம் மட்

டையை வீசி அடிப்பது, இடப்பக்கம் அடிப்பது, நடுமையத்தில் அடிப்பது, தலைக்குமேல் மட்டையை வீசிப் பின்னால் பந்தைச் செலுத்துவது, பந்து எறிந்தவன் பக்கமே திருப்பியடிப்பது, இப்படியெல்லாம் பல ரகங்கள். இவைகளுள் பலருக்குச் சில விதமான அடிகள்தாம் வரும். இவருக்கோ எல்லா விதமான அடிகளும் வரும். கில்லிகன் என்பவர் தலைமையில் இந்நாட்டுக்கு வந்த கோஷ்டியுடன் பம்பாயில் ஆடிய ஆட்டத்தில் இவர் பல இடங்களில் தாம் அடிக்கத் தகுந்த ஆற்றல் உடையவர் என்பதை நிரூபித்துக் காட்டினார். அதுவும் அடிப்பதற்குக் கடினமான பந்துகளை எறியக் கூடிய வில்லியம் மாரிஸ் டேட் என்பவரின் பந்துகளைத்தான் அம்மாதிரி விரட்டி விரட்டி அடித்தார். இதை வெகு நாட்கள் வரையில் ஒரு படம் போட்டு விளக்கிக் காட்டிவந்தார்கள்.

'ஸிக்ஸர்' என்னும் ஒருவித அடி இவருக்குச் சர்வ சாதாரணமாக வரும். இதில் அடித்த பந்து விளையாடும் மைதானத்தின் எல்லைக்கு அப்புறம் போய்த்தான் பூமியில் முதல் முதலாக விழும். ஒரு முறை கல்கத்தாவில் ஜார்டின் என்பவர் தலைமையில் இந்த நாட்டுக்கு வந்த ஆங்கிலக் கிரிக்கட் கோஷ்டியாருக்கு எதிராக இவர் ஆடுகையில் இம்மாதிரி இவர் அடித்த ஸிக்ஸரில் பந்து கூட்டத்தில் உட்கார்ந்து ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த என்னுடைய அடித்துடையில் வந்து தாக்கியது. நான்கு நாள் வரையில் வலி ஆறவில்லை. வந்த பந்து அவ்வளவு சூடானது! அன்றிரவு எங்கள் சங்கத்தில் அவருக்கும் அவர் சகாக்களுக்கும் கொடுத்த ஒரு விருந்தில் காரியதரிசி என்னை அவருக்கு அறிமுகப்படுத்துகையில் நான், "இன்று நீங்கள் அடித்த 'ஸிக்ஸரை' (என் அடித்துடையைக் காட்டி) இங்கே பிடித்தேன்" என்றேன். நான் எதைக் குறித்தேன் என்பதை உணர்ந்து கொண்ட அவர் உடனே, "அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்" என்றார். "பரவாயில்லை; உங்கள் பந்தைப் பிடிக்க நேர்ந்தது எனக்கு ஒரு பெருமையே" என்று நான் விடையளித்தபோது அவர் புன்னகை புரிந்தார்.

எதிரிகள் அடிக்கும் பந்துகளைத் தடுப்பதிலும் பிடிப்பதிலும் இவருக்கு நிகர் இவரேதான். சில சமயங்களில்

தரையில் படுத்தவண்ணம் ஒரே கையினால் - அதுவும் 2, 3 விரல்களால் மட்டுமே - தரையோடு தரையாக வரும் பந்தையும் எளிதில் பிடித்துவிடுவார். பந்தடித்தவர் அடித்ததுதான் தாமதமாக இருக்கும். இவர் பிடித்ததை ஒருவரும் சரியாகப் பார்க்க முடியாமல் இருக்கும். அடித்தவர் ஆட்டத்திலிருந்து வெளியேறுவதும், ஆட்டத்தைப் பார்க்கும் கூட்டத்திலிருந்து எழும் பெருத்த கரகோஷமுமே தெரியவரும். அவ்வளவு துரிதமாகக் காரியத்தைச் செய்து முடித்துவிடுவார். இவர் பந்தடிப்பதிலும் இதே துரிதம். பந்து எறியப்படுவதுதான் நமக்குத் தெரியும். இவர் அதை எப்படி அடித்தார், எப்போது அடித்தார் என்பது புலப்படாது. பந்துமட்டும் மைதான எல்லைக்கு அப்புறம் போய் நிற்கும். இந்த வேகத்தைக் கண்டோர்க்குத் தாடகை வதத்தில் கம்பர் ராமனின் துரிதப் போர்ச் செயலை வர்ணிக்கும் அடியில்கண்ட செய்யுள் ஞாபகம் வரும்:

"மாலும் அக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததுங் கண்டிலர்
காலனைப்பறித் தக்கடி யாள்விட்ட
சூல மற்றன துண்டங்கள் கண்டனர்."

இவருடைய செயல்களில் அவ்வளவு லாகவம், அவ்வளவு வேகம்!

இவருடைய துரிதமான ஆட்டத்துக்குத் திருஷ்டாந்தமாக அடியில்கண்ட நிகழ்ச்சியைக் குறிக்கலாம். சென்னையில் வருஷாந்த இந்திய ஐரோப்பியப் போட்டிப்பந்தய ஆட்டத்துக்கு இவர் ஒருமுறை வந்திருந்தார். அன்று உள்ளூர் ஆட்டக்காரர் ஒருவர் - பிரபல ஆட்டக்காரர் என்று பெயர் வாங்கியவர் - இவருக்கு முன்பே வெகு நாழிகையாக ஆடி, இவருக்குப் பின்பும் நெடுநேரம் இருந்து நூறு ஓட்டங்கள் எடுத்தார். அவருக்கு அப்புறம் ஆடத்தொடங்கிய இவர் சிறிது நேரத்தில் 100 ஓட்டங்களுக்குமேல் எடுத்துவிட்டு அவருக்கு நெடுநேரம் முன்பே ஆட்டத்திலிருந்து வெளியேறிவிட்டார். அவர் ஒரு நாள் முழுவதும் உழைத்துச் செய்த வேலையை இவர் சிறிது நேரத்தில் முடித்துவிட்டார்!

இவருடைய தலைமை இவர் கோஷ்டியிலுள்ள ஏனைய ஆட்டக்காரர்களுக்கு உத்ஸாகம் அளிப்பதுடன் ஆட்டத்தைப் பார்க்க வந்திருக்கும் கூட்டத்தில் உள்ளோரின் மனத்தையும் கொள்ளை கொண்டுவிடும். இவர் பந்தடிப்பதில் தவறி இவருடைய ஸிக்ஸர்களையும் பௌண்டரிகளையும் காண ஆவலுடன் கூடியிருக்கும் ஜனத்திரளை ஏமாற்றிவிடலாம். என்றாலும் இவர் ஆட்டத்தில் தோன்றித் தம் கட்சியாரின் ஆட்டப் போக்கைத் திட்டஞ்செய்து நடத்துவதே அவர்களுக்குத் திருப்தி அளித்துவிடும். நாயுடு ஆட்டத்தில் கலந்து கொள்ளுகிறார் என்று தெரிந்தாலே போதும்; அவ்வாட்டத்துக்கு அபரிமிதமான கூட்டம் கூடிவிடுவதும் ஏராளமான பணம் வசூலாவதும் நிச்சயம். கூட்டங்களின் மனத்தை இவர் கொள்ளைகொண்டு விடுகிறார் என்று சொன்னால் அது முற்றும் பொருந்தும்.

கிரிக்கட் கோஷ்டிகளுக்குத் தலைமை வகிப்பதில் இவருக்கு இணையில்லை என்றே சொல்ல வேண்டும். தலைமை வகிக்கையில் தம் கோஷ்டியிலுள்ளவர்கள் எப்படி நடந்துகொண்டால் ஆட்டம் நன்றாக அமையும் என்பதிலேயே இவர் கருத்தாக இருப்பார். ஒருமுறை கல்கத்தாவில் ஆடப்பட்ட ஒரு முக்கியமான போட்டிப்பந்தய ஆட்டத்தில் இவர் தலைமை வகித்தார். மொத்தம் நான்கு நாட்கள் ஆட்டம். முதல் நாள் ஆட்டம் முடிந்தது. நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. இவருடைய கட்சி தோற்குந்தறுவாயில் இருந்தது. அன்றிரவு இவருக்கும் இவருடைய கோஷ்டியிலுள்ள சிலருக்கும் (முக்கியமாக அதிலுள்ள தென்னிந்தியருக்கும்) எங்கள் சங்கத்தில் ஒரு சிற்றுண்டி அளிக்கப்பட்டது. அப்போது இவர் சீக்கிரம் தம் விடுதிக்குப் போக விரும்பினார். அதற்குக் காரணம் என்னவென்பதையும் அடியிற்கண்டவாறு விளக்கினார்.

"நாங்கள் இரவில் அதிகமாகச் சாப்பிடக்கூடாது. வெகுநேரம் வரையில் கண்விழிக்கக்கூடாது. $9\frac{1}{2}$, 10 மணிக்கே படுத்துக்கொண்டுவிட வேண்டும். இல்லாவிட்டால் நாளை நாங்கள் நன்றாக ஆடமுடியாது" என்று

சொல்லித் தம் சகாக்களை அழைத்துக்கொண்டு போய் விட்டார்.

அன்று நடந்த சிற்றுண்டி விருந்திலிருந்து இவர் நன்றாகப் பேச வல்லவர் என்பதும் ஹிந்து மத புராண, இதிகாசங்களில் இவருக்குப் பரிசயம் உண்டென்பதும் விளங்கின. நிலைமையில் நெருக்கடியைக் குறித்து இவர் மகாபாரதத்திலிருக்கும் கதை ஒன்றை எடுத்துச் சொன்னார். அதேயாதிரியான ஒரு நெருக்கடியில் துரோணாசாரியாரை அவருடைய சிஷ்யன் ஒருவன் காப்பாற்றிய கதை அது. இக்கதையை எடுத்துரைத்து அம்மாதிரியே தமக்கும் மறுநாள் ஆட்டத்தில் ஒரு சிஷ்யன் தோன்றுவான் என்று சொன்னார். இவர் எதிர்பார்த்த வண்ணமே முதல் நாள் மண்டையில் அடிபட்ட ஒருவர் மறுநாள் நன்றாகி, ஆவேசம் வந்தாற்போல் ஆடி, அதன் பயனாக இவருடைய கோஷ்டியைத் தோல்வியிலிருந்து தப்புவித்தார்.

எந்தத் துறையிலும் திறமை வாய்ந்தவனுக்கு அழகு, அத்துறையில் தனக்குப் பிறகு தன்னைப்போல் பிரகாசிக்கக்கூடிய சிஷ்யர்களை உண்டுபண்ணிவிடுதல். இதிலும் இவர் முனைந்திருக்கிறார். இவருடைய இளைய சகோதரரான ஸி. எஸ். நாயுடு என்பவருக்கும், முஷ்டாக் அலி என்னும் ஒருவருக்கும் தம்மைப்போலவே ஆடக் கற்றுக் கொடுத்திருக்கிறார். அவர்களும் குருவின் பெயரைக் கெடுக்காமல் நன்றாக ஆடிவருகிறார்கள்.

தோற்றத்தில் இவர் கம்பீரமான உயரமுடையவர். இவர் கலந்துகொள்ளும் பந்தயங்களில், இவரை இவருடைய உயரத்திலிருந்தே வெகு எளிதில் கண்டுபிடித்து விடலாம். மெலிந்த தேகம், நிறம் கறுப்புத்தான்; ஆனால் முகத்தில் நல்ல பொலிவு.

இவர் இந்தூர் என்னும் மகாராஷ்டிர சம்ஸ்தானத்திலுள்ள ராணுவத்தில் ஓர் அதிகாரியாக இருக்கிறார். அதில் முதலில் கேப்டனாக இருந்தார். நாளடைவில் மேஜர் என்னும் பதவியை அடைந்து, இப்போது லெப்டினன்ட் கர்னல் என்னும் பதவியை வகிக்கிறார். உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலிருந்தும் சிறந்த

ஆட்டக்காரர்களைப் பொறுக்கி எடுத்து ஒரு கிரிக்கட்டுக் கோஷ்டியைத் திரட்டினால் அதில் இவருக்குக் கட்டாயம் இடம் உண்டு என்பது பலருடைய கொள்கை. இவரை *"இந்திய பிராட்மன்" என்றும் சொல்லுவதுண்டு.

*பிராட்மன் என்னும் ஆஸ்திரேலிய ஆட்டக்காரர் உலகத்திலேயே இதுவரையில் எல்லோரையும்விடச் சிறந்த கிரிக்கட் ஆட்டக்காரர் என்று பெயர் பெற்றிருக்கிறார்.

10

தவக்கோலத்தில் ஒரு தமிழ்க்கடல்

திருக்கோவலூர் என்னும் நடுநாட்டுத் திருப்பதியை அடுத்துத் தென்பெண்ணை நதிக்கரையில் உள்ள கீழூர் என்னும் கிராமத்தில் வீரட்டேசுவரர் கோயிலின் முன் புறத்திலுள்ள இடைவெளியில் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் பூப்பந்து ஆடும் வட்டம் ஒன்று அமைக்கப் பட்டது. திருக்கோவலூரில் உள்ள உயர்தரப் பாட சாலையில் கல்வி பயிலும் மாணவர்களும், அப் பள்ளியின் உபாத்தியாயர்களும், வேறு சில பிரமுகர்களும் கூடி, காலை, மாலை வேளைகளில் பொழுது போக்குக்காகவும், தேகப்பயிற்சிக்காகவும் அங்கே சென்று சில மணி நேரங்கள் பூப்பந்தாட்டம் ஆடுவது உண்டு. அதில் நானும் கலந்துகொள்வேன். அவ்வழியே செல்லும் பாதசாரிகள் ஆட்டத்தைப் பார்க்கச் சற்றுத் தங்கிவிட்டுச் செல்வது வழக்கமாதலால் வட்டத்தைச் சுற்றி ஜனத்திரள் குழுமியிருத்தல் சகஜம். ஒரு நாள் மாலையில் அங்கிருக்கும் கூட்டமெல்லாம் ஒருங்கே திரண்டு பக்கத்திலுள்ள அம்மன் சந்நிதியின் எதிர்ப்பக்கத்திலுள்ள இடைவெளியில் நிற்பதைக் கண்டேன். ஆட்டத்தில் கலந்து கொள்பவர்கள் கூட அன்று தங்கள் ஆட்டத்தில் உத்ஸாகம் இழந்து, பக்கத்திலுள்ள கூட்டத்தில் கலந்து கொண்டனர். காரணம் என்னவென்று அருகில் உள்ள ஒருவரை விசாரித்தேன். அந்தப் பிராந்தியத்தில் சொற்பொழிவாற்றலில் பேர்போன ஒரு பிரமுகரின் பெயரைக் குறிப்பிட்டு, 'அவர் பிரசங்கம் இன்று என்பது உங்களுக்குத் தெரியாதா? அதற்கு இக் கூட்டம் மிகச் சிறியதாயிற்றே' என்று அவர் விடையளித்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்டு நானும் சொற்பொழிவைக் கேட்டேன். வியந்தேன். ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினேன். அவர் சொற்களை எழில் பெறும்படி

அடுக்குவது பிரசங்கத்தின் விசேஷ அம்சமாக அமைந்திருந்தது.

"என்ன அழகாகப் பேசுகிறார்!" என்று என்னையும் மீறி வாய்விட்டும் கூறிவிட்டேன். உடனிருந்த ஒருவர் இதைக் கேட்டு, "இவருடைய குருவின் பிரசங்கத்தைக் கேட்டால் இன்னும் ஆனந்தமாக இருக்கும்" என்றார்.

"இவருடைய குரு யார்? அவர் பேச்சை எங்கே கேட்கலாம்?" என்று அவரைக் கேட்டேன். எதிரே வீதிக்கு அப்பால் உள்ள சத்திரம் போன்ற ஒரு விடுதியைச் சுட்டிக்காட்டி, "அந்த மடத்துக்குப் போங்கள். இன்றுகூட மாலை 6-30 மணிக்கு அங்கே அவர் பேசுவார்" என்றார்.

அவருக்கு வந்தனம் அளித்துவிட்டு அவர் குறிப்பிட்ட நேரத்துக்கு அந்த மடத்துக்குச் சென்றேன். பொறுக்கினாற்போல் பத்துப் பேர் அங்கே இருந்தனர். அவர்களுக்கிடையே சாந்தி ஒளி திகழும் புன்முறுவல் கொண்ட முகத்துடன் தவக்கோலம் பூண்ட ஒரு பெரியார் வீற்றிருந்தார்.

அன்று சீதா கல்யாணம் என்னும் விஷயத்தைப் பற்றி அவர் பேசினார். கடல்மடை திறந்ததுபோல் வெளி வந்த அவர் பேச்சு ஆழ்ந்த கருத்துக்கள் பொதிந்ததாக இருந்தது. சொல் ஒவ்வொன்றும் முற்றும் பொருத்தமுள்ளதாக இருந்தது. சொற்பொழிவைக் கேட்டு இன்ப வெள்ளத்தில ஆழ்ந்து அந்த மாலை நல்ல மாலையாகக் கழிந்ததைக் குறித்துச் சந்தோஷமுற்றவனாக வீடு திரும்பினேன்.

இச் சம்பவத்தில் முதலில் பேசியதாகக் குறிப்பிட்ட பெரியார்தாம் திருக்கோவலூருக்குப் பக்கத்திலும் ஆற்றுக்கு அக்கரையில் உள்ளதுமான மணம்பூண்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற ம. ரா. குமாரசாமிபிள்ளை என்பவர். இவருடைய குருதான் திருக்கோவலூர் ஆதீனத்தைச் சார்ந்த திருப்பாதிரிப்புலியூர் மடத்தின் ஐந்தாம் பட்டத்து ஞானியார் சுவாமிகள். குருவின் புகழைத் திறம்பட நாடெங்கும் பரப்பிய பெருமை வாய்ந்த சீடர்தான் அந்தப் பிரசங்கி.

இந்த ஞானியார் சுவாமிகள் தலைமை வகித்த மடம் திருக்கோவலூரைச் சேர்ந்த ஒரு சைவ சித்தாந்த ஆதீனம். அதைச் சேர்ந்த கிளை மடங்களுள் ஒன்றும் திருப்பாதிரிப்புலியூரில் உள்ளதும் பொதுஜனங்களால் ஞானியார் மடம் என்று அழைக்கப்படுவதுமான மடத்தில் தான் இவ்வாதீனகர்த்தர்கள் பெரும்பாலும் இருந்து வந்தனர். இம்மடத்தின் வழிமுறை பின்வருமாறு:

பட்டத்தாரின் எண்	துறவறப் பெயர்	பட்டத்தில் ஆண்டுகள்	அடக்கஞ்செய்யப் பட்ட இடம்
1.	ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்	97 ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தார்	திருக்கோவலூர்
2.	சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்-I	63 ஆண்டுகள் பட்டத்தில் இருந்தார்	திருப்பாதிரிப் புலியூர்
3.	சிவசண்முக சங்கண வசவ மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்	16 ,,	,,
4.	சிவசண்முக பரசிவ மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்	41 ,,	,,
5.	சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்-II	53 ,,	திருப்பாதிரிப் புலியூர் (இவர்தாம் இக் கட்டுரையில் சித்திரிக்கப்பட்டிருக்கும் பெரியார்.)
6.	சிவசண்முக சத்திய ஞான சிவாசாரிய சுவாமிகள்	2-2-1942 முதல் பட்டத்தில் வீற்றிருக்கிறார்.	

ஐந்தாம் பட்டத்தில் வீற்றிருந்து திறம்பட இவ்வாதீனத்தை நிர்வகித்த ஞானியார் சுவாமிகள் பூர்வாசிரமத்தில் பழநி என்ற பெயர் பூண்டிருந்தார். அவருடைய தந்தையார் அண்ணாமலை ஐயர் என்பவர். வீரசைவ மரபைச் சேர்ந்தவர். அப் பிரிவினருக்கு விவாகம் முதலிய சடங்குகளைச் செய்விக்

கும் புரோகிதப் பிரிவைச் சேர்ந்தவர். பார்வதி அம்மையார் என்பவர் அவருடைய வாழ்க்கைத் துணைவி. இவ்விருவருக்கும் சோழநாட்டிலுள்ள திருநாகேசுவரம் என்னும் ஸ்தலத்தில் 17-5-1873-இல் பிறந்தவர்தாம் நம் ஞானியார் சுவாமிகள். இவருடைய பெற்றோர்கள் நான்காம் பட்டத்துச் சுவாமிகளின் உறவினராதலின், அவ்வடிகளின் விருப்பத்துக்கு இணங்க இக் குழந்தைக்கு ஆறு மாதப்பிராயம் முதற்கொண்டே அவர்கள் குழந்தையுடன் திருப்பாதிரிப்புலியூர் மடத்திலேயே வசித்து வந்தனர். ஆதலால் நம் ஞானியர் சுவாமிகள் தமது இளம்பிராயத்தில் அவருக்கு முன்பு பட்டத்திலிருந்த பெரியாரின் கண்காணிப்பிலேயே வளர்ந்து வந்தார்.

தம் இளமைப் பருவத்தில் இவர் முதல் முதலில் தெலுங்கு மொழியைப் பயின்றார். அம் மொழியை அவருக்குப் போதித்த ஆசிரியர் சென்னகேசவலு நாயுடு என்பவர். அதற்குப் பின்னர் பாடசாலை ஒன்றில் சேர்ந்து ஆங்கிலம் தமிழ் இவ்விரு மொழிகளையும் கற்றார். பக்கத்தில் மஞ்சக்குப்பத்திலுள்ள அர்ச்ச ஜோஸெப் பிராஞ்சு ஹைஸ்கூலில் சேர்ந்து உயர்தரக் கல்வி பயின்றார். மேலும் தமிழ்மொழியைத் தெய்வசிகாமணி ஐயர் என்பவரிடமும், வடமொழியைக் கோவிந்தாசாரியார் என்பவரிடமும் பயின்று வந்தார். இடையிடையே நான்காம் பட்டத்து ஆதீனகர்த்தரிடம் ஆதீன சம்பந்தமான நூல்களையும் வீரசைவ மரபுக்கென அமைந்த சம்பிரதாய நூல்களையும் கற்று வந்தார். மேற்கூறிய ஆசிரியர்களோடு நிற்காமல், தொடர்ந்து தமிழை சி. மு. சாமிநாதையர் என்பவரிடமும், வடமொழியை ராமநாத சாஸ்திரிகள் என்பவரிடமும் பயின்றனர்.

கி. பி. 1889-ஆம் ஆண்டில் தம் பதினேழாம் பிராயத்தில் மெட்ரிகுலேஷனுக்கு ஒரு வகுப்புக்குக் கீழ் வகுப்பில் கல்வி பயின்றுவருகையில், அவ்வாண்டு நவம்பர் மீ 20-ஆம் தேதியில் இவர் பட்டத்துக்கு வந்த பின்பும் தம் கல்வியைத் தொடர்ந்து பயின்று வந்தார். அப்போது இவருக்குக் கல்வி போதித்தவர் மேற்கூறிய சி. மு. சாமிநாதையரும் ராமநாத சாஸ்திரியுமாவர்.

மொழிநூல்கள் கற்கும்போதே இவர் இசைத் தமிழையும், இசைக்கருவிகளில் ஒன்றாகிய பிடில் என்னும் கருவியையும் பயின்றார். நாளடைவில் அப் பயிற்சி மடாதிபதியாகிய தம் நிலைக்குப் பொருந்தாது என்று கருதி அதை நிறுத்திக் கொண்டார்.

கூடிய சீக்கிரத்தில் தமிழில் யாப்பிலக்கணத்தைக் கற்றுச் செய்யுள் இயற்றும் ஆற்றலை அடைந்தார். இவருக்குத் தமிழ் கற்றுக்கொடுத்த சாமிநாதையர் என்பவர் சொற்பொழிவாற்றும் தன்மை வாய்ந்தவராதலாலும், தமிழ் போதிப்பதில் தேர்ந்தவராதலாலும், பிற்காலத்தில் இவ்வாற்றல்கள் நம் அடிகளாரின்பால் செம்மையாகத் திகழ்ந்து விளங்கின.

ஐயரிடம் இவர் பாடங்கற்ற நாட்களில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று இங்கே குறிக்கத்தக்கது. ஐயர் ஒவ்வொரு நாளும் பாடம் முடிந்தவுடன் தம் வீடு செல்லு முன் ஒரு செய்யுள் எழுதி, தாம் மறுநாள் வருமுன் அதற்குச் சீர், தளை பிரித்து, அலகிட்டு, இலக்கண விசேடங்களையும் எழுதிவைக்கும்படி சொல்லிவிட்டுப் போவாராம். ஒரு நாள் ஐயர் வழக்கம்போல் பின்வரும் வெண்பாவை எழுதி வைத்துவிட்டுச் சென்றார்.

“நற்பா டலிபுரத்து நாதனே நாயினேன்
பொற்பாம் நினதடியைப் போற்றினேன்-தற்போது
வேண்டுஞ் செலவுக்கு வெண்பொற்கா சுப்பத்து
ஈண்டு தருக விரைந்து.”

ஆசிரியர் சென்றவுடன் அடிகள் புத்தகத்தைப் பிரித்துச் செய்யுளைக் கண்ணுற்றார். சீர் தளை பிரித்தல், அலகிடுதல், இலக்கணஞ்செப்பல் முதலியவற்றை முடித்து எழுதி வைத்துக்கொண்டார். அத்துடன் நிற்காமல், அச் செய்யுளால் ஆசிரியர் வெளியிட்ட கருத்தையும் அறிந்து கொண்டு ஒரு பத்து ரூபாய் நோட்டையும் தம் விடையுடன் சேர்த்து வைத்தார்.

ஐயர் அடுத்த நாள் அதைப் பார்க்கையில் அவ் விளம் வயசிலேயே அடிகளிடம் தோன்றிய பெருந்தன்மையைக் குறித்து ஆனந்தமடைந்து, அடிகளைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்.

''நான்பாட்டுக்கு எழுதிவைத்ததற்குப் பொருள் கொடுக்கிறீரே?''

அதற்கு அடிகள் சமத்காரமாய், ''நான் பாட்டுக்குத் தான் பொருள் தந்தேன்'' என்று பதிலளித்தார். ஆசிரியர், ''என் மனத்துக்குத் தோன்றியபடி'' என்ற பொருளில் ''பாட்டுக்கு'' என்ற சொல்லை அமைக்க, அடிகள் அதே சொல்லை, ''தங்கள் பாடலுக்காகத்தான்'' என்னும் பொருள் கொடுக்கும்படி தம் விடையில் உபயோகித்து, அதன்மூலம் தம் மொழியில் ஒரு சிலேடையையும் தோன்றச் செய்தார். இதைக் கண்டு ஆசிரியர் உளம் பூரித்தார்!

இவ்வாசிரியர் சிறிது காலம் கழித்து உயிர்துறக்கையில், அவர் பிரிவால் அடிகள் மிகவும் வருந்தினர். அவரிடம் தமக்கிருந்த பக்தியை, அம்மடாலயத்திலுள்ள புத்தகசாலைக்கு, 'சுவாமிநாத புத்தகசாலை'' என்று பெயரிட்டும் அவ்வாசிரியரின் குமாரரை பி. ஏ. வரையில் தம் செலவில் படிக்கவைத்தும், அவர்கள் குடும்பச் செலவுக்கு வேண்டிய பொருள்களை வருஷந்தோறும் கொடுத்து உதவியும் காட்டினர்.

இம்மாதிரி நம் அடிகள் கல்வி பயின்றது, தெலுங்கை நான்கு ஆண்டுகளும், ஆங்கிலத்தை ஏழு ஆண்டுகளும், வடமொழியையும் தமிழையும் பதினைந்து ஆண்டுகளும் ஆகும்.

அடிகளாரை ஒரு முறை தரிசித்தாலும், அவருடைய தோற்றப் பொலிவை எந்நாளும் மறக்க முடியாது. பிறர் எண்ணத்தைக் கவரக்கூடிய அவ்வளவு விசேஷ அம்சங்கள் அவருடைய தோற்றத்தில் உண்டு. அடியார்களின் அன்பர்கள் இவருடைய தோற்றக் கவர்ச்சியைச் செய்யுள் உருவில் கொடுத்திருக்கும் வர்ணனைகளுள் சில வருமாறு :

''அன்பொழுகு கண்ணும்
அருளொழுகு நன்னெஞ்சும்''

''திப்பியநீ றணியுருவும்
திருவொழுகு மிளைவிழியும்''

"எழிலுறு திருமுகத்தை!...இயலருள் ஒழுகுங் கண்ணை!...இளநகை யொளிர்செவ் வாயை!"

"திருமணக்கும் முகமலரும் சிவமணக்கும் இன்சொல்லும், உருமணக்கும் திருநீறும் ஒளிமணக்கும் கண்டிகையும், அருள்மணக்கும் திருநோக்கும்..."

ஞானியார் சுவாமிகளின் மேனியின் நிறம் கறுத்த மாநிறம் என்றாலும் அவருடைய திருவதனத்தில் சதா ஒரு புன்னகை படர்ந்திருக்கும். நெற்றியைத் திருநீறு அலங்கரித்தவண்ணம் இருக்கும். செவிகளில் தவசிகளின் கோலச் சின்னங்களில் ஒன்றாகிய மகர குண்டலங்கள் தொங்கும். ஆழ்ந்த கருத்தும் தெளிந்த ஒளியும் பொருந்திய கண்கள். மார்பில் ருத்திராக்ஷ வடங்களும் சிவலிங்கமும். ஒரு முறையே காணினும் மறக்கவொண்ணாத இத்தோற்றப் பொலிவை ஓர் அன்பர் அடியில் கண்டவாறு வருணித்திருக்கிறார்:

> "முருகன் சேவடி வருடியுருகும் ஈரநெஞ்சும், அவன் புகழ் பேசி இனிக்கும் நன்னாவும், தண்மைபொழியும் செவ்விய நோக்கும், வெண்ணீறு துதையும் நெற்றியும், மாணிக்கக் குழை பிறங்கும் செவியும், பொன்னொளிரும் மணிமார்பும், கருணைக்கதிர் விரிக்குந் திருமேனியும், 'சண்முகா, சண்முகா' என்று நீறளிக்கும் நீண்ட கையும் கொண்ட அடிகளின் திருக்கோலக்கப் பொலிவு, என் உள்ளத்தில் ஓவியமெனப் படிந்து நிற்கிறது."

பட்டத்துக்கு வந்த பின்பு இவர் ஆற்றிய முதல் தொண்டு தமிழ்மொழியின் உண்மையான உருவத்தைப் பிறருக்குத் தெளிவாக எடுத்துக்காட்டி அவர்களையும் அதைச் சரியான முறையில் பேசவும் எழுதவும் செய்ததே ஆகும். சைவத்துக்காக அவர் புரிந்த அரிய பணிகள் கூட இதற்கு அடுத்தபடிதான்.

தமிழில் உண்மையான ஆசையுள்ள இவர்தாம் மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டதற்குக் காரணபூதமாயிருந்தார் என்பதில் ஒருவித வியப்பும் இல்லை.

இவர் அச்சங்கத்தைத் தோற்றுவித்தது ஒரு ரஸமான வரலாறு. அது பின்வருமாறு:

பாலவநத்தம் ஜமீன்தாரரான பாண்டித்துரைத் தேவர் என்பவர் 1900-ஆம் வருஷத்தில் திருப்பாதிரிப்புலியூருக்கு வர நேர்ந்தது. அங்குள்ள சிவலிங்கத்தைத் தரிசனம் செய்தவுடன் அவர் ஞானியாரின் மடத்துக்கும் விஜயஞ்செய்து அடிகளை வணங்கினார். அப்போது அடிகள், "தமிழின் தற்கால நிலை" என்னும் விஷயத்தைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தின் இறுதியில் முச்சங்கங்கள் மூலம் தமிழ் வளர்ந்த மதுரையில் தற்போதும் ஒரு தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தித் தமிழைப் பரப்ப அதை ஒரு கருவியாக்குதல் ஒரு நல்ல முயற்சியாகும் என்று சொன்னார்.

சொற்பொழிவு முடிந்ததும், அதற்கு அந்த ஜமீன்தார் ஒரு முடிவுரை கூற நேர்ந்தது. அதில் தாமும் தம் சகோதரர் ராமநாதபுரம் ஜமீன்தார் பாஸ்கர சேதுபதியவர்களும் சேர்ந்து அடிகள் கோரியபடி மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கத்தை ஸ்தாபித்துத் தருவதாக வாக்களித்தார். இதன் விளைவாக 24-5-1909-இல் மதுரையில் ஏற்பட்டதுதான் இப்போது அங்கே நன்கு நடத்தப்பட்டு வரும் மதுரைத் தமிழ்ச் சங்கம் என்பது. அத்துடன் நிற்காமல் பாஸ்கர சேதுபதியவர்கள் அச்சங்கத்தின் துணை ஸ்தாபனமாக சேதுபதி கலாசாலை என்னும் ஒரு தமிழ்க் கலாசாலையையும் நிறுவினார். அச்சங்கத்தின் பெயரால் செந்தமிழ் என்னும் ஒரு மாதப்பத்திரிகையையும் வெளிக்கொணர ஏற்பாடு செய்தனர்.

ஞானியார் சுவாமிகள் மாணவர்களுக்குத் தமிழ்ப் பாடம் சொல்லிக்கொடுக்கும் முறையே அலாதி. பிறர் பாடம் சொல்லும் வழியில் செய்யுள் ஒரு முறையே கூறப்பட்டு அத்துடன் விட்டு விடப்படும். செய்யுளின் முதலடியே முதல் முதலாகக் கூறப்படும். ஆனால் ஞானியாரின் பக்தாவில் ஒவ்வொரு புதுப்பொருள் எடுத்து விளக்கப்படும்போதும் செய்யுளும் ஒருமுறை உரைக்கப்படும். முதல்முதலில் செய்யுளில் உள்ள பயனிலையைத் தேடித் தருவார். பின்னர் அதன் எழுவாயையும் செயப்படு

பொருளையும் எடுத்துக் கூறுவார். அதற்கப்புறம் செய்யுளின் கருத்து முழுவதையும் விளக்குவார். இதனால் செய்யுளின இலக்கண அமைப்பும், விசேஷமும், கருத்தும் கேட்போர் மனத்தில் ஆழப் பதியும். உள்ளங்கை நெல்லிக்கனிபோலும், ஐயந்திரிபு அறவும் சொல்லிக்கொடுக்கும் வழி அமைந்திருத்தலால், ஒரு முறையே பாடங் கேட்டிருந்தும், கேட்டோர் மனத்தில் செய்யுளின் பிண்டம், பொழிப்புரை, பதவுரை, மேற்கோள்கள் முதலியவை மறக்க முடியாதவண்ணம் பதிந்துவிடும்.

ஞானியார் சுவாமிகள் பாடம் சொல்லிக்கொண்டிருக்கையில் அயலார் எவரேனும் உள்ளே வந்தால் வந்தவர் நலனைக் கருதி, ஏற்கனவே நடந்த பாகத்தை மீண்டும் ஒரு முறை தெளிவாக எடுத்து உரைத்த பின்னரே மேற்கொண்ட பாகத்தைத் தொடர்ந்து நடத்துவார். அதனால் வந்தவரும் பாடத்தில் ஊக்கமும் உத்ஸாகமும் கொண்டு தாமும் அம்மாணவருள் ஒருவராய் விடுவார்.

பாடஞ்சொல்லும்போது கேட்போருள் எவருக்கேனும் சந்தேகங்கள் தோன்றின், அவைகளை அம்மாணவரின் முகத்தோற்றத்திலிருந்தே அறிந்துகொண்டு, எளிதில் நீக்குவார். அவர் பாடஞ்சொல்லும் முறையில் இது ஒரு விசேஷ அம்சமாக அமைந்திருந்தது.

பாடஞ்சொல்லுகையிலும், சொற்பொழிவாற்றுகையிலும் நுட்பமான விசேஷார்த்தங்கள் பல இவரிடத்திலிருந்து வெளிவரும். கேட்போர் ஏற்கனவே அந்தச் செய்யுளை அறிந்திருந்தும், அதுகாறும் அந்த நுட்பப் பொருள் தங்களுக்குப் புலப்படவில்லையே என்று எண்ணி வியந்துகொள்வார்கள். அடியிற்கண்ட சம்பவத்தை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம் :

ராமாயணவிஷயம் ஒன்றைப்பற்றிப் பேசிய அறிஞர் ஒருவர் ராமபிரான் ஏகபத்தினி விரதம் கொண்டவர் என்று கூறி அதற்கு மேற்கோளாகப் பிராட்டியார் வாக்காகக் கம்பர் கொடுத்திருக்கும்,

“வந்தெனைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிறவிக்கிரு மாதரைச்

சிந்தையா லுந்தொடே னென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்''

என்னும் சுந்தரகாண்டச் செய்யுளைச் சொல்லி, அதில் வரும், ''இந்த...தொடேன்'' எனனும் அடிகளுக்கு, ''தம் மனைவியைத் தவிர்த்து வேறு ஒரு ஸ்திரீயையும் நினைக்கவும் மாட்டேன்'' என்று ராமர் சொன்னதாக எடுத்து விளக்கினார். பிரசங்கம் முடிந்தது. அதற்குத் தலைமை வகித்த ஞானியார் சுவாமிகள் தம் முடிவுரையில் அடியில் கண்டவாறு அதே செய்யுளுக்கு வியாக்கியானஞ்செய்தார்:

''ராமபிரான் கடவுளின் அவதாரம். ஆகையால் அவரிடம் எவ்விதக் குற்றத்தையும் ஏற்றுவது தவறு. எனவே பிற ஸ்திரீ சிந்தனை என்பது இந்த அடிகளுக்குப் பொருளாக இருக்காது. ஆதலால் இதற்கு வேறு பொருள் கட்டாயம் இருக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு உபாசனைக்கடவுளுப் மூன்றுவித சக்தி அம்சங்கள் வாய்ந்தது என்பது நம் மதத்தின் கொள்கை. அச்சக்திகள் இச்சை, கிரியை, ஞானம் என்பன. இவை விநாயகருக்கு, சித்தி, புத்தி, வல்லபை என்றும், முருகக்கடவுளுக்கு வள்ளி, தெய்வயானை, வேல் என்றும், சிவபிரானுக்கு, கங்கை, பார்வதி, பராசக்தி என்றும், பிரம்மாவுக்கு, காயத்திரி, சாவித்திரி, ஸரஸ்வதி என்றும் அமைந்திருக்கின்றன. அதுபோலவே, மகாவிஷ்ணுவுக்கும் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என்று மூன்று சக்திகள் உண்டு. இவைகளுள் ராமாவதாரத்தில் ஸ்ரீதேவி என்னும் சக்தியைத்தான் சீதை என்னும் உருவில் அவர் மனைவியாக அடைந்தார். மற்ற இரு சக்திகளையும் அந்த அவதாரத்தில் அவர் அழைத்துவராமையால், அதைக் குறிக்கவே அவர் இருமாதரை என்று சொல்கிறார். இல்லையேல் இருமாதரை என்பதற்குப் பதிலாக மறுமாதரை என்றுதான் கவி பாடியிருப்பார்.''

இதைக் கேட்டோர் எல்லோரும் சுவாமிகளின் நுட்பமான அறிவைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

ஞானியார் சுவாமிகளுக்கு நல்ல ஞாபகசக்தி உண்டு. ஒரு முறை சந்தித்து அளவளாவிய அன்பர்

ஒருவரை இருபது, முப்பது ஆண்டுகளுக்குப் பின்னரே பார்க்க நேரிட்டாலும், அவ்வன்பர் தம்மைச் சுவாமிகளுக்கு ஞாபகம் இருக்குமோ என்று எண்ணமிட்டிருக்கையில், அவரை முதலில் தாம் சந்தித்த காலம், இடம், அப்போது அவர்கள் சம்பாஷித்த விஷயங்கள் முதலியவற்றை எடுத்துரைத்து, அவருக்குப் பேராச்சரியத்தை உண்டுபண்ணுவார். இத்தகைய ஞாபகசக்தியை என்னுடைய அநுபவத்தில் இன்னும் இரு பெரியார்களிடத்தில்தான் நான் கண்டேன். அதாவது, தற்போதைய காமகோடிமடத்துப் பீடாதிபர் அவர்களிடத்திலும், காலஞ்சென்ற தமிழ்ப்பேராசிரியர் உ. வே. சாமிநாதையரிடத்திலுமே.

தங்கள் மடத்துக்கு வரும் ஒவ்வொருவரையும் விரிவாகக் குசலப்ரச்னம் செய்யும் பண்பு ஞானியார் சுவாமிகளுக்கு உண்டு. இதில் அவர் ஏழையென்றோ, செல்வரென்றோ, படித்தவர் என்றோ, பாமரர் என்றோ, ஒருவித வித்தியாசமும் காட்டுவதில்லை. இதனால் இவருடைய சிஷ்யர்கள் அனைவருக்குமே இவரிடத்தில் ஒரு விசேஷ அன்பு ஏற்பட்டிருந்தது.

இப்பெரியார் தமிழில் தமக்குள்ள ஆர்வத்தை மடத்தின் அன்றாட நடைமுறையிலும் காட்டினார். உதாரணமாக, மடத்தில் உள்ள செயலாளர், அங்கே அடிக்கடி சென்று பழகுவோர் எல்லோருக்கும் தமிழ்மணம் கமழும் அடைமொழிகளே விளிக்கும் பெயர்களாக அமைந்திருக்கும். ஒருவர், 'கோவலடிகள்'. இன்னொருவர், 'விவகாரத் திருவருள்'. மற்றுமொருவர், 'பெரிய திருவருள்'. இப்படியே, 'இனிய திருவருள்', 'அணுக்கத்துத் தொண்டர்', 'மாறன் வள்ளலடிமை', 'கலாமிர்தகவி', 'வாகீசர் அடிமை' என்னும் அழகிய புனைபெயர்களால் அழைக்கப்பட்டோரும் உண்டு. தமிழன்புடன் சைவப் பற்றும் சேர்ந்ததன் பயனாக, மடத்தில் இவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போதெல்லாம், 'மகாதேவா' என்று கூறியே பேச்சைத் தொடங்குவார்கள்.

ஞானியார் சுவாமிகள் பேச்சில் சிலேடை என்னும் அணி நிரம்ப விரவியிருக்கும். அதனால் பேச்சு ஒரு சமத்

காரம் அடையும். அவருடைய சிலேடைக்கு உதாரண மாகச் சில சம்பவங்கள் குறிப்பிடத்தக்கன.

ஒரு சமயம் இவருடைய மடத்துக்கு வந்திருந்த ஒருவர் எண்ணெய் தேய்த்துக்கொள்ள இருந்தார். அதைச் செய்விக்க மடத்தில் திருப்பணி செய்யும் ஆட்களுள் ஒருவன் ஒரு கிண்ணத்தில் எண்ணெயை எடுத்துக் கொண்டு அவரிடம் வந்தான். தமிழில் நல்ல பயிற்சியுள்ள அவர் சுவாமிகளை நோக்கி, "அவன் இருகையோடு வந்திருக்கிறானே, நான் எப்படி சுவாமி எண்ணெய் இட்டுக்கொள்வது?" என்று கூறினார். அருகிலிருந்த சுவாமிகளிடம் பாடம் கேட்டுக்கொண்டிருந்த மாணவர்கள் இதன் பொருளை அறியாமல் திகைத்தனர். இதைக் கவனித்த சுவாமிகள் அவர்களை நோக்கி, "அவர் எண்ணெய் இட்டுக்கொள்ள இருகை போதாதாம், பலகை வேண்டுமாம்" என்று சிலேடையாகச் சொல்லி, எண்ணெய் தேய்த்துக்கொள்கையில் இருக்க ஒரு மணைப் பலகை கொணருமாறு கட்டளையிட்டார். சிலேடையைக் கேட்டு மாணவர்கள் மகிழ்ந்தனர்.

இன்னொரு நாள் பாடம் நடக்கையில் தபாலில் அன்று வந்த கடிதங்கள் சுவாமிகளிடம் கொடுக்கப் பட்டன. அவைகளுள் ஒன்றில் கறுப்புப்புள்ளி இட்டிருந்தது. அதைப் படித்துப் பார்த்துவிட்டுச் சுவாமிகள் ஒரு நபரைப் பெயரினால் குறிப்பிட்டு, "இருந்தாரானார்" என்று சொன்னார். இது மாணவர்களுக்குள் ஒரு பரபரப்பை உண்டாக்கிற்று. அக் கடிதத்தின்மேல் இருந்த கறுப்புப் புள்ளியினால் அது ஓர் இழவோலை என்று ஊகித்துக்கொண்ட அந்த மாணவர்கள், "இறந்தாரானார்" என்று சொல்வதற்குப் பதிலாக சுவாமிகள் "இருந்தாரானார்" என்று சொல்லிவிட்டாரே; வாய் தவறி வந்த பிழையோ இது?' என்று கலக்கங்கொண்டவரா யிருந்தனர்.

வேண்டுமென்றே அப்படிச் சொன்ன சுவாமிகள் மாணவர்கள் திகைப்பதைக் கண்டு, அவர்களைப் பார்த்து, "அவர் முன்னொரு காலத்தில் இருந்தார் என்று சொல்லத்தக்க நிலையை அடைந்தார்" என்றே தாம்

குறித்ததாக விளக்கினார். இந்த நுட்பமான சிலேடையை எல்லோரும் பாராட்டி அநுபவித்தனர்.

ஒரு முறை இவர் திருப்பாதிரிப்புலியூருக்கு அருகே உள்ள திருவகீந்திரபுரம் என்னும் வைஷ்ணவ ஸ்தலத்தில் 'மார்கழித் திங்கள்' என்னும் ஆண்டாள் பாசுரத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். தம் பேச்சில் இடையிடையே வைஷ்ணவ பரிபாஷையையும் கலந்ததனால் பெருமகிழ்ச்சி கொண்ட அவ்வூரார் அவருக்கு ஒரு மாலையைச் சூட்டினர். வழக்கத்துக்குச் சற்று அதிகமாகவே மாலை நீண்டிருந்தது. அதைக் குறிக்கப் பிரசங்கம் முடிந்தவுடன், சுவாமிகள், "நான் இன்று நெடுமாலை அடைந்தேன்" என்றார். இதிலுள்ள சிலேடையை எல்லோரும் மெச்சினர்.

வேறு ஒரு முறை இவர் நோய்வாய்ப்பட்டிருக்கையில் உடனிருந்து இவருக்கு வேளைக்கு மருந்தும் ஆகாரமும் கொடுத்து ஒரு பக்தமணி சுசுரூஷை செய்துகொண்டிருந்தாள். ஒரு நாள் இரவு மருந்து கொடுக்கப்படவில்லை. மறுநாள் சுவாமிகள் அதைப்பற்றி அவ்வம்மையை வினவுங்கால் அவள், "இரவு அடிகள் குறட்டைவிட்டு நித்திரை செய்துகொண்டிருந்தமையால், அதனைக் கலைக்கக் கூடாதென்று எண்ணி அப்படிச் செய்துவிட்டேன்" என்றாள். அதைக் கேட்ட சுவாமிகள் சிலேடையையும் நகைச்சுவையையும் கலந்து, "நான் குறட்டின் மீதுதானே நித்திரை செய்துகொண்டிருந்தேன்? குறட்டை விட்டு எப்படி நித்திரை செய்திருக்க முடியும்?" என்று கேட்டார். அவ்வம்மையாரும் உடனிருந்த ஏனையோரும் இதைக் கேட்டு மகிழ்ந்தனர்.

இன்னொரு சமயம் தமிழில் சிறந்த நூலாசிரியரும், உரையாசிரியரும், சொற்பொழிவாளருமான ஒருவரைப் பற்றிச் சுவாமிகள் தம் உபந்நியாசத்தில் குறித்துப் பேச வேண்டி இருந்தது. அப்போது பேசவேண்டியிருந்தவரின் பெயரான ம. தி. பாநுகவி என்பதையே சிலேடை செய்து அடியில் கண்டபடி பேசினார்:

"இவர் பெயரிலேயே இவருடைய பெருமை முழுவதும் அடங்கியிருக்கிறது. அதாவது, மதி என்பது

சந்திரனையும், பாநு என்பது சூரியனையும், கவி என்பது சுக்கிரனையும் குறிக்கின்றன. இம்மூன்றும் களங்கமற்ற வெண் கிரகங்கள். அவற்றைப்போலவே இவரும் மாசு மறுவின்றி விளங்கினார்.''

தம் சுற்றுப்பிரயாணத்தில் சுவாமிகள் ஒரு சமயம் வட ஆர்க்காடு ஜில்லாவில் உள்ள கார்க்கூர் என்னும் குக்கிராமத்தில் தங்க நேர்ந்தது. அங்கே இவர் இறங்கியிருந்த விடுதியில் இரவில் நிதானம் தெரியாமையால் மேட்டிலிருந்து பள்ளத்தில் விழுந்து அதனால் கால் முறிந்து, நெடுநாள் தேக சிரமம் அடைந்தார். அது முற்றும் குணமடைந்தபின்பு இந்த நிகழ்ச்சியைக் குறிக்குங்கால், சிலேடையாகவும் சமத்காரமாகவும் இவர், "கார்க்கூர்" (அதாவது கார்+கு+ஊர்= மேகத்துக்கு இருப்பிடமான கிராமம்) என்று எண்ணி அங்கே சென்றோம். ஆனால், அது காற்கூறு (அதாவது கால்+கு+ஊறு=காலுக்குத் துன்பம்) தரும் என்பதை அறிந்திலோம்'' என்று சொல்லிப் பிறரை மகிழ்விப்பார்.

இவருடைய அன்றாட வாழ்க்கை மிகவும் சுறுசுறுப்பானது. காலை ஐந்து மணிக்கு எழுந்துவிடுவார். ஸ்நானத்தை முடித்துக்கொண்டு சிவபூஜை செய்வார். பிறகு தினசரிகளைப் படிப்பார். அதற்குள் ஏழு மணி ஆகிவிடும். மாணவர்கள் தங்கள் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பாடம் கேட்க வந்து கூடிவிடுவார்கள். கடவுள் வாழ்த்துடன் ஆரம்பமாகிப் பத்துப் பதினோரு மணி வரையில் பாடம் சொல்லிக்கொடுப்பார். பின்பு பகல் உணவு. அதற்குப் பின் சற்றுநேரம் களைப்பாறுவார். ஒரு மணியிலிருந்து இரண்டு மணி வரையிலும் கிறிஸ்துவ கன்னிகாஸ்திரீகள் கூட்டம் ஒன்று வந்து இலக்கண பாடம் கேட்கும். மாலையில் சொற்பொழிவு நடக்கும். உபந்நியாஸங்கள் இல்லாத நாட்களில், மாலையில் தனித்த சிலருக்குச் சைவசித்தாந்தப் பாடம் நடக்கும். இது இரவு ஒன்பது மணி வரையில் நடைபெறும். இம்மாதிரி இவர் வாழ்க்கையில் சதா செயலையேதான் காணலாம்.

தமிழ் நாட்டுக்கு இப்பெரியார் செய்துள்ள தலை சிறந்த தொண்டுகளில் ஒன்று, பல மாணவர்களைத் தமிழில் தம்மைப்போல் பிரசங்கிக்கப் பழக்கியதுதான். அத்தகைய மாணவர்களுக்குள் பிரபலமாக விளங்கியவர் திருக்கோவலூருக்கு அருகே உள்ள மணம்பூண்டி என்னும் கிராமத்தைச் சேர்ந்த ம. ரா. குமாரசாமி பிள்ளை என்பவர். இவர் தம் குருவின் புகழைப் பரப்பிய பெருந்தொண்டைக் கண்ட பலர் இவரைப் புகழும்போது, விவேகானந்தர் ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்குச் செய்த தொண்டைப் போன்றது இது என்பர். சுவாமிகளின் ஏனைய சீடர்களுள் ஒருவர் திருவெண்ணெய்நல்லூர் வடிவேல் முதலியார் என்பவர். இவர் பல்லாண்டுகள் திருக்கோவலூர் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் தமிழ் ஆசிரியராக இருந்தார். இவர் சமீபத்தில் ஞானியாரின் வாழ்க்கையைப்பற்றி ரஸமான ஒரு விரிந்த வரலாறு எழுதிப் பேரும் புகழும் அடைந்திருக்கிறார்.

இவர் தலைமை வகித்த மடம் ஒரு சைவசித்தாந்த மடமான போதிலும், இவருக்குப் பரந்த சமரஸ நோக்கம் உண்டு. பிற சமயங்களை இவர் எப்போதும் மதிப்பார். தம்முடைய மதந்தான் எல்லாவற்றையும் விடச் சிறந்தது என்ற குறுகிய எண்ணம் இவரிடம் இல்லை. இவ்வரிய கொள்கையைப் பிறருக்குத் தெளிவாக எடுத்துக்காட்டியதும் இவர் வாழ்க்கையில் நடந்தது மான சந்தர்ப்பம் ஒன்று இங்கே குறிப்பிடத் தக்கது. அது வருமாறு:

சோழநாட்டிலுள்ள கிராமங்களுள் ஒன்றாகிய வடமட்டம் என்னும் ஊரில் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் ஒரு கூட்டம் நடந்தது. அதில் நம் சுவாமிகள் தலைமை வகித்தார். அப்போது, 'பிற மதம் புகுந்தோர் மீண்டும் சைவசமயத்தில் சேர விரும்பினால் அவர்களைச் சேர்த்துக்கொள்ளலாமா, கூடாதா?' என்னும் விஷயம் விவாதத்துக்கு வந்தது. அதற்கு எதிர்ப்புக் கடுமையாக இருந்தது. கடைசியில், 'அத்தகையோரை முதல் முறை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் மீண்டும் பிறமதம் புகுவரேல் அப்புறம்

அவர்களைக் கட்டுடன் சேர்க்கக் கூடாது' என்ற அபிப்பிராயம் நிறைவேறிற்று. விவாதம் ஓய்ந்த பின் தலைவர் தம்முடைய முடிவுரையில், "திருவதிகையில் பிற மதம் புகுந்த தம் தம்பியாரைத் திலகவதியார் பஞ்சாக்ஷரத்தைக் கூறித் திருநீறு அளித்து மீண்டும் சைவராக்கினார். ஆனால் நாமோ இன்று இவ்விஷயத்தைப்பற்றிச் சர்ச்சை செய்கிறோம்" என்று சொன்னதும் எதிர்த்து வாதாடியவர்கள் தங்கள் குறுகிய மனப்பான்மையைக் குறித்து வெட்கித் தலை குனிந்தனர்.

ஒரு சமயம் தமக்கு எதிர்ப்பிரசாரம் செய்த ஒருவரைத் தாக்கிய தம் பக்தர் ஒருவரை இவர் கடிந்து,

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்னும் குறள் போதனையை அவருக்கு வற்புறுத்தினார். இவரிடம் அன்பர்கள் கொண்ட மதிப்பை இது பன்மடங்கு ஓங்கும்படி செய்ததுடன் இவருடைய பொறுமையையும், விரோதிகளிடம் இரக்கம் காட்டும் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டியது.

எல்லா மதங்களும் இறைவனுக்குச் சம்மதமே என்ற மேன்மையான கொள்கையைக் கொண்ட நம் சுவாமிகள் கிறிஸ்தவர் அடங்கிய கூட்டத்திலும், வைஷ்ணவர் முன்னிலையிலும் சமரஸ நோக்குத் ததும்பும் சொற்பொழிவுகள் செய்திருக்கிறார். இதைக் கண்டு இவருடைய சிஷ்ய கோஷ்டிகளுள் எவருக்கேனும் மனக்கொதிப்பு உண்டானால், அவருக்கு,

"எந்நிலையில் நின்றாலும் எவ்வேடங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொருளன்றே"

என்பதை இவர் எடுத்துச் சொல்லுவார்.

எனவே இவரைக் குருவெனக் கருதிப் பக்தி செய்தவர்களுள் வைணவரும் கிறிஸ்தவரும் மகம்மதியரும் இருந்தனர் என்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை.

"நம் பண்டை நூல்கள் ஆசையை அறுக்கும் தன்மை வாய்ந்தன. இப்போதோவெனில் ஆசையைப் பெருக்கும்

புத்தகங்களே தோன்றுகின்றன" என்றும், "அறஞ்செய விரும்பு என்பன போன்ற ஒழுக்க நீதிகளைக் கற்பித்துத் தொடங்கியது முற்காலத்திய கல்வி; ஆனால் இப்போதோவெனில், 'காக்கை கருமை நிறம்' என்னும் அறிவைப் போதித்து ஆரம்பிக்கிறது நம் கல்வி" என்றும் எடுத்து விளக்கித் தற்போதைய கல்வி முறையை இவர் கண்டனம் செய்வார்.

இவருடைய சொற்பொழிவுகளிலிருந்து இவருக்கு ஆராய்ச்சி மனப்பான்மையும், நுண்ணறிவும் உண்டு என்பது தெளிவாக விளங்கும். திருக்குறளும், தொல்காப்பியமும், திருக்கோவையும் விஷயங்களைத் தெளிவுபடக் கூறும் நூல்களுக்குள் தலை சிறந்தவை என்று இவர் வலியுறுத்துவார். இல்லறவியலின் ஈற்றில் 'புகழ்' என்னும் அதிகாரத்தை வள்ளுவர் வைத்திருப்பது, தம்மைப்பற்றிப் பிறர் புகழ வேண்டுமென்று மனிதருள் பெரும்பாலோர் கருதுவார்கள் என்னும் உண்மையை எடுத்துக்கூறவே என்று இவர் சொல்லுவார். குறளின் முதற்பாட்டின் முதலெழுத்தும் கடைசிப் பாட்டின் கடைசி எழுத்தும் நம் பாஷையின் நெடுங்கணக்கின் முதலெழுத்தும் ஈற்றெழுத்தும் ஆகும் என்று இவர் எடுத்துக்காட்டுவார். இதைப்போலவே இறையனார் அகப்பொருளிலும், முதல் சூத்திரத்தின் முதல் எழுத்தும், ஈற்றுச் சூத்திரத்தின் கடைசி எழுத்தும் முறையே அகரமாகவும் னகரமாகவும் அமைந்திருத்தலையும் இவர் பாராட்டுவார். ஆங்கிலம் முதலிய பாஷைகள் வீர உணர்ச்சியை உண்டாக்குகின்றன. நம் தமிழ்மொழியோவெனில், அன்புணர்ச்சியைப் பெருக்குகிறது என்பது இவர் எடுத்துக்காட்டும் மற்றோர் உண்மை.

விஷயங்களின் நுட்பங்களை எடுத்துரைக்கையில் இவர் கைக்கொள்ளும் யுக்திகள் பல. அவற்றுள் நீதிக் கதையால் விளக்கல், உபமானத்தால் விளக்கல், சம்பவங்களின் உதவியால் விளக்கல் என்பன சில. இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் இங்கே குறிப்பிடத் தக்கது.

தொன்றுதொட்டு மடத்தில் அநுசரிக்கப்பட்டு வரும் வழக்கப்படி சுவாமிகள் தம் சுற்றுப்பிரயாணங்களில் சிவிகையிலேயே செல்வர். இவ் வழக்கத்தை விட்டு விட்டு மோட்டாரில் செல்லும்படி ஓர் அன்பர் சுவாமிகளை வற்புறுத்தினர். நேர்முகமாக அவருடைய வேண்டுகோளை மறுதளித்தல் அநுசிதம் என்று எண்ணிய சுவாமிகள் தம் கருத்தை ஒரு நீதிக்கதையின் மூலம் தெரிவித்தார். அவர் சொன்ன கதை இது:

கிழ அரசன் ஒருவனைக் கொன்று பட்டத்தைக் கைப்பற்ற அவ்வரசனின் மகன் தக்க சமயத்தை எதிர் பார்த்திருந்தான். அவ்வூரில் அழகியவளும், ஆடல் பாடல் களில் சிறந்தவளுமான ஒரு மகளை அடைய ஒரு சந்நியாசி விரும்பினர். அவள் சம்மதத்துடன் அதற்கு ஒரு நாளும் குறிப்பிடப்பட்டது. இதற்கிடையில் நித்திரையை இழந்த கிழ அரசன் அம்மாதின் நடனம் ஒன்றை ஏற்பாடு செய்தான். இரவு முழுவதும் ஆடிக் களைத்த தால் அவள் நடனத்தில் சோர்வு ஏற்பட்டது. ஆனால் அரசன் ஆணையின்றி அதை நிறுத்தவும் முடியவில்லை. இந் நிலையில் அவளுடன் வந்த நட்டுவன், ''இதுவரையில் வாங்கிய நல்ல பெயரை இனி இருக்கும் சொற்ப காலத்திலும் இழக்காமல் காப்பாற்றிக்கொள்'' என்று சொல்லி உத்ஸாகம் ஊட்டினன். அவளும் விடாமல் தன் கடமையைச் செய்தாள். நட்டுவனின் பேச்சைக் கேட்டு மூவர் திருந்தினர். அரசன் அதுகாறும் அம் மாதைத் துன்புறுத்தியதை நினைந்து வருந்தி நடனத்தை நிறுத்தச் சொன்னன். அரசகுமாரன் தன் தந்தையைக் கொல்லும் எண்ணத்தை விட்டான். சந்நியாசியும் பொதுமகளிடம் தனக்குள்ள இச்சையைப் போக்கிக் கொண்டார். அதைப்போலவேயே, எம் முன்னேர் சென்ற வழியை விட்டுப் பிறழ எனக்கும் மனமில்லை என்று சொன்னர்.

ஒரு முறை தமிழ்மொழியில் குறை உண்டு என்று பிறர் கூறுவதைக் குறித்து இவர், ''தான் போக வேண்டிய வழியை விட்டுத் தவறிய ஒருவன், 'வழி தவறிவிட்டது' என்று சொல்லித் தன் பிசகை வழியின்மேல் ஏற்றுவது

போல் இருக்கிறது இது'' என்றார். உபமானத்தால் விளக்குவதற்கு இது ஓர் உதாரணம்.

ஒரு சமயம் தமிழர்கள் தங்கள் தாய்மொழிக்குச் செய்ய வேண்டிய கடமையை வற்புறுத்த வந்த இவர், ஒரு சம்பவத்தைச் சொல்லி அதன் மூலம் விளக்கினார். தமிழைத் தவிரப் பதின்மூன்று வேறு மொழிகளைக் கற்றறிந்த ஒருவர், நோயுற்றிருக்கையில் பக்தி ரஸம் வாய்ந்த சில தமிழ்ப்பாட்டுகள் பாடக் கேட்டு அதன் மூலம் கடவுளிடம் மனம் ஈடுபட்டு, அதனால் தம் நோய் நீங்கக் கண்டு, அந்த நிகழ்ச்சியைப்பற்றிப் பத்திரிகையிலும் எழுதிக் கொண்டாடினாராம். ஆகையால் தமிழுக்கு அந்நியரான ஒருவருக்கே இத்தகைய பற்று இருந்தால், தாய்மொழி தமிழாயுள்ள நாம் எப்படி இருக்க வேண்டும் என்று கூறினார்.

இவரிடம் காணப்படும் சமயோசித புத்தி பாராட்டத்தக்கது. ஒரு சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவில் இவர் தலைமை வகிக்கையில் அச் சங்கத்தின் கையிருப்புப் பொக்கிஷம் சில அணாக்களே என்பதைக் குறித்து இவர், ''பணம் குறைந்தால்தான் செயலாளர்களின் சுறுசுறுப்பு அதிகரிக்கும். எனவே இதுவும் ஒரு நல்லதுதான்'' என்று கூறி, அந்தக் குறையையும் ஒரு குணமாகப் பாராட்டினார்.

இவருக்கு இயற்கையாகவே உள்ள அறிவு எந்த அரிய சந்தேகத்தையும் தீர்க்க வல்லது. சுந்தரமூர்த்தி நாயனார் தம் பாடல் ஒன்றில் தம்மை, 'அல்லியந் தாமரைத்தார் ஆரூரன்' என்று குறித்திருப்பது தமக்கு விளங்கவில்லை என்று ஓர் அன்பர் இவரிடம் தெரிவித்துக்கொண்டார். சுவாமிகள் உடனே, ''தாமரைப் பூமாலையைத் தமக்கு உரியதாகச் சொன்னது தாம் பிராம்மணர் என்பதைக் குறிக்கும்'' என்று சொல்லி, ஒவ்வொரு ஜாதிக்கும் ஓர் அடையாளப் பூ உண்டு என்றும், பார்ப்பனருக்குத் தாமரை இருப்பதுபோல் வைசியருக்கு முல்லைப் பூ உண்டு என்பதை, 'முல்லையந்தார் வணிகனிவன்' என்ற திருவிளையாடல் மேற்கோளினால் விளக்கினார்.

இவ்வளவு அரிய குண விசேஷங்கள் பொ
ஞானியார் சுவாமிகள், எனக்குத் தமிழில்
ஏற்படுத்திய ஐவருள் நடுநாயகமாக அமைந்த
பாக்கியமே. திருக்கோவலூரார்ப் பள்ளிக்கூடத்தில்
ஆசிரியராக இருந்த ரங்கநாதாசாரியார், அப்ப
லேயே என்னுடன் கல்வி பயின்றவரும் என்
சிநேகிதருமான சிறுமதுரை தேவாசாரி, மயில
பி. எஸ். ஹைஸ்கூலில் என்னுடன் கல்வி பயின்ற
கார்காத்த வேளாளர் மரபைச் சேர்ந்தவருமான
வி. சம்பந்த முதலியார், கம்ப ராமாயண ஆராய்ச்சி
பிரசங்கத்திலுமே தம் வாழ்நாள் முழுவதையும்
மோகனூர் வி. கோவிந்தராஜ ஐயங்கார் என்
அவ்வைவருள் ஏனைய நால்வர்.

இவ்வரிய முறையில் தமிழுக்கும் சைவத்
53 வருஷங்கள் தொண்டு செய்தபின், பழநி எ
முருகப் பெருமான் தலத்துக்கு ஏழு மைல் தூரத்தி
சிந்திலவாடன்பட்டி என்னும் ஊருக்கு அருகில் ஆ
கணக்குப்படி 1-2-1942-இல் இவருடைய ப
ஆவி பூத உடலை விட்டு நீங்கிற்று. அன்று காலை
கின் மேல் அமருகையில், "ஷண்முகா" என்று செ
தும், உடனிருந்தோரிடம், "உடல்நிலை குணமில்
அரங்கசாமி முதலியாருக்கு அறிவியுங்கள்" என்
சுவாமிகளின் இறுதிச் சொற்கள். அவருடைய
மறைந்தபோதிலும், அவர் செய்திருக்கும் மா
தொண்டுகள் என்றும் அழியாப் புகழை அவ
தேடிக் கொடுத்திருக்கின்றன. உலகம் உள்ள அ
தமிழும் சைவமும் அவரை மறக்கவே முடியாது.
இரண்டும் அவருக்கு அத்தனை கடன்பட்டுள்ள

முதற் பாகம் முற்றிற்று